# சைவ விளக்கு

பலாலி ஆசிரிய கலாசா




சைவ மாணவர் மன்றம்

நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# சைவ விளக்கு

6

5974

**சைவ மாணவர் மன்றம்,**

பலாலி ஆசிரிய கலாசாலை,

வசாவிளான்.

**1971**

# சைவ விளக்கே....!

* ● *

வையத்து வாழ வழிசெய்த வான்புகழ் சைவநெறி
உய்யும் வழிபல ஓதிடும் உண்மையை ஒண்டமிழில்
மெய்யாய் உரைத்திந்த மேதினி யெங்கும் விழிப்படையச்
செய்யச் சுடரும்நற் சைவ விளக்கே தழைத்திடுக.

★

பொய்யும் புரட்டும்புன் போலியும் பேசிப் புதுமையென்று
செய்யும் பலவிதழ் செத்து மடிந்திடச் சீர்மைகுன்றுச்
சைவ விளக்கே தனிப்புகழ் கொண்டு தரணியெல்லாம்
சைவம் வளரத் தமிழ்மணம் வீசித் தழைத்திடுக.

★


பண்பைப் பெருக்கும் பலாலியிலே பயில் ஆசிரியர்
அன்பெனும் நெய்யிட்டு ஆர்வத் திரியி லறிவுக்கனல்
இன்பமாய்க் கூட்டி எழிற்சுட ரேற்றினர் என்றுமுயர்
குன்றிடைத் தீபமாய் என்றும் ஒளிர்க குவலயத்தில்.

★

அன்று தமிழ்மறை கண்ட பெரியோர் அறப்பணியை
இன்றும் தொடர்ந்தது என்றும் விளங்கிட ஏற்றிவைத்தோம்
கத்தன் மலையிற் கவின்சுடர் வீசும் விளக்கதுபோல்
என்றும் மனஇருள் தன்னை அகற்றி இலங்கிடுக.

அ. தில்லைநாயகம்,
வணிகம் முதலாண்டு.

நூலகப் பிரிவு
நூலக



கலைமகள்

ஓவியம்: திரு. நா. வல்லிபுரம்
(ஆங்கிலம் இரண்டாம் வருடம்)

ஸ்ரீ: குலசேகரநிலயம்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



# சைவ மாணவர் மன்றம் 1971

போஷகர்:

உயர்திரு. பண்டிதர் க. சச்சிதானந்தன்

தலைவர்;

திரு. த. தேவராஜா

உப தலைவர்:

திரு. சி. சுந்தரலிங்கம்

செயலாளர்:

திரு சு. தில்லையம்பலம்

உப செயலாளர்:

திரு. ச. சர்வேஸ்வரன்

பொருளாளர்:

திரு. இ. சிவானந்தநாயகம்

செயற் குழு:

| | |
|---|---|
| திரு. சி. மகேந்திரநாதன் | திரு. த. நமநாதன் |
| ,, ஏ. எம். ஜெயபாலன் | செல்வி க. சேனுதிராசா |
| ,, கே. என். பாஸ்கரதாசன் | ,, ந. இரத்தினசிங்கம் |
| ,, கு. குலசிங்கம் | ,, ப தம்பையா |

# சைவ விளக்கு

ஆசிரியர்:

**கே. எஸ். பாஸ்கரதாசன்**

நிர்வாக முகாமையாளர்:

**த. இந்திரராசா**

ஆசிரியர் குழு

திரு. க. சிவராமலிங்கம்
,, க. வ. இராசலிங்கம்
,, எஸ். ஜெயராசா
திருமதி லலிதா நவரட்ணராசா



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



## ஆசியுரை

*பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்*

"ஒன்றேடொன்று மாறுபடுகின்ற சமயம் அத்தனையும் இருப்பது நீதியே" என்ற முடிபை ஒப்புக்கொண்டு, ஒப்புக் கொண்ட அதனுலே அவ்வச்சமயமாய், அதேசமயத்தில் அவற்றின் வேறுமாய் இருப்பது மெய்ச்சமயம். இவ்வியல்பு அதன் தனிச்சிறப்பு.

ஆன்மா இந்தச் சரீரமாய் அதேசமயத்தில் சரீரத்தின் வேறுமாயிருக்கின்றது.

கடவுள் ஆன்மாக்களாய் அவற்றின் வேறுமாயிருக்கின்ருர்.

மெய்ச்சமயம், எல்லாச் சமயமுமாய் வேறுமாயிருக்கின்றது.

"இப்பரிசாஞ் சமயமுமாய் அல்லவாகி"
என்பது தாயுமானவர் வாக்கு.

[இப்பரிசு — ஒன்றேடொன்று மாறுபடும் இயல்பு]

"சைவ விளக்கு"

மேலே குறிப்பிட்டவைகளை விளக்கஞ்செய்து
மெய்ச்சமயத்தின்
தாய்மையைப்
பிரகாசிப்பதாக......

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# அதிபர் வாழ்த்து

பல்கலையும் பொலிந்திலங்கும் பலாலி ஆசிரிய கலாசாலை
இந்துமா மன்றம், எழிலுறு வகையிலே "சைவ விளக்கு"
என்னும் மலர் வெளியிடுவது குறித்து மகிழ்ச்சி
யடைகின்றேன். சென்ற ஆண்டு தொடக்கம்
இந்து மாணவரின் ஊக்கத்தின் விளைவாக
ஆக்கம்பெற்ற மலர்ப் பொய்கையிலே,
மலர்ந்து நறுமணம் கமழும்
இரண்டாவது மலராக இவ்வருடம்
வெளிவரும் இதனகத்தே சொற்சுவைமிகுந்த
பற்பல கட்டுரைகளும், கவிதைகளும் காட்சி
யளிப்பது கண்டு களிப்படைகின்றேன். சைவமணங்
கமழும் இச் சைவ விளக்கின் ஒளி உள்ளத்தில் ஊடறுத்து
உவகையையும், ஆத்ம திருப்தியையும் ஏற்படுத்தும்.
அவர்களின் ஆக்கப்பணி மென்மேலும் ஓங்க என் வாழ்த்துக்கள்.

ஜோ. ந. எட்வேட்,
அதிபர்,
பலாலி ஆசிரிய கலாசாலை,
வசாவிளான்.

எங்கள் அதிபர்



உயர்திரு ஜோ. ந. எட்வேட் அவர்கள்

# விளக்கினிலே......

1. சைவ விளக்கே...... ... ... ii
2. சைவ மாணவர் மன்றம் 1971 ... ... iii
3. சைவ விளக்கு ஆசிரியர் குழு ... ... iv
4. ஆசியுரை — பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் v
5. அதிபர் வாழ்த்து ... ... vi
6. விளக்கினிலே ..... ... ... vii
7. திருவடிக்கோர் விண்ணப்பம் ... ... viii
8. ஆசிரியர் கருத்து ... ... ix
9. சைவ மாணவர் மன்றம் 1971-ம் ஆண்டுக்குரிய அறிக்கை ... xi
10. கடவுள் வாழ்த்து ... ... xii
11. அப்பரெனும் சைவ விளக்கு ... ... 1
12. இதுதான் விறு ... ... 4
13. முத்தி வேண்டுமா, சித்தி வேண்டுமா? ... ... 7
14. வாகீசப் பெருந்தகை ... ... 12
15. அழகுத் தெய்வம் முருகன் ... ... 17
16. ஈழத்துச் சைவ சம்பந்தம் திருக்கைலாச ஞானசம்பந்த மயமானது ... 21
17. அருணகிரிநாதரும் அத்துவிதமும் ... ... 24
18. யாதும் அஞ்சோம் ... ... 27
19. சமய வாழ்வு (கவிதை) ... ... 29
20. சித்துக்கள் புரியும் சித்தாண்டிக் கந்தன் ... 30
21. விஞ்ஞான மாணவர்க்கு சமயக்கல்வி ... ... 32
22. இலங்கையில் சைவத்தின் எதிர்காலம் ... ... 35
23. திருவாசகத் தேன் ... ... 37
34. சைவசித்தாந்தமும் முப்பொருளும் ... ... 40
35. அம்பிகை அருள் ... ... 43
36. வள்ளி மணாளன் (கவிதை) ... ... 45
37. இந்துசமய மாத மகத்துவம் ... ... 46
38. மதங்கள் மண்ணிலே காலூன்ற வேண்டும் ... 50
39. நால்வர் காட்டிய நன்னெறி ... ... 52
40. Let there be poets ... ... 54
41. நன்றி நவிலல் ... ... 55

# திருவடிக்கோர் விண்ணப்பம்

நஞ்சுண்டீர் பாலகற்காய் நமன் நலிய உதைத்தீர்
நெஞ்சுண்ட அன்பருக்காய் நிலம் நடந்தீர்; வந்தி
கெஞ்சவுதிர் பிட்டுண்டு மண்சுமந்தீர்; அழுதால்
அஞ்சலென அருளுவீர் என்றதுவும் பொய்யோ.

●

திருநீறு புனைந்துமது சேவடிகள் பிடித்து
ஒருநீதி சைவமெனக் கிடப்பதுவும் பிழையோ
தருநீதி எமக்கெல்லாம் வேருகத் தாழ்வில்
ஒருசேரத் தள்ளுகின்ற அநியாயம் எதற்கோ.

●

உழைப்பினுக்கு உதைபெறுவேம்; கல்விகற்றும் வாவென்(று)
அழைப்பறியோம் சாமத்தின் அணையாத விளக்கில்
விழித்திருந்து படித்தெழுதி வெற்றிபெற்றும் போவென்று
இழித்திடுவார் பிழையறியோம்; எழுத்தஞ்சு புகன்ரும்.

●

ஆற்றலுளோம் கல்விபெற ஆதரவு காணும்
சேற்றிலுதை படுகின்ரும் செய்தபிழை உன்றன்
நீற்றழகு நெற்றியராய் நின்றகொன்றே; நீரோ,
போற்றுமடி யார்களையே கைவிடுவீர் போலும்.

●

புகுமிடங்கள் கதவடைப்பார் புண்டரத்தின் குறிகள்
மிகஇடுவோம் என்பதால் மேல்மிதித்து நிற்பார்
அகமுடல்கள் உருகியுனை வழிபடுவார் நெஞ்சம்
மிகஉடைய நெகிழ்க்கின்றீர் மின்சடையீர்! எதற்கோ?

— பண்டிதர் க. சச்சிதானந்தன்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

## போஷகர்



பண்டிதர் க. சச்சிதானந்தன்

# சைவ விளக்கு

மலர் 2 | பலாலி ஆசிரிய கலாசாலை, வசாவிளான் | 1971


## ஆசிரியர் கருத்து

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'' என்பது ஆன்றோர் வாக்கு: சான்றாண்மை தவறாது நன்னெறி வயப்பட்டு நல்வாழ்க்கை அமைக்க நல்வழி காட்டுவது சமயம்: உடல், உள, ஆத்மீக விருத்தியே கல்வியின் முக்கிய நோக்கம்: ஒருவன் பூரண வளர்ச்சியடைய வேண்டுமானால் இம்மூன்றிலும் விருத்தியடைய வேண்டியது அவசியம். அந்த வகையிலே ஆத்மீக வாழ்வின் அவசியத்தை விளக்கி, அறிவினைக் கொடுத்து, உய்வை ஏற்படுத்துவதில் சமயம் சிறப்பான இடம் வகிக்கின்றது என்பதை மறுக்க முடியாது:

சமய வளர்ச்சியில் பங்குகொள்வன சமய மன்றங்கள். அந்த ரீதியிலே பலாலி ஆசிரிய கலாசாலை இந்துமாமன்றம் ஆண்டுதோறும் பல சேவைகளை ஆற்றி வருவது மகிழ்ச்சிக்குரியதொன்றாகும். சமயநிகழ்ச்சிகளையும், விழாக்களையும் அவ்வப்போது சிறப்பான முறையிலே நடாத்தி வருகின்றது. இன்று இருநூற்றுக்கும் மேற்பட்டவர்களை தன் அங்கத்தவர்களாகக் கொண்டு திகழ்கின்றது இம்மன்றம்.

''கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அரெனின்'' என்பது வள்ளுவர் கருத்து. வருங்காலச் சந்ததியினர்க்கு அறிவு புகட்டப் போகும் ஆசிரியர்களாகிய நாங்கள் சமய வாழ்வில் ஈடுபாடு கொண்டிருக்க வேண்டியதவசியம். இவற்றையெல்லாம் மனதிற்கொண்டு பல சமயப்பணிகளில் ஈடுபட்டு வரும் எம்மன்றம் பத்திரிகை வெளியீட்டிலும் தன் கருத்தைச் செலுத்தியிருக்கிறது.

சென்ற ஆண்டு கன்னிமலராக, 'சைவ விளக்கு' ஆரம்ப வெளியீடு நிகழ்ந்தது: தொடர்ந்து அந்த மலர் வரிசையிலே இரண்டாவது மலராக பூத்துக் குலுங்குகிறது இச் சைவ விளக்கு. சமயப் பெரியோர்களினதும், ஆசிரிய மாணவர்களினதும் அறவுரைகள், அறிவுரைகள் அடங்கிய கட்டுரைகளும், கவிதைகளும் தாங்கிவரும் இம்மலர் உள்ளங்களை ஊடறுத்து நல்லொளி பரப்பும் என்று நம்புகின்றோம். மலரின் நறுமணம் அவற்றைப் படித்து சுவைக்கும் உங்களுக்குத் தெரியும். துள்ளுநடையிட்டுக்கொண்டுவரும் இளநங்கையென இரண்டாவது மலராக பவனி வருகின்றது இம்மலர். கள்ளங்கபடமறியா மெல்லிடை நங்கைபோல, கருத்துரைகள் தாங்கிவரும் இம்மலரில் குறைகளுண்டேல் அவை களைந்து குணம் கொள்ள வேண்டுகின்றோம். இதன்கண் அமைந்துள்ள அம்சங்கள் ஒளியுள்ள வாழ்வைக் காட்டும் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகின்றேன்.

வணக்கம்

— ஆசிரியர்

# சைவ மாணவர் மன்றம்

## 1971-ஆம் ஆண்டுக்குரிய அறிக்கை

சைவ மாணவர் மன்றத்தின் 1971-ஆம் ஆண்டுக்குரிய அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இறைவனருளாலும், மன்றத்தின் சகல அங்கத்தினரது பூரண ஒத்துழைப்பாலும், மன்றத்தின் போஷகர் பேராசிரியர் க. சச்சிதானந்தன் அவர்களுடைய கடும் உழைப்பு, விடாமுயற்சி என்பவற்றினலும் மன்றத்தின் வருடாந்த கைங்கரியங்கள் யாவும் சிறப்புடன் நிறைவேற்றப்பட்டன;

**வெள்ளிக்கிழமைப் பூசைகள்:-** நீண்ட விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் வந்த வெள்ளிக்கிழமைகளில் பூசையும் ஆராதனைகளும் கிரமமாகவும், ஒழுங்காகவும் பக்திப் பாடல்களுடன் நடந்தேறின;

**தைப்பொங்கல்:-** உழவர் திருநாளாம் தைப்பொங்கலைச் சிறப்பான பொங்கல் பூசையுடன் கொண்டாடினேம்.

**சிவராத்திரி:-** அன்று மாலை எமது ஆலயத்தில் விசேட பூசையுடனும் ஆராதனையுடனும் விழா ஆரம்பமானது. பின்பு சினிமா மண்டபத்தில் இன்னிசைக் கச்சேரிகள், சொற்பொழிவுகள், நாடகம் பஜனை முதலியன காலைவரை நடைபெற்றன.

**ஆனி உத்தர விழா:-** எமது மன்றத்தினுல் வருடாவருடம் கொண்டாடப்பட்டுவரும் இவ்விழாவை இம்முறையும் சகல அங்கத்தவர்களும் கீரிமலைச் சிவன் கோவிலுக்குச் சென்று விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடினேம். அன்று காலை தொடக்கம் எம்மன்ற அங்கத்தினர்களாலேயே அன்னதானத்திற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டு மதிய போசனம் இனிதே நடைபெற்றது.

**ஆடிப் பிறப்பு:-** என்றும் இல்லாதவாறு ஆடிப்பிறப்பை விசேஷ ஆடிப் பொங்கற் பூசையுடன் இம்முறை கொண்டாடினேம்.

**நவராத்திரி விழா:-** சென்ற வருடத்திற்கும் இவ்வருடத்திற்கும் உரிய நவராத்திரி விழாவை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பயிற்சியினர் நடாத்தினர்; அத்தோடு ஒருநாட் பூசையைப் பேராசிரியர்களும், இன்னெருநாட் பூசையைக் கல்லூரித் தொழிலாளர்களும் நடாத்திச் சிறப்புறச் செய்தனர். இறுதிநாளன்று எல்லோரும் சேர்ந்து விமரிசையாகக் கொண்டாடினேம். இரவில் தவில் கச்சேரி, சங்கீதக் கச்சேரி, பிரசங்கம் முதலியனவும் நடைபெற்றன.

**சைவ விளக்கு:-** எமது சங்கச் சஞ்சிகையான சைவ விளக்கை அச்சேற்ற உதவிய சகலருக்கும் எமது நன்றி. அதன் ஆசிரியர் திரு. பாஸ்கரதாசனின் முயற்சிகளுக்கு எமது பாராட்டுக்கள். கவிதைகள், கட்டுரைகள் தந்து எம்மை ஊக்குவித்த சைவப் பெரியார்களுக்கும் எமது நன்றி.

**நன்றியுரை:-** எமது மன்றம் கேட்டபோதெல்லாம் அனுமதியும் இடவசதியும் தந்த எமது அதிபர் அவர்கட்கு எமது மன்றம் நன்றிசெலுத்துகிறது. எமது மன்றத்தின் வளர்ச்சியிலேயே கண்ணும் கருத்துமாக இருந்துவரும் பேராசிரியர் க. சச்சிதானந்தம் அவர்களுக்கு நாம் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறோம். விழாக்கள், கொண்டாட்டங்கள் நடைபெறும் வேளைகளில், எமக்குத் தேவையான உதவிகளை உடனுக்குடன் தந்துதவிய விடுதி மேலதிகாரி திரு க. சிவயோகநாதன் அவர்கட்கும் எமது நன்றி. எமது மன்றத்தின் விழாக்களைச் சிறப்பிக்க அல்லும்பகலும் உழைத்த தலைவர் திரு. த. தேவராஜாவுக்கு எமது சங்கச் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றேன். மன்றத்தின் பூசகராக இருந்து மிகவும் கடமையுணர்ச்சியுடனும் ஒழுங்காகவும் பூசைகள் நடாத்திவைத்த திரு. ஐ. எம். ஜெயபாலன் அவர்கட்கு எமது உள்ளங் கனிந்த நன்றி. ஈற்றில் எமது மன்ற அங்கத்தவர்கள் எல்லோருக்கும் கரம் கூப்புகிறேன்.

வணக்கம்.

**சு. தில்லையம்பலம்,**
செயலாளர்.



## கடவுள் வாழ்த்து

அருவா யுருவா யருவுருவாய் நிற்கும்
ஒருவனே தெய்வ முணர். 1

அந்தமு மாதியு மில்லா வொருவனே
சிந்தையுலுஞ் நிற்குந் தெரி. 2

ஆருயிர் தோறு மதுவதுவாய் நின்றருளுஞ்
சீருடையா னேஎங்கள் தேவு. 3

இருப்பு நெருப்புப்போ லெவ்வுயிரி னுள்ளும்
இருக்கு மிறைவன் இயம்பு. 4

இல்லையுண் டென்னு மியல்புடையான் காணவனே
தொல்லையுளா னென்று துணி. 5

இம்மை மறுமைக் கிறைவ னொருவனெனத்
தம்மையுணர்ந் தார்சொன்னர் தாம். 6

கல்லார்கற் றூர்க்குங் கடவுளொன் றுண்டென்று
நல்லா ருரைத்தார் நடு. 7

பிறப்பிறப் பில்லாப் பெருமானே யெங்கள்
சிறப்புடைத் தெய்வமெனத் தேர். 8

அறிவுக் கறிவாகி யங்குமிங்கு மெங்கும்
செறியுமொன் றேஎமக்குத் தேவு 9

பெருமை சிறுமையில்லாப் பெம்மானே எங்கள்
அருமையுடையதெய்வ மாம். 10

# அப்பரெனும் சைவவிளக்கு

பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள்

## பல்லவர் காலப் பக்திப் பெருக்கம்:-

நித்தலும் எம்பிரான் கோயிலுக்குப் போதல், பொழுது புலரமுன் கோயிலைக் கூட்டி மெழுகுதல், பூமாலை புனைதல், புகழ்ந்து பாடுதல், வீழ்ந்தெழுந்து அஞ்சலி செய்தல், ஆர்வமிகுதியாற் கூத்தன் முன் கூத்தாடல் ஆதியபற்றி ''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா'' என்ற தொடக்கத் திருத்தாண்டகப் பாடலில் அப்பர் பெருமான் குறிப்பிடுகின்றார். இவையெல்லாம் அவர் நாள்தோறும் செய்து வந்த தொண்டு வழிபாடாகும். அவருக்கு இவை கைவரச் செய்தவர் - அவற்றிற் பயிற்சி கொடுத்தவர் - அவர் அருமைத் தமக்கையார் திலகவதியார் தாம்.

நாயகனைத் தாம் வரித்த கலிப்பகை யார் போர் முனையிலே உயிர்கொடுத்துப் புகழ்பெற்றாராகவும் தம்பி மருணீக்கி யாரை நல்வழியிற் பயிற்சி கொடுத்து ஆளாக்கவே திலகவதியார் உயிர்வாழ்ந்து ஈசன் திருத்தொண்டிலே சாலவும் ஈடுபட் டார். திலகவதியாராற் சைவத்தின் திலகமெனத் திகழ்ந்த அப்பர் தம் அக்கா ளிடம் பெற்ற கடின பயிற்சியால் அவர் உளம் ஈசனை என்றுமே எந்நிலையிலும் மறந் திலது. சான்று அவர் திருப்பாடலடிகள் தாம்.

''சலம்பூவொடு தூபமறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்''

மனைவி மங்கையர்க்கரசியாராற் பாண்டிய மன்னன் நின்ற சீர்நெடுமாறநாயனாரானா ரெனில், மருணீக்கியார், திலகவதியாரால் திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசு நாயனாரானார். ஒரே காலத்தில் புண்ணியராகிய திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும், புண்ணிய வதிகளாகிய திலகவதியாரும் மங்கையர்க் கரசியாரும் வாழ்ந்தமையால் பல்லவ மன் னர் காலம் பக்தி வெள்ளம் பரந்தோடிய காலமாயிற்று. அருட்கடலாகிய சம்பந்த சுவாமிகளும் அன்புக்கடலாகிய அப்பரும் திருக்கோயில் தோறும் அடியார் புடை சூழத் தமிழ் வேதமாகிய தேவாரம் பாடிய மையால் தமிழின்பத்துடன் இசைவெள்ள மும் பெருக்கெடுத்தோடிற்று.

## சிவம் சுவைத்த அப்பர் அருட்பா

அன்புக் கடலாகிய அப்பர் பண்பினைத் தெய்வச் சேக்கிழார் வாயிலாகவும் அவர் தம் தேவார அருட்பாடல்கள் மூலமாகவும் கண்டு உளமுருகுதல் ஏற்புடைத்தாகும். அன்புக் குழைவோடும் திருக்கைத் திருத் தொண்டோடும் வாழ்ந்த அம்மகான் அரு ளிய பாடல்களில் சிவனார் ஆராமையுடன் செவிசாய்த்ததைச் சேக்கிழார்பிரான் திரு நாவுக்கரசர் புராணம் 268-ம் திருப்பாட லில் காட்டுகிறார். ''பண்ணினேர் மொழி யாளென்றெடுத்துப் பாடப் பயன்துய்ப் பான், தெண்ணீர் அணிவார் திருக்காப்பு நீக்கத் தாழ்க்க'' என்று அப்பாடலின் அருஞ்சுவையை மாந்தவே சிவபெருமான் உடனே அருள் செய்யாது மேலும் மேலும் பாடுவிக்க வேதாரணியக் கதவை உடனே திறக்கச் செய்திலர் என்று சேக்கிழார் நாவுக்கரசராக இலங்குவதை நாமறியச் செய்கிறார். சம்பந்த சுவாமிகள் வேதா ரணியக் கதவு அடைக்குமாறு பாடத் தொடங்கவே அது அடைத்துக்கொண் டது. இதனை அப்பர் சுவாமிகள் ''திறக் கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ் உறைப் புப்பாடி அடைப்பித்தார் என்கின்றார். சற்றேனும் மனக்காழ்ப்பின்றி சம்பந்தர் செஞ்சொற் பெருமையைத் தம்முடைய பெருமையினும் மேலதாகக் கொள்ளும் அப்பர் மனநிலை உயர்வை என்னென்போம்

தன்கடன் பணிசெய்து கிடப்பதே என்று பற்று இன்றிப் பணிசெய்து அப்பயனை இறைவனுக்கு அர்ப்பணிக்கும் அப்பர் இயல்பை 'கிடப்பதே' என்ற சொல் தெளிவாக்குகிறது. எல்லாம் இறைவன் திருவருள் வயப்படியே நடந்தேறுவதை அப்பரைப் போல அத்துணை தெளிவாகக் கூறியவர் எவருமில்லை. அத்திருவாக்கு இதுதே,

''யாதே செய்தும் யாமலோம் நீயென்னில்
ஆதே ஏயும் அளவில் பெருமையான்''

ஆன்மாக்கள் அடிமை நிலையில் உள்ளன. மெய்யுணர்வு வாய்த்த பெரியோர்கள் தாம் எத்தகைய செயல்களைச் செய்தாலும் அவை எல்லாம் ஆண்டவன் திருவுள்ளக் குறிப்பின் வழி நடைபெறுவன எனக் கூறுவர். இறைவன் அத்தகைய மெய்ம்மையாளர் செயலை விருப்பினோடும் ஏற்றுக் கொள்ளும் மகாபெருமையுடைய கருணைக் கடலாக இருக்கின்றான் பொதுத்தொண்டில் ஈடுபடுபவர் அப்பருடைய திருவாய் மூர்த்திருக் குறுந்தொகைத் திருப்பாடலில் வரும் மேற்படி இரு அடிகளையும் நினைந்து நற்றொண்டு செய்வாராக.

## தம்மைத் தாழ்த்தும் தகவுடைப் பெரியோர்

'தன்கடன் அடியேனையுந் தாங்குதல்' என்ற ஈசனுடைய ஆன்ம கோடிகளைத் தாங்கும் கருணை நிலையை உணர்ந்த அப்பர் ஒருபோதுமே தம்மை ஒரு பொருளாக மதித்தவரல்லர். தம்மைக்காணுவிட்டாலும் தம்பெருமையை அறிந்து தம்பெயராலேயே பல அறத்தாபனங்களை நடாத்தும் அப்பூதிகளை முதற்கண் அப்பர் சந்திக்கிறார். பிறர் பெயரில் இப்படி ஏன் பாரிய அறம் செய்தல் வேண்டும் என்று வினவும் அவரே 'தாம் மனத்துள் பூசிக்கும் திருநாவுக்கரசர்தாம்', என அறியாத அப்பூதியார் சிவவேடத்துடன் வந்தும் அப்பர் பெருமையை அறியாமற் பேசும் அவரைப் பெரிதும் கடிந்து நீர் யார் எனக் கேட்கிறார். அப்பரே தம்மை மிக இழித்து ''பிறதுறையினின்றேற அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த தெருளும் உணர்வில்லாத சிறுமையேன் யான் என்றார். [பிறதுறை புறமதமாகிய சமணத்துறை தெருளும் உணர்வு-தெளிந்த அறிவு] இப்படித் தம்மைத் தாழ்த்திக் கூறுதலே பெரியோர்கள் இயல்பு. நான் என்பதை அடியோடு மறந்த இயல்பு பெரிதும் இவர்களிடம் குடிகொண்டிருந்தது. தம்மைத் திருப்பூந்துருத்தியிற் காணப் பல்லக்கில் வந்து கொண்டிருந்த சம்பந்தரை அப்பர் பெருமான் அடியார் கூட்டத்துள் கலந்து ஆராமையோடு சிவிகையைத்தாங்குவாருடன் தாமுந் தாங்குவாராயினர். அப்போது சம்பந்தப் பெருமான் உள்ளத்தில் ஏதோ தடுமாற்றம் எழ ''அப்பர் எங்குற்றார்?'' என வினவுகிறார். அப்பர் ''தங்களைத் தாங்கிவரும் பெருவாழ்வு எய்தப் பெற்று இங்குற்றேன்'' என்கிறார். சம்பந்தர் பல்லக்கினின்றும் குதித்து அப்பரைத் தொழுகின்றார். அப்பர் அவரினும் விரைவாக அவரை வணங்கும் காட்சியால் அடியார் எல்லார் உள்ளமும் உருக்கமும் உவகையும் எய்துகின்றன, இப்படி அடியார் தமக்கு முன்னே அப்பர் தம்மைச் சிறுத் தொண்டராக்குகிறார்.

## அப்பர் உடலழகும் உள அழகும்

இவ்வண்ணம் அப்பழுக்கற்ற உள்ளத்தோடு வாழும் அப்பர்பிரான் திருமேனி வண்ணத்தையும் உள்ளத்தின் அழகையும் சேக்கிழார் நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

''தூய வெண்ணீறு துதைந்த
பொன்மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருசிந்தையும்
நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர் பொழிகண்ணும்
பதிகச் செஞ்சொல்
மேயசெவ்வாயும்''

''மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருத்
திருவடிவும் மதுரவாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின்
மாலைகளும் செம்பொற்றாளே
சார்வான திருமனமும் உழவாரத்
தனிப்படையும்தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணித்தேத்திப் பிரவிச் செல்வார்''

''சிந்தை இடையறு அன்பும்
திருமேனிதன்னில் அசைவும்
கந்தை மிகையாங் கருத்தும்
கையுளவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற்
பொலிதிருநீறும்
அந்தமிலாத் திருவேடத் தரசு''

இப்பாக்களில் அன்பினுல் ஆக்கப் பட்ட உருவாகவே அவர் திருமேனி காட்சிதருகின்றது.

இத்திருப்பாடல்கள் மணிவாசகர் மணி மணியான வாக்கினுல் ஆக்கிய திருஅண் டப் பகுதியின் பிற் கூற்றை நினைவுறுத்து கின்றன. அன்பாலாக்கிய அப்பர் யாக் கையின்கண் இறைவன் திருக்கருணையை நினைந்து நினைந்து மழைபோல நீர்ப் பெருக்கை வெளிவிடும்; ''கண்ணீர்மேனி வெண்ணீற்றின் வண்டவாடும், வாயோ மதுரித்து உவட்டெழுவாக்கைச் சொரியும் இம்மெய்ப்பாடுகளுக்குக் காரணமான மனத்திலே இறைவன் திருவடிவே குடி கொண்டிருக்கும்; கைகளோ இறை தொண்டில் நிறைவுகாணும். கால்களோ அப்பன் கோயில்களை வலம்வருதலிற் பேரின்பப் பயனெய்தும் அப்பர் திருஅங்க மாலை உடலுறுப்புக்களை இறை சேவகத் தில் நிறைவு காணச் செய்தல் ஈண்டு சிந்திக்கற்பாலது. அப்பர் தாழ்மைக்கும் பற்றற்ற பண்பிற்கும் 'கந்தைமிகையாம்' என்ற தொடர் சான்று பகருகின்றது.

## சைவ விளக்கு

அப்பர் திருவுடலிலே தோய்த்து அலம்பி வருதலினுலே நூலிழை நைந்து நீர்க்காவியேறிய கந்தை சுற்றப்பட்டிருக் கிறது. அப்பன் திகம்பரனுகவும் புலித் தோலுடை உடையோனுகவும் இருத்தலி னுலே தமக்கு அக்கந்தைத் துணிதானும் வேண்டப்படாத மிகைப் பொருளாகத் தோன்றுகிறது. பற்றுக்களனைத்தும் விடு பட்டுப்பாரையே பரமனுகக் கண்டு உடை யையும் மிகை எனக்கண்ட சதாசிவப் பிர மேந்திரரை ஈண்டு நாம் நினைவு கூரு கிறேம். இப்படி நம் சிந்தனையெலாம் இடங்கொண்ட அப்பர் அரிய இலட்சிய புருடர். அவர் உயரிய சைவ விளக்கே யாவர்.



''கள்ளமற்ற உள்ளத்தைப் பெற்ருல், இறைவனை மிக எளிதில் அடையலாம், கற்கள் இல்லாத நல்ல இடத்தில் நடப்படும் வித்து எளிதில் முளை கிளம்புவதுபோல''

— இராமகிருஷ்ணர்.

# இதுதான் வினை

திருமதி கங்கேஸ்வரி கந்தையா
(விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, மட்டக்களப்பு)

மனிடப் பிறவியே மிக மகத்தானது என்பதை யாவரும் அறிவர். சிந்திக்க, எதையும் சீர்தூக்கி ஆராய, உணர, பகுத்தறிய, வல்ல மனம் படைத்தவன் மனிதன். உளவியலறிவோடு உடலியற் தன்மையும் தெரிந்து உழைக்கும் திறன் படைத்தவன் இவன். தன் புலனறிவுக்கும் உழைப்புக்கு மப்பால் ஓர் பேராற்றல் உண்டு என்பதைப் பல துறைகளிலும் நன்கு தெரிந்துகொண்டவனும் மனிதனே. இப்பேராற்றலே இவ்வுலகை இயக்குகிறது என்பதனை அறிந்ததும், அதனைக் கடவுட் சக்தி என ஏற்றுக் கொண்டான். இதன்வழி நடத்துதலில்லாமல் தன்வாழ்வு வளமுறாதெனக்கண்ட மனிதன், பலவாறு வழிபாட்டினை ஆரம்பித்தான். தெய்வீகம் பொருந்திய அன்பு வாழ்க்கையே மனிதப் பிறவியின் குறிக்கோள் எனக் கொண்டான். இவ்வன்பு நெறியையே நாம் சிவநெறி என்கிறோம்; இதனை சைவம் என்ற மங்களப் பெயரால் மக்கள் அழைக்கின்றனர். இந்நெறி நின்ற திருமூலர்,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரு மறிகிலார்"

என்று அழகாகக் கூறினார். அருளாளனை சிவபிரானது அன்பின் திறத்தை, 'பால் நினைந்தூட்டும் தாய்', 'தாயினும் நல்ல தலைவன்' என்பன போன்ற பல மணிவாக்குகள் நமக்குக் காட்டி நிற்கின்றன. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்கும் என்பதனை, இன்று உலகினை ஆளும் விஞ்ஞானம் கூட விண்டுவிட முடியாது. ஆகவே இப்பிறவியிலேயே நாம் உயிரின்பம் தேடியே ஆக வேண்டும்.

சைவ சமயம் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களின் உண்மையைப் புலப்படுத்துகிறது. பதி—தலைவன்; பசு—உயிர்; பாசம்—மலம். பதிக்கும் பாசத்திற்கும்; இடைப்பட்ட உயிர் (பசு) பதியையோ, பாசத்தையோ சேரவேண்டியதே. பாசத்தைச் சேருமாயின், உலக இன்பங்களைத் தேடுவதிலும், அனுபவிப்பதிலும் காலத்தைக் கழிக்கும். ஐம்பொறி வாயிலாகப் பெற்ற இன்பமும், உடற்தேவைகளுக்காகத் தேடுகின்ற தேட்டமுமே மனிதனுக்குப் பெரிதாகப் படுகின்றது. இவற்றால் பெறப்படும் இன்பம் தற்காலிகமானதுதான் என்பதை உணராத மனிதரில் பெரும்பாலோர், தமக்கும் தம்மைச் சார்ந்தோருக்குமாக உழைக்கின்றோம் என்கின்றனர். இல்லை இல்லை; உள்ளத்தையும் பாழாக்கிக் கொள்கின்றார்கள் என்பதே பொருத்தமானது. பொய்யும், புரட்டும், வஞ்சகமும் அவர்களை ஆட்கொள்கின்றன. இதனால் இவர்களது வாழ்க்கை உள்ளொன்று புறம்பொன்றாகிறது. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய உட்பகைகள் வளர்கின்றன. இவ்வாறான உட்பகைகள் சிவநெறியில் வாழ்பவனைச் சார்தல் கூடாது என்று வரையறுத்துக்கூறுகிறது நமது சமயம். காமம முதலியன மனிதனிடம் இயல்பாய் அமைந்தவையே எனினும், இவற்றின் உந்துதல்களுக்கு, தான் அடிமைப்பட்டு, இவையே தஞ்சமென்று அடைந்து வாழ்தல் கூடாது என்பதே நமது கொள்கையாகும். அவ்வாறின்றி, உலோகாயதமே பெரிது என்ற கொள்கையை நிலைக்களனாகக்கொண்டு வாழ்கின்ற மனோபாவமே, இன்றைய சீரழிவுகளுக்குக் காரணமாயுள்ளது என்பதனை எவரும் மறுக்கவொண்ணா. இவ்வாறான உலகப் பிடிப்பினின்றும் சிறிது சிறிதாக விடுதலைபெற்று ஆன்மா தனது பதியாகிய சிவத்தைச் சார முயற்சித்தல்வேண்டும். இந்த நிலை உண்டாகுமானால் கொலை; கொள்ளை; அதிகாரவெறி; சாதி, குலம், பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் மனவிகாரம்; இனம்தெரியாத மனநோய்

கள் ஆகியன எல்லாம் பகலவன்முன் பனி போல் பறந்தோடிவிடும் என்பதற்கையமே யில்லை எனலாம்.

ஒவ்வொரு தனிமனிதனும் தனது ஆன்ம விடுதலைக்காக; ஒழுக்கமும் பண்பும், புனிதமும் அன்பும் கொண்ட நல்வாழ்வு வாழ்ந்து பதியாகிய சிவத்தைச் சார முயற்சிப்பதினால் ஏற்படுகிற இன்பம் ''யாம் பெற்றபேறு பெறுக இவ்வையகம்'' என்னும் கொள்கைக்கு அடிப்படையாகின்றது. இதனால்,

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன்''

என்னும் பக்குவ முதிர்ச்சி உண்டாகின்ற போது, எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிரும் அவ்வுயிராய் அங்கங்கே ஆண்டவனைக் காணும் கொள்கை முகிழ்த்த சைவனிடம், ஏழை, செல்வன், சாதிபேதம் என்னும் அபேத உணர்வால், ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற மனநிலை ஏற்படுகிறது. இது மிக இலகுவானதல்ல; ஆகவே, சைவ சமய குரவர்களும், பெரியார்களும் காட்டிய வழியையும் வாய்மொழிகளையும் நாம் நன்கு படித்து உணர்தல் அவசியமாகின்றது. இந்த உணர்வால்,

''காயமே கோயிலாக
கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக
மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா
நிறையநீர் அமைய ஆட்டி
பூசனை ஈசனார்க்கு'' புரியும்நிலை நம்மை வந்தடைகின்றது. இதற்கு முதற்படியாக, ஆலயம் செல்லுதல், அலகிடுதல் ஆகிய தொண்டுகளிலீடுபடுதல், திரிகரணசுத்தியோடும் சிவனையும் சிவனடியார்களையும் வணங்குதல், சிவப்பணிசெய்தல் முதலான சரியைவழி நிற்றல் சாலச் சிறந்ததாகும். இப்பயிற்சிகளால்,

''உள்ளம் பெருங்கோயில்
ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு
வாய்கோபுரவாயில்''

ஆவதை நாமே நமக்குள் காண முடிகிறது. இவ்வாறான ஒழுக்கமுறை உலோகாயத இன்பங்களில் நம்மைச் சரணடையச்செய்ய மாட்டாது என்பதைச் சொல்லவேண்டியதேயில்லை. இத்தகையதொரு சைவ வாழ்விலே கல்லோடு கட்டிக் கடலில் தள்ளினும் 'நற்றுணையாவது நமச்சிவாயவே' என்ற ஒரு உறுதிப்பாடும்; நச்சுணவு ஊட்டப்படினும், 'அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதுமில்லை' என்ற அஞ்சாமையும்; அரசனே ஏவினாலும், அவன் வழி வரேன் எனக் கூற ''நாமார்க்கும் குடி அல்லோம்'' என்ற துணிவும் ஏற்படுகின்றன.

சாதாரணமான வாழ்விலே தொழுநோயர் எனப்படும் குஷ்டரோகிகளைக் கண்டவர்கள் விலகிச்சென்றனர். தம் வாசலில் வந்த புலையரைத் தள்ளிநில் என்கின்றனர். இவர்களும் சைவர், சொல்பவர்களும் சைவரே. ஆனால் இத்தகையதொரு வேறுபாடு காணாத நிலையில்,

''அங்கமெலாம் குறைந்தழுகு
தொழுநோயராகி
.................................... புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே''

என்று கூறுகின்ற அப்பர் அடிகளது அன்பு மனப்பான்மையை, சிவநெறி காட்டுகின்ற நேச உணர்வைப் பெறுவதற்கு நாம் முயல வேண்டும்.

தான்மட்டும் தனித்து உண்ணமல், உற்றார் அனைவரையும் கூவி அழைத்து ஒன்று சேர்ந்து உண்ணுதல், காக்கைக் குணங்களில் ஒன்று. இப்போது எல்லோரும் பேசும் பொதுஉடைமைக் கொள்கையைக் காகம் என்னும் அற்ப பிராணி, எப்போதோ கற்றுக்கொண்டது போலும். சைவசமயத்தில் வாழ்ந்த பெரியார்களும் உலகப் பொதுநோக்கோடு தாம் தம் நெறி வாழ்ந்து காட்டிச் சென்றுள்ளனர். இதனை அறிந்து வாழாமல் சைவர் என்று சமயம் பேசும் சிலர், சிவ நெறிதரும் கனியை உண்ண விரும்பாத

அநியாயத் தனிவாழ்வு வாழ்ந்தனர். இவற்றைக் காணச் சகியாது,

''காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்
அகண்டாகார சிவ
போகம் எனும் பேரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குதையோ
இன்புற்றிட நாம் இனி எடுத்த
தேகம் விழுமுன் புதிப்பதற்குச்
சேரவாரும் செகத்தீரே ''

எனத் தான் புசிக்கக் கிடைத்த சிவபோகம் எனும் பேரின்ப வெள்ளத்தை அள்ளிப் பருக, யாவரும் வாரீர் என்று பொதுவுடைமைக் கண்ணோடு தன் மனம் குளிரக் கூவி அழைத்தனர். அழைத்துக்கொண்டேயிருக்கின்றனர், அருட்பெரும் திருவாளர்கள். நாம் செல்ல மறுக்கின்றோம். காரணம் கண்டும், கேட்டும், உண்டும், தொட்டும் உண்மையாகவே உள்ளதைக் காட்டும் விஞ்ஞானப் பேரறிவு போன்றதொரு ஐம்பொறிகளின் பதிவிற்குரிய விஞ்ஞான விடயமா இது? இதுதான் வினா.

''இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்ப
ரென்றெண்ணவோ
திடமில்லையே''

என்னும் நிலையாமையினையும்,

''ஐயும் தொடர்ந்து விழியும் செருகி
அறிவழிந்து
மெய்யுட் பொய்யாகி விடுகின்ற''

போதினையும்,

''புலனைந்தும் பொறி கலங்கி நெறிமயங்கி
அறிதழிந்திட்டு ஐ மேலுந்தி அலமந்த''

போதினையும்

நன்றாகச் சிந்தித்து விடை காண்போமாக.



"கல் தண்ணீருக்குள் பல ஆண்டுகள் கிடந்தாலும், அந்த நீர் கல்லுக்குள் நுழையாது. ஆனால், களி மண்ணோ நீர் பட்டவுடன் மிருதுவடைந்து விடுகிறது. அதுபோலவே பக்தனுடைய உறுதியான மனம், துன்பத்தாலும் சோதனைகளாலும் தடுமாற்றம் அடைவதில்லை. திடபக்தி இல்லாதவனுடைய மனமோ, வெகு அற்பமான காரணத்தைக் கொண்டு சலனமடையும்"

— இராமகிருஷ்ணர்.

# முத்தி வேண்டுமா, சித்தி வேண்டுமா?

தலையாளி, வ. கந்தையா
[ஓய்வுபெற்ற ஓடிற்றர்]

முத்தி என்பது பிறப்பு இறப்புக்களிலிருந்து விடுதலை அடைதல். பிறப்பவன் இறப்பான். இறப்பவன் பிறப்பான். இஃது இயற்கை. உடம்பொடு உயிரிடை நட்பு இன்பத் துன்பங்கள் ஒக்க அனுபவித்தற்கு ஏதுவாகும். யாக்கையில் நாம் எய்தும் இன்பம் சிற்றளவினது. துன்பமே மிகுந்து வரும். இவற்றைத் தலைக்காட்டவே. பிறப்பு இறப்புக்களை ஒழித்துவிடுவர். ஒழித்த நிலை முத்தியெனப்படும். தமிழில் இது வீடு என்றும் வீடுபேறு என்றும் வழங்கும். வீடு முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

சித்தி என்பது யாக்கையில் - அஃதாவது நாம் நாளும் வாழ்ந்துவரும் வாழ்க்கையில் - நமக்கு வேண்டுவனவற்றை முட்டின்றிப் பெறுதல். பணம் வேண்டுவார் பணத்தினைப் பெறுதல். நிலம், இல்லம், நோய் தீர்தல், வித்தை, புத்தி, முதலியனவற்றை வேண்டுவார் அஃததனைப் பெறுதல்.

இவ்விரண்டற்கும் வழி என்ன? முத்திக்கு வழி வேறு. சித்திக்கும் வழி வேறு. நான் அவற்றை இங்கே சொல்லும் முறையில் நீங்கள் எங்கேயாதல் கண்டதுண்டா? யார்பாலாதல் அறிந்ததுண்டா? சிந்தித்துத் தெளிக.

## முத்திக்கு வழி

மதம் எதுவும் நிலவ வேண்டுமாயின், அம் மதகர்த்தாக்களேனும் அம்மதப் பெரியாரேனும், இன்று நமக்குத் தோன்றுதல் வேண்டும். அம்மதம் நில்லாது. புத்தர் கிறீஸ்து, நபிநாயகம் முத்திபெற்றவர்கள். இவர்கள் இன்றும் பக்தர்களுக்குத் தோன்றுவர்.

சீவான்மா பரமான்மாவாதல், நிர்வாணம் எய்துதல், கடவுளைப்போல ஒன்றுதல், குட்டி தாய்க் குரங்குடன் அணைந்திருப்பதுபோல் சீவான்மா கடவுளோடணைதல், இரண்டறக் கலத்தல், சார்ந்ததன் வண்ணமாய் நிற்றல், என்பன போன்ற முத்தியிலக்கணங்கள் தரிசனக் கலைக்கு உதவுவன. மக்களின் அனுபவமோ வேறு கதை சொல்லும்.

இராமகிருஷ்ணமடத்துப் பிரம்மானந்த சுவாமிகள் வெள்ளைக்காரப் பெண்ணொருத்தியைக் கொண்டு பைபிளைப் படிக்கச் செய்தபோது, யேசுநாதர் தோன்றினர் (Eternal Companion பார்க்க). பிரசித்திபெற்ற பாதிரியார் ஸ்ரான்லி ஜோன்ஸ் அவர்களும் யேசுவைக் கண்டதாகச் சொல்லியுள்ளனர் என்ப.

இந்துமதப் பெரியாரும் அங்ஙனமே தோன்றுவர். 'இந்துமதம்' என்பது ஓர் பொதுப்பெயர். இந்துநதிக்குத் தென்பாலுள்ள மதங்களை அது குறிக்கும். சைவத்திற்கு முதல்வர் சிவன். அவர் இன்றும் தோன்றுகிறார். யாழ்ப்பாணத்திலும் தோன்றுகிறார்.

இனிச் சிவனைச் சரணமடைந்த ஆதிகுரு சங்கராசாரிய சுவாமிகள், இரமணமகரிஷி, சிவானந்தர், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், யோகசுவாமி முதலிய அத்வைத வேதாந்திகளும் முத்திபெற்றவர்களாவர்.

இராமகிருஷ்ணர் பஞ்சவடியில் தம்மொடு பேசி அருள் செய்ததனை, றோமன் கத்தோலிக்க விசுப்பாண்டவர் எலென்ஜி மிற்றம் அவர்கள் ஒரு கட்டுரையில் சொல்லியுள்ளனர் (Call Divinoe, January, 1968, p.273). அவர் அதன்கண், கிரேக்க ஞானி பிளேற்றோ, புத்தர், சங்கரர், மீராபாய் இவர்களோடும் பேசலாம் என்று சொல்லியிருத்தலைக் காண்க. பேசுவது பிதிரரோடு ஒலிவர் லொட்ஜ், ஆர்தர் கொனன் டோயில், F. C. தத்தர் முதலா

ஞேர் பேசியது போலன்று. ஆளோடு ஆள் நேர்முகமாகப் பேசுவதாகும்.

இராமகிருஷ்ணரும் விவேகானந்தரும் யாழ்ப்பாணத்திலுள்ள ஒருவருக்கு எட்டு ஆண்டுகளாகத் தோன்றிவருகின்ருர்கள். என் நண்டன் காலையில் 4 மணிக்கு எழுந்து, நீராடி ''அடியேன் நுங்களைச் சரணமடைகின்றேன்' என்று அவ்விருவரையும் வேண்டுவன். அவர்கள் நண்பன் முன்னிலையில் வந்திருந்து, நண்பனைச் சுட்டிக்காட்டி ஏதோ பேசிவிட்டுச் செல்வர்.

''என்ன பேசுகின்றனர்? என்று கேட்டேன். ''தமிழும் ஆங்கிலமும் அல்லாத பாஷையொன்றில் பேசுகின்றனர்'' என்முன் நண்பன். ''நும்மோடு பேசவில்லையா?'' ''இல்லை'' ''இத்தனை ஆண்டுகளும் நீர் ஒன்றுங் கேட்கவில்லையா?'' ''இல்லை. நான் அவர்களைச் சரணடைந்தேன். அவர்களுக்குத் தெரியுந்தானே என் குறை.''

என் நண்பனுக்குத் தன் மனைவியால் வந்த குறையோ சொல்லுந்தரத்தன்று. தற்கொலை புரியலாமோ, இமயமலைச் சாரலுக்குச் செல்லலாமோ, என்றும் அவன் எண்ணினன். கன்மவினை கொடுத்ததும், முத்திவிஷயமல்லாததுமாகையால் அவர்கள் தலையிடவில்லைப்போலும்.

சங்கரரும் அங்ஙனமே யாழ்ப்பாணத்திலுள்ள சிலருக்குத் தோன்றுகின்றனர். முத்தி விஷயமல்லாத விஷயங்களில் பிராரத்துவ கன்ம வினையை அனுபவித்தே தீர்த்தல் வேண்டும் என்பது அவர் கொள்கை. துறவும் வறுமையுமே அவர் வேண்டுவன. ''காட்டுக்கு வா என் செட்டித்தனம் காட்டுகின்றேன்: ''என்பர் ரமணர். ''நீ ஓரிடமும் போகவேண்டாம். வீட்டிலிருந்தே 'நான் யார்' என்று ஆராய்ந்தறி'' என்பர்.

சங்கரின் நிபந்தனைகள் பொறுக்க முடியாதவை. அவருடைய பீடத்திலமர்ந்தவர்களும் சகிக்க முடியாதவை. அதனுல் உலகத்தில் சிறந்த சிந்தனை வல்லானும், உன்னத இலக்கியங்களை வெளியிட்டவனும், ஆகிய சங்கரனுக்கு ஆப்த மாணவன் ஒருவனுதல் இன்றுவரை அமையவில்லை; அவருடைய நேர் மாணவன் பத்மபாதன் முத்திபெற்றமை ஐயம். மற்ற சுரேஸ்வராசாரியார் முதலானோர் பன்னிரண்டு நூற்றுண்டுகள் சென்றும் இன்னும் முத்தி பெறவில்லை.

''வள்ளுவரும் முத்தர். அவரைக் கூப்பிட்டால் வருவர். குறளின் தமிழைப் பின்பற்றியே தமிழ் எழுதுதல் வேண்டும். குறளுக்கு அமைந்த உரைகள் செம்மையற்றவை. பொதுவாக உரைகள் பாடியங்கள் ஓரளவுக்குத்தான் உதவும். மூலத்தைப் படித்து நீங்களே உரைகாணுதல் வேண்டும்'' என்பது சங்கரரின் அபிப்பிராயம்.

ரமணமகரிஷியும் தோன்றி வருகின்ருர் என்று ஒஸ்போன் அவர்கள் தம் மாத வெளியீட்டில் (Mountain Path) எழுதியுள்ளார். மகரிஷியவர்கள் தம் உடலை விடுங் காலத்தில், சூழநின்ற அடியார்கள் அழுவதைக் கண்டு ''நான் எங்கே போகின்றேன் என்று அழுகின்றீர்கள் இங்கேயே பக்கலில் இருப்பேன்'' என்ருர்.

யாழ்ப்பாணத்து யோகசுவாமிகள் அண்மையில் ஒரு பெண்மணி ஒருத்திக்குத் தோன்றி ''நான் முன்னர் ரூபியாய்த் தோன்றினேன். இப்போது அருபியாய்த் தோன்றுகின்றேன். அம்மட்டே வேற்றுமை'' என்றனர்.

யாழ்ப்பாணத்து மகனொருவன் அரசாங்க உத்தியோகத்தன். அவன் தியானம் செய்யும் நாளில் முத்தி பெற்ற பெண் ஒருத்தி அகக் கண்முன் தோன்றினுள். ''தாயே நீங்கள் யார்?'' என்முன் என் நண்பன். ''பராசக்தி'' என்ருள் ''தாயே! அபசாரம் நேரலாம். குழந்தையாக வருக'' என்று வேண்டினன். அவள் உடனே வாலையாக மாறினள்.


அவள் யார்? மானுடப் பிறவியில் பெண்துறவி அவள் கழுத்திலிருந்து கால் வரை நீளச் சட்டையணிந்து, தலைமயிர் கற்றையாகத் தொங்கவிட்டு, தெருத் தெருவாய்த் திரிந்த 50 வயதுடைய மாது.

## நவராத்திரி விழா இறுதிநாள் காட்சிகள் – 197













ாத்திரி விழா இறுதிநாள் காட்சிகள் – 1971














பலாலி ஆசிரியர் கழகம் சைவமாணவ மன்றம் - 1971 பேராசிரியர்களும் செயற்குழுவினரும்

இடங் கிடைத்தபோது புகுந்துகொண்டனள்; என் நண்பன் அவளைத் தூக்கி உப்புக்காவுவான்; இரவு முழுவதும் அவளுடன் விளையாடிக் கழிப்பான். அவள் ஐந்துதலை நாகமாகப் படுக்கையில் கிடந்து சீறினள். நண்பன் அஞ்சாமல் நிற்பதைக் கண்டு, குழந்தையாக மாறி உரக்கச் சிரித்தாள்.

முக்தர்களெல்லாரும் அருள் செய்ய வந்தவர்கள் வருபவர்கள் என்றேனும், பரமயோக்கியர்கள் என்றேனும் எண்ணுதிர். பிறவிதோறும் முத்திஎய்த நினைப்பவரை, ஞானம் பெற நினைப்பவரைத் தடைப்பண்ணி வஞ்சிக்க வருபவரும் உளர். ஆகையால் இத்துறையில் மிக்க விழிப்புடன் முயலுதல் வேண்டும்.

முத்தி பெற்றவர்கள் தன் தன் நலங் கருதியே விடுதலையடைந்தனர். தன்னுடைய நலங் கருதாமல், அடியாருடைய நலங் கருதி ஓயாமல் உழைத்து வருபவர் சத்திய சாயி பாபா ஒருவரே. நோயை மாற்றுவது இடரைத் தீர்ப்பது யோக நெறிக்கு முரண். அது "பேயன்களுடைய வேலை" என்பர் முத்தர். முத்தி வரச் சுணங்கினாலும், சாய் பாபா அவர்கள் செய்து வருவதே சாலச் சிறந்த நெறியாகும். குடும்பஸ்தருக்கு முத்தியேன்? பெற்றோர் பரிதபிக்கும்போது பிள்ளை புறங்காட்டல் புண்ணியமாகுமா? முத்திநிலையிலுள்ளாரைப் பார்க்கும்போது, அந்த நிலையை விரும்பாமல் உலகத்துப் பெரும்பாலார் இருத்தலில் விருப்பொன்றுமில்லையென்றுதான் எண்ணுவோம்.

## சித்திக்கு வழி

வாழ்க்கைக்கு வேண்டுஞ் சித்தியைத் தருபவர்கள் தெய்வங்கள் - விஷ்ணு, சிவன், கணேசன், முருகன், பராசக்தி, லக்ஷ்மி, சரஸ்வதி முதலானோர் தெய்வங்கள் அவர்களுக்கு உவக்கும் வகையில் வழிபாடியற்றினால் அவர்களும், முத்தரைப் போல் தோன்றுவார்கள்.

தெய்வங்கள் தோன்றுவிட்டால் கோயில் வழிபாடேது? வீட்டுவழிபாடேது? வழிபாடு பரவியதற்குக் காரணம் அவர்கள் தோன்றியருள் செய்தமையே. ஒருவருக்கோ இருவருக்கோ அவர்கள் தோன்றியிருக்கலாம்.

யாழ்ப்பாணத்தில் ஒருவருக்கு சிவன், பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி, கணேசன், முருகன் இத்தனைபேரும் தோன்றுகின்றனர். நான் இங்கே புராணக் கதைகளைத் தாராமல், நிகழ்கால நிகழ்ச்சிகளை அனுபவ ரீதியில் தருகின்றேன் என்றறிக. தெய்வங்களுக்குக் கால வரையறையில்லை; அஃதாவது எந்த நேரத்திலுந் தோன்றுவர். எந்த இடத்திலுந் தோன்றுவர்.

முத்தருக்குப்போல் தெய்வங்களுக்கும் பாஷைப்பிரச்சினை இல்லை. நீவிர் எந்தப் பாஷையில் பேசினாலும் அந்தப் பாஷையில் விடை தருவர். மேலே சொன்ன அடியானுக்குத் தெய்வம் ஒன்று பகலுணவுவேளை தோன்றி "மச்சம் மாமிசத்தை விடு என் நல்லவா சொன்னேன்? சரி, விடமுடியாதாயின், பரவாயில்லை" என்றது. வேறு நாள், வேறு தெய்வம் தோன்றி "இந்தக் கறியைத் தின். இதனை ஒதுக்கு" என்றது. ஒதுக்கச்சொன்ன கறியை உண்ணின், அது பதனழிந்திருக்கக் காண்பான். தெய்வங்களும் பகிடி பண்ணும்.

தெய்வம் பணங்கொடுக்கும் விதத்தினை அறிய ஆவல் எல்லாருக்கும் உண்டு. மண்ணைப் பொன்னாக்கத் தெய்வத்திற்கு முடியாதா? கல்லை மணியாக்க முடியாதா? ஆகையால் இத்துறையில் நாம் ஆராய்ச்சி செய்யப்படாது. மேலும், தெய்வந் தோன்றினால் பொருள் கொடுக்கும் என்ற நியதி இல்லை. தோன்றினவுடன் கொடுக்கும் என்னும் நியதியுமில்லை. உதாரணமாக எனக்கு ஐவர் தோன்றினர்; பொருள் எதுவும், எவ்வகையிலும், எனக்கு வரவில்லை.

முதலில், எனக்கு லக்ஷ்மி தோன்றினாள். வியாச பாரதத்தினை வடமொழியில் படித்துவருவது என் வழக்கம். சாந்தி பர்வத்தில் 235-ம் அத்தியாயம் இந்திரனும் நாரதரும் லக்ஷ்மிதேவியைக் கண்டு, அவ்வன்னைக்கு அவர்கள் வணக்கஞ்செய்த விதத்தினை பீஷ்மர் யுதிஷ்டிரருக்குச் சொல்வதாக அமைந்த பாகம் அது. அந்த அத்தி

யாயத்தை "விப்பிரசதசிலிருந்து படிப்பவர் எவருக்கும் லக்ஷ்மி கடாக்ஷம் கிடைக்கும். பரீக்ஷித்துப் பார்" என்கின்றார் வியாசர். நான் அதனை மீண்டுமொருமுறை படித்துவிட்டுத் தூங்கி வைகறையிலெழுந்தேன்.

ஆயிரம் சூரியப்பிரகாசம்கொண்ட பிரகாசத்துடன் லக்ஷ்மிதேவி என்முன் நடந்து வந்து, புன்முறுவல் செய்து, மறைந்தனள். லக்ஷ்மிதேவியின் அழகுக்கு நிகரான அழகு யாண்டுமில்லை. அன்னையின் புன்முறுவல் சரத்காலச் சந்திரனை நாணச்செய்யும் என்பர் வடமொழிக் கவியொருவர்,

இனி, சரஸ்வதி. தமிழ்த் தண்டியலங்காரத்திற்கு முதல் நூல் சமஸ்கிருதக் காவியாதர்சம். அதன்கண் உள்ள மங்கல வாழ்த்து சரஸ்வதிக்கு அமைந்தது. அதனையொருமுறை திருப்பிப் பார்த்துவிட்டுப் படுத்துறங்கினேன். விடியலில் நாலரை மணிக்குப் படுக்கையிலிருந்தே பகவத்கீதை சங்கரபாடியத்தினைச் சமஸ்கிருதத்திலேயே படித்துக்கொண்டிருந்தேன். என் முன் சரஸ்வதிதேவி, லக்ஷ்மிபோல், வெள்ளைப் பணிபூண்டு வந்தாள். திடீரென்று மறைந்தாள். ஐந்தரை மணிபோல் நான் படிப்பை முடிக்குந்தறுவாயில், என் தலையணைமீது தேவியிருந்து எழுந்துபோவதனைக் கண்டேன்.

இதன்பின் என் நாவிற்கு மந்திரசக்தி உண்டென்பது வெள்ளிடைமலை. பராசக்தியையும், கணேசப் பெருமானையும், இரண்டொரு நாளில் மந்திரஞ் சொல்லியழைத்தேன். தெய்வங்களுக்கு மந்திரம், பசாசுகளுக்குப் போலல்லாமல், ஒரு வெண்பாவிலோ நாலைந்து சொற்களிலோ வடமொழியிலமையும். அவற்றை நாவால் எடுத்துச் சொல்லாமல் சிந்தித்தாலே போதும். அவை விளக்கத்திற்கு வரல் வேண்டும்.

"வியாச பாரதம் ஒரு ஞான விருந்து" என்றார் கிருஷ்ண பரமாத்மா' யாழ்ப்பாணத்து நங்கை ஒருத்திக்கு. அக்கன்னிக்கு அதனைக் கொடுத்துப் படிக்கும்படி தூண்டினேன். "அதனைப் படிக்கச் செய்தவரைக் கும்பிட்டுவிட்டு வா" என்று அவளுக்குப் பணித்தனர். கிருஷ்ணபரமாத்மா கருணைக் கடல். வேண்டுவன வேண்டுவார்க்கு ஈயும் பரமேஸ்வரன். விஷ்ணு புராணத்தை எழுத்தெண்ணிப் படிப்பீர்களாயின் அவரின் மகிமை விளங்க வரும். கன்னி கார் பிடித்து அப்பெருமானுடைய ஆணையை நிறைவேற்ற வந்தபோது, வண்மையின் விசாலத்தையறிந்தேன்.

வித்தைக்கும் வித்தத்திற்கும் ஈசன் விஷ்ணு. உள்ளுவார் உள்ளத்தில் உள்ளும் வேகத்துடன் எழுந்தருளும் வித்தகன் விஷ்ணு. அவரையழைத்தால், ஒருகால் அவரே தோன்றுவர்., ஒருகால் கிருஷ்ணன் தோன்றுவான். அன்பும் அருளுஞ் சுரத்தலில் விஷ்ணு பெருமானுக்கு ஈடில்லை. விரைந்துதவுங் குணம் அவரொருவருக்கே உண்டு. சிந்தையும் மொழியுஞ் செல்லாத உலகத்தாரிடும் முட்டினையறுக்கும் வன்மை கூட அம்மகாஞெருவனுக்கேயுண்டு. விஷ்ணுவையேனும், கிருஷ்ணனையேனும் வழிபட்டால் லக்ஷ்மியின் கடாட்சம் தானே வரும்.

சைவத்திற்கும் வைணவத்திற்கும் வேற்றுமை தேவார காலத்தில் உண்டாயது. சைவ நாயன்மாரும் வைணவ ஆழ்வார்களுமே பிளவைப் பெருப்பித்தனர். வேதமுறையில், சிவனை ஆராதியாத வைணவப் பூசையில்லை; விஷ்ணுவையாராதியாத சைவப் பூசையுமில்லை. கல்வியால் உயர்ந்தாரும் ஞானத்தால் உயர்ந்தாரும் வேறுபாடு காணார். வேற்றுமை பாராட்டார்.

மேலே, இராமகிருஷ்ணரையும் விவேகானந்தரையும் சரண்புகுந்தவர் ஒருவரைப்பற்றிச் சொன்னேன். "வேறு என்ன வழிபாடு செய்கின்றீர்?" என்று உசாவினேன். "காயத்திரி மந்திரம் ஓதிவருகின்றேன்" என்றார். அவர் சமஸ்கிருதம் படியாதவராகையால், அவருடைய நா அதனைச் செவ்வனே சொல்லவில்லை. பொருளும் அவருக்குத் தெரியவரவில்லை. "பலன் கிடைத்ததா?"

“ஒருநாள் காலை ஆறு மணியளவில் இருபத்தைந்து வயதுக் கன்னியொருத்தி என் வீட்டிற்கு வந்து, என் கைரேகையைப் பார்த்து ‘இவளையேன் கொண்டாய்? இவளால் உனக்குத் தொல்லைகள் வரப்போகின்றன. பயப்படாதே!’ என்று சொல்லி மறைந்தனள். பெட்டியில் வைக்கும்படி ஒரு மூலிகையுந் தந்தனள்.” அவள்தான் காயத்திரிதேவி. தேவர்கள் எல்லாருக்கும் வயது இருபத்தைந்துதான். “இதுதான் தேவர்களுக்கு எப்பொழுதுமே வயதாக ஏற்பட்டிருக்கிறது” என்று இராமன் இலக்குமணனுக்குச் சொல்வதனாலும் அறிக. (வால்மீகி இராமாயணம், ஆரண்ய காண்டம், 5/16). அவள் மறைந்து மூன்று நாளாகுமுன் தொல்லைகள் தலைகாட்டின.

### அருகதை உடையார் யார்?

எவருடைய சாதகத்தில் சனி, சந்திரனைப் பார்க்கின்றதோ, கூடியிருக்கின்றனவோ, அச் சாதகர் முத்திக்கும் சித்திக்கும் முயல்வதற்கு அருகதையுடையவர். சாதகம் வானசாஸ்திரத்தின்படி கணிக்கப்பட்டிருத்தல்வேண்டும். அந்த யோகமுடையார் எளிதில் சித்தி காண்பர். அவர்கள், ஆணாயினும் பெண்ணாயினும், ஊழையும் உப்பக்கங் காண்பர்.

தெய்வங்கள் பலவற்றைக் கொள்ள வேண்டியதில்லை. தெய்வம் ஒன்றனைத் தேர்ந்து முழுமனத்தினையும் ஒருமுகமாக அதன்கண் செலுத்தினால், அஃது எல்லாந் தரும். உதாரணமாக, சரஸ்வதி கல்விக்கு நிதியாயினும் எல்லாந் தருவள். ‘சர்வதா’ என்பது அவளுக்கொரு பெயர்.

லக்ஷ்மி பொருட் செல்வத்திற்குப் பெயர்பெற்றவளாயினும், வித்தைகள் எல்லாவற்றுக்கும் முத்திதரும் ஆன்மவித்தைக்கும் அதிதேவதை. விஷ்ணுவோ எல்லாம் நிறைந்தவர். பூரணர். எல்லாந் தருபவர்.

இரவில் உண்ணலாகாது; பகலில் உறங்கலாகாது. விடியலில் நாலுமணிக்குப் பின்னர் தூங்குவதனை அறவே நிறுத்துதல் வேண்டும். நீங்கள் உண்ணுவதற்கென்று சமையல் செய்யப்படாது. இல்லக்கிழத்தியர் தாம் ஆக்கிய உணவைப் படத்தின் முன்னரோ, சிலையின் முன்னரோ, இலையில் நிவேதனம்பண்ணிய பிறருக்குப் பரிமாறல் வேண்டும்.

நீவிர் ஒவ்வொருவரும் உண்ணும் உணவையும் அருந்தும் நீரையும், இஷ்ட தெய்வத்திற்கு அர்ப்பணம் பண்ணியபின் உட்கொள்வீர். சுத்த போசனம் சிறந்தது. ‘இறைச்சியையும் பூசைக்கு வைத்தபின் உண்பவர்களின் இல்லத்தில் நானிருப்பேன்” என்று மகாலக்ஷ்மியே சொல்லியுள்ளாள். தெய்வங்கள் பலவற்றை ஆராதிக்க வேண்டின், உணவை வெவ்வேறாய் வையுங்கள். வடை ஒன்றுள்ளதாயின் பிய்த்துப் பிய்த்து எல்லாருக்கும் வையுங்கள். மாம்பழம் முழுமையாக வைக்கக் கிடைக்கவில்லையேல், வெட்டி வைக்கவும். இளநீராயின் கிண்ணங்களில் கொஞ்சம் கொஞ்சம் ஊற்றி வைக்கவும்; ஒரு தட்டில் வைத்து, ‘எல்லாரும் உண்ணுங்கள்’ என்று சொல்லும் பான்மையில் நிவேதனம் செய்யற்க.

வேண்டுகோள் எந்தப் பாஷையிலும் அமையலாம். சமஸ்கிருதம் மிகச்சிறந்தது. அதனைப் படிப்பதற்கு என்ன கஷ்டம்? ஆறு மாதத்தில் லண்டன் Inter Arts க்குப் படித்துச் சித்தி பெற்றவர்கள் நம்மவர்களில் பலர். மேலோரும் அப் பாஷையில் பேசுவர். தேவர்களைத் தேவபாஷையில் தோத்திரஞ் செய்யும் செம்மை மற்றப் பாஷைகளில் வாராது.

மானுடப் பிறவியெடுத்த நாம் அதன் பயனை விரைந்தடைதல் வேண்டும். உண்டு உறங்கிக் கன்ம வினையின்படி போவோமாயின், சரீரத்தை வளர்த்துப் பிறவிகளைப் பெருக்கினவர்களாவோம். உயர் தெய்வமொன்றனைத் துணைக்கொள்ள எல்லாருக்கும் இயலும். அதுவே சித்திக்கும் முத்திக்கும் வழி காட்டும். பூர்வ புண்ணியமிருப்பின் தெய்வம் பலவற்றைக் காணலாம்; முத்தரையுங் காணலாம். அஃதில்லையேல், முறைப்படி மூடபக்தியுடனாதல் முயல்பவர்களுக்குத் தெய்வம் ஒன்றேனும் வந்து கைதூக்கும். அதில் எனக்கு ஐயமில்லை. தெய்வம் ஒன்றனையாதல் காணாத கண்ணுமொரு கண்ணே!

# வாகீசப் பெருந்தகை

அப்பரும், ஆளுடைப் பிள்ளையும், சுந்தரரும், அருள்மணி வாசகரும், சைவத் தமிழர் மூந்திச் செய்த முதுதவத்தால் வந்தித்தலத்துதித்த பெருந்தகையாளர்; சைவ சமயமென்னும் பொய்யாச் சமயத்தைச் சிறப்புறச் செய்த நான்கு கற்பகதருக்கள்; வேத விளக்கந்தரும் வெள்ளைத் திருநீறும், நாதன் நாமம் 'நமசிவாய'வும் ஆதியின்றி அந்தமின்றி மேதினியில் நின்றிலங்க மாமறைகள் பாடிய மணிக்குயில்கள், மன்னிய உயிரெல்லாம் மண்ணில் நல்லவண்ணம் வாழ, பக்திவழிகாட்டிப் பரமனைப் பாடிப் பணியப் பண்ணுடன் கூடிய பாமாலை தந்து சென்ற திருவருளாளர்கள். சமணமென்றும், சாக்தமென்றும், பௌத்தமென்றும், தம்தம் சமயமே மெய்ச்சமயமென்று நிலைநாட்டிட, ஆள, வந்தாரும் அவர் தம்மொடு சூழநின்றுரும் வாதிட்டும் வழக்கிட்டும், சைவத்தை வேரோடு ஆழக் குழிதோண்டிப் புதைக்கக் கங்கணக்கட்டி வெருண்டெழுந்த போது, தோணிபுரத்தே தோன்றினர் திருஞான சம்பந்தர்; திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வந்துதித்தார். வாகீசப் பெருந்தகை. திருநாவலூரிலே அவதாரஞ் செய்தார், அழகர் சுந்தரர்; பாண்டி நாட்டிலே திருவாதவூரிலே வந்தெழுந்தார் வாதவூர்த்தேசிகர்.

''சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலு
நஞ்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் -
முற்கோலி
வந்திலரேல் நீறுஎங்கே? மாமறை
நூல்தான் எங்கே?
எந்தைபிரான் ஐந்தெழுத்து எங்கே''

என்று அன்னாரின் அருமை பெருமையை, ''சிவானந்தமாலை'' ஆசிரியர் நயம்பட நவில்கின்றார்.

சைவசமயப் பொய்கையிலே மலர்ந்த ஈடிணையற்ற எழில்மலர்கள் இந்நான்கு குரவர்கள். எம்மலர் நன்மலர் என்று எளிதிற் சொல்லலியலாத பொன்மலர்கள். இவர்களில் எம்மனக் கண்ணுக்குக் கனிந்த காட்சிதரும் கவின்மலராக, செவிக்கினிய தேன்பாய்ச்சும் தேவமலராக. தீந்தமிழ்த் தேவாரப் பாமாலைகளைப் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டத் தீட்டிவைத்த சீலராக இருப்பவர்; திருவருட் செல்வரே. இவரை 'மருணீக்கியார்'என்று மனங்குளிர அழைத்தனர், புகழனாரும் மாதினியாரும். 'தருமசேனர்' என சமணசமயக் கூட்டத்தவர் பெருமையோடழைத்தனர்; 'அப்பர்' என்று அன்பொழுக அழைத்தார், ஆளுடைப் பிள்ளையார்.

நாவுக்கரசர் கி. பி. 7-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவர். இவர் இன்தமிழில் அன்பொழுக, அனுபவமுதிர்வொழுக, அருளொழுக பக்தியுடன் பாடி வைத்த தேவாரங்களைப் படித்துணர்வோர் இவரின் 'தொண்டு செய்கோல உருவத்தை' மனக்கண்ணில் தரிசனம் காணலாம். திருஞானசம்பந்தர், இறைவனைத் தந்தையாகவும், தம்மைப் பிள்ளையாகவும் கருதி அன்புசெய்து வழிபட்ட நெறியாளராதலால் அவரைச் சற்புத்திர மார்க்கத்தார் என்பது போலவும், சுந்தரர் இறைவனைத் தோழனாகக் கருதி அன்பு செய்து வழிபட்ட நெறியாளராதலால் அவரைச் சக மார்க்கத்தார் என்பதுபோலவும், மாணிக்க வாசகர் இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் பாவனை செய்து வழிபட்டவராதலால் அவரைச் சன்மார்க்கத்தார் என்பது போலவும், இறைவனை ஆண்டானாகவும் தம்மை அடிமையாகவும் எண்ணி வழிபாடு செய்தார் அப்பர். ஆதலால் அவரைத் தாசமார்க்கத்தார் என்று கூறுவர்.

"ஆற்றேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை யம்மானே"

என்னும் திருஅதிகை வீரட்டானப் பதிகச் சொற்றொடராலும்,

"பழகநான் அடிமை செல்வேன் பதிபசு
பாவஞசா" என்னும் திருக்கோடிகா சொற்றொடராலும்,

"ஆண்டானை அடியேனை ஆளாக்
கொண்டு" என்னும் திருத்தாண்டகச் சொற்றொடராலும் உணரலாம். அன்றியும் திருவானைக்காவிற் பாடிய திருத்தாண்டகப் பாடல்கள் பத்தின் இறுதியடி ஒவ்வொன்றிலும்,

"அல்லகண்டங் கொண்டடியேன் என்
செய்கேனே?" எனப் புலம்புவதனாலும் இவ்வுண்மையை உணரமுடிகிறது.

மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களாலும் வழிபாடியியற்றிய பெருமையுடையவர் வாகீசர். அவர் பாடிய தேவாரங்கள் 4900 என்று சுந்தரமூர்த்திநாயனார்,

"இணைகொள் எழெழு நூறிரும் பனுவல்
ஈன்றவன் திருநாவுக்கரையன்" எனப் பாடிய திருநின்றியூர்த் தேவாரத்தால் குறிப்பிடுகின்றார். திருமுறை கண்ட புராணம் பாடிய ஆசிரியர்,

"திருநாவுக்கரையனெனும் செம்மையா
ளர் தீஅமணர் சிறை நீங்க அதிகை
[மேவும்
குருநாமப் பரஞ்சுடரைப் பரவிச்சூலைக்
கொடுக் கூற்றுயின என எடுத்துக்
[கோதில்
ஒருமானைத் தரிக்கும் ஒருவனையும்
காறும் ஒருநாற்பத்தொன்பதினாயிர
[மதாகப்
பெருநாமப் புகலூரிற் பதிகம் கூறிப்
பிஞ்ஞகனார் அடியிணைகள்
[பெற்றுளாரே"

எனப் பதிகமொன்றுக்குப் பத்துப் பாட்டென்ற கணக்கு வைத்து நாற்பத்தொன்பதினாயிரம் பாடல்களையுடைய பதிகங்களைப் பாடியதாகக் கூறுகிறார். ஆனால் இப்போது கிடைப்பவை 312 பதிகங்களே. பன்னிரு திருமுறைகளில் 4-ம், 5-ம், 6-ம் திருமுறைகள் திருநாவுக்கரசருடைய தேவாரங்கள். 4-ம் திருமுறையில் 113 பதிகங்களும், 5-ம் திருமுறையில் 100 பதிகங்களும், 6-ம் திருமுறையில் 99 பதிகங்களும் உள்ளன. இவர் பாடிய தேவாரங்களில் 125 சிவத்தலங்களைக் குறிப்பிடுகின்றார். சிவத்தலங்களோடு சம்பந்தப்பட்ட 275 திருப்பதிகங்கள் காணப்படுகின்றன. பொதுத் திருப்பதிகங்களாக 37 பதிகங்கள் உள்ளன. மொத்தத்தில் 3066 திருப்பாடல்களே இன்று எஞ்சியுள்ளன.

வாகீசரின் உணர்வும், உயிர்த்துடிப்பும், உள்ளக் கனிவும், செழுந்தமிழ்ச் சொல் நலமும் நிரம்பப்பெற்ற தேவாரங்களைப் பாடினார். தாம்பட்ட இன்பதுன்ப அனுபவங்களையெல்லாம் இவர் தம்தேவாரத்தில் வடித்துத் தந்திருக்கிறார். இவருடைய திருவாக்குக்கு ஒரு தனித்தன்மையுண்டு. சிறந்த கவிஞனின் இயல்பைப் புலப்படுத்தும் தன்மையன அவை. உலக வாழ்வில் பலவகை அல்லல்கட்குட்பட்டவர் அப்பர். ஆதலால் இவருடைய பாட்டில் உள்ளத்தை உருக்கும் பகுதிகள் பல உண்டு. நமது வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் உணர்ந்துகொண்ட அனுபவத்தைத்தான் அப்பரும் சொல்கிறாரோ என்று எண்ணக்கூடிய வகையில் உள்ளது இவர் பாடல். நம்மைப் போலவே ஆசையும், துடிப்பும், மயக்கமும், தெளிவும், வேதனையும், விரக்தியும் உடையவராக நின்று பேசுகிறார். பலகாலம் துன்பக்கடலில் ஆழ்ந்து கரையேறிய அப்பருக்கு இறைவன் கனியாய், அமுதமாய், பண்ணாய், பாட்டாய் இனிக்கின்றான்.

அப்பருடைய வாழ்க்கையிலே இவர் மறக்க முடியாத அளவுக்குத் துன்பம்

செய்து துடிக்க வைத்தது ஒரு நோய். அதுதான் கொடிய சூலைநோய். தந்தை தாயார் அற்ற காலத்திலே அருகிருந்து ஆதரித்து அன்புசெய்து அறிவும் ஊட்டி வைத்த அக்கா திலகவதியாரை மறந்து, 'தலைபறித்துண்ணும்' சமணர்கள் ஆசை வலையில் பிணைப்புண்டு அவர்கள் மத்தியில் அறிவுச் சுடராய், அரும்பெருந் தலைவனாய் 'தருமசேனர்' எனும் நாமத்தோடு தருக்குற்று வாழ்ந்த காலத்தில் இவர் செருக்கறுக்க வந்து சேர்ந்தது அச் சூலைநோய். இவரின் வாழ்க்கைப் பாதையிலே ஒரு பெரும் திருப்பத்தை உண்டாக்கியது; சைன சமயத்தாரின் இறுமாப்பு நீங்கும் படி செய்தது; அவர் மேலிருந்த அபிமானமும் பற்றும் அகல வைப்பித்தது; அக்கா திலகவதியாரை அடைய வைத்ததும் அந்நோய்தான்; திருநீற்றின் பெருமையை உலகத்தார் உணர வைத்ததும் அந்நோய் தான். அரன் நாமம் மறவாச் சிந்தையராக அப்பர் வாழவைத்ததும் அந்நோய் தான்; சைவமும் தமிழும் சிறப்புறப் பண்ணமைந்த செந்தமிழ்ச் சொல்லோவியங்களை வாயாரப் பாட வைத்ததும் அந்நோய்தான், 'இவ்வுலக வாழ்வு இனிமேல் வேண்டாம், இறைவனடியிலே இனிதிருப்போம்' எனப் பிறவியை ஒருங்கே வெறுக்கச் செய்ததும் அந்நோய்தான்!

நோய் முற்றிவிட்டது; நோய் கூற்றுவனாக வந்து வருத்திக்கொண்டிருக்கிறது; உயிர் தவிக்கிறார்; எந்தக் கணம் உயிர் போய்விடுமோ என்ற அச்சமும் வாகீசரின் மனதிலே எழுந்துவிட்டது; திலகவதி அம்மையாரின் அறிவுறுத்தலின்படி அப்பர் வீரட்டானேசர் திருக்கோயிலின் வாசலுக்கு வந்து சேர்ந்து விட்டார்; தீயிலிட்ட தளிர்போல, தூண்டிலிற் புழுப்போல. அப்பரினுடலையும், உயிரையும் சூலநோய் வருத்த அவர் துடித்துக்கொண்டிருக்கின்றார். இரு கைகளையும் தலைமேற் குவித்தார்; உள்ளமுருகிக் கண்ணீராறுகப் பெருக்கெடுக்க, உடல் நடுங்க, உயிர் துடிக்கத் தழுதழுத்த குரலிலே,

"கூற்றாயின வாறுவிலக்ககலீர்
கொடுமை பலசெய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே யிரவும் பகலும் பிரியாது
வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென்னகம்படியே குடரோடு
துடக்கி முடக்கியிடா
ஆற்றேனடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே',

என விண்ணப்பஞ் செய்தார். வாகீசர் வாயிலிருந்து முதன்முதலாக வெளிவந்த தேவாரம் இது. நோயின் குணமும் இறைவனிடம் தாம் வேண்டி நிற்கும் பொருள் என்ன என்பதும் விரைவும் புலப்பட, "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என அடியெடுத்துப் பாடினார். சிவனடி மறவாச் சிந்தையனாவேன், மீளா அடிமை உனக்கே ஆளாய் இனிமேல் வாழ்வேன் என்ற பொருள் அவர் புலம்பலில் தொனிக்கிறது. நான் அறியாமற் செய்த பிழைகளைப் பொறுத்தருள் அப்பனே என மன்றாடுகின்றார். நீ மன்னித்தாலொழிய எனக்கு வாழ்வில்லை என இரக்கின்றார். வீரட்டானேசரை வேண்டி மேலும் ஒன்பது தேவாரங்களைப் பாடி இப்பதிகத்தை முடிக்கின்றார். சூலநோய் செய்த இடரை அவலச் சுவை ததும்ப, அதன் கொடுமையால் அவர் அனுபவித்த துன்பம் விளங்க,

"குடரோடு துடக்கி முடக்கியிட"
"வயிற்றோடு துடக்கிமுடக்கியிட"
"சுடுகின்றது சூலை'
"வலிக்கின்றது சூலை"
"வயிற்றினகம்படியே கலக்கிமலக்
கிட்டு"

"வேர்த்தும் புரண்டும் விழுந்தும்" என்னும் சொற்றொடர்களால் கேட்போருள்ளம் உருகும்படி நெகிழ்ந்து நெகிழ்ந்து பாடுகின்றார். நாலாந் திருமுறையில் இப்பதிகம் முதற் பதிகமாக அமைந்துள்ளது.

நாவுக்கரசரின் அன்பினைக் கண்டு இறைவன் அருள்செய்தார். அவன் இவரை 'திருநாவுக்கரசர்' என அழைத்தான்! அச்

சிறப்புப்பெயரே வடமொழியில் வாகீசரென வழங்கலாயிற்று. வாகீசர் அன்றுதொட்டு சிவனை மறவாச் சிந்தையர் ஆகிறார். சிவத் தொண்டராக, சிவன் நாமமே சிந்திப்பவ ராக திருக்கோவில்கள்தோறும் சென்று சென்று தேவாரங்கள் பாடிச் சிவனைத் துதிக்கின்றார்.

அப்பர் மகா பிடிவாதக்காரர். தன் மனத்தைத் தெய்வ வழிப்படுத்த, அவனைச் சென்றடைந்து அவனோடுகூடி முத்திபெற முயற்சிக்குமாறு ஒரே பிடிவாதமாக நிற்கிறார். அவ்வாறு நின்று வெற்றியும் கண்டவர். ஐம்புலன்கட்கும் தன் அங்கம் முழுவதற்கும் அப்பரிடும் கட்டளைகள் ஆயிரம், தன் நெஞ்சைப் பார்த்து,

"நிலைபெறுமா றெண்ணுதியேல்
நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய
கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு
மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப்
புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி
போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம்
ஆதி யென்றும்
ஆரூரா னென்னென்றே
அலறா நில்லே" எனப்

பணிக்கின்றார்.

இறைவனைக் கைலையிற் காணவேண்டுமென்ற ஆசை, அப்பருக்குத் தள்ளாத வயது ஆகிவிட்டது; எனினும் இரவு பகலாக நடக்கிறார்; கால்கள் அலுத்துவிட்டன; தவழ்ந்து தவழ்ந்து செல்கிறார்; தவழவும் முடியவில்லை; நெஞ்சால் ஊர்ந்து செல்லுகின்றார். உடலெல்லாம் ஓய்ந்தும் உள்ளம் ஓயவில்லை வைராக்கிய நெஞ்சினராய், 'கைலைநாதனைக் கண்டல்லால் மீளேன்' என்ற எண்ணத்தராய் ஊர்ந்து செல்கிறார் வாகீசர்! இக்காட்சியை எம் மனக்கண்ணில் காண்போமானால், அப்பரின் பிடிவாதம் எத்துணையது என உணர்வோம். 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்' என்று சொல்லவல்லவர் நாவுக்கரசர் ஒருவர்தான். மன்னன் கட்டளையை மீறினால் என்ன துன்பம் வருமெனத் தெரிந்தும் இறைவனுக்கன்றித் தன்னை யாருக்கும் பணிக்காத வைரநெஞ்சு வாகீசருக்குத்தான் இருந்தது.

இதே அப்பர்தான் இறைவன் முன்னிலையில் வரும்போது, 'குலம் பொல்லேன்; குணம் பொல்லேன்; குறியும் பொல்லேன்; குற்றமே பெரிதுடைய கோலமாய, நலம் பொல்லேன்; நான் பொல்லேன்' என உணர்வும் உயிரும் உடலும் ஒடுங்கி நின்று ஓலமிடுகின்றார்

அப்பருடைய உணர்ச்சித் துடிப்பையும் அனுபவ முதிர்வையும் அனுபவிக்கவேண்டுமானால், அவர் பாடிய திருத்தாண்டகங்களைப் படிக்கவேண்டும். 'தாண்டக வேந்தன்' என இவரை அழைத்தது 'ஆயிரந்தரம் தகும் தகும்' என ஆனந்தப்படுமளவிற்குத் தாண்டகம் பாடியுள்ளார். 99 பதிகங்கள் திருத்தாண்டகப் பாடல்களாகவுள்ளன. 981 பாடல்கள் மட்டும் இன்று எஞ்சியிருக்கின்றன. இவைகள் ஆறாந் திருமுறையில் அடங்கியுள்ளன.

"முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்" எனத் தொடங்கும் திருவாரூர்த் திருத்தாண்டகமும்,

"காரார் கழற்கொன்றைக் கண்ணிசூடிக்
கபாலங் கையேந்திக் கணங்கள் பாட"

என வரும் கோயில் புக்க திருத்தாண்டகமும்,

"புகழொளியைப் புரமெரித்த புனிதன்
றன்னைப்
பொன்பொதிந்த மேனியானைப்
புராணன் றன்னை"

என அதிரும் திருமுதுகுன்றத் திருத்தாண்டகமும்,

"எண்ணுகேன் என்சொல்லி
எண்ணுகேனே
எம்பெருமான் திருவடியே
யெண்ணி லல்லால்"

எனப் பாடும் திருப்புகலூர்த் திருத்தாண்டகமும் என்றும் எவர்க்கும் இன்பம்தரும் இனிய பாடல்கள்!

தில்லைக் கூத்தனின் எடுத்த பொற்பாதத்தைக்கண்ட செல்வர் வாகீசர், "மனிதப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே" என ஏகார அசைநிலை யேற்றித் தமது வியப்பையும் அனுபவத்தையும் இவ்வையகத்தார்க்கும் எடுத்துக் கூறிச் சென்றார். எம்மினிய தமிழாளர் நாவுக்கரசர்.

சைவம் உள்ளமட்டும், தெய்வ எண்ணம் மக்கள் மனதில் அழியாநிலை இருக்குமட்டும் வாகீசரின் நினைவும், தமிழ்மணம் கமழும் இனியபாடல்களும் உயிர்வாழ்ந்து ஒளிபெறுமென்பதில் ஐயமில்லை.

"இடையறுப் பேரன்பு மழைவாரு
மிணைவிழியு முழவாரத்தின்
படையறுத் திருக்கரமுஞ் சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சு
நடையறுப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப் பாடற்
றொடையறுச் செவ்வாயுஞ் சிவவேடப்
பொலிவழகுந் துதித்து வாழ்வாம்"

— *மாதவச் சிவஞான யோகிகள்.*

நா. வல்லிபுரம்,
(ஆங்கிலம் II)



"பக்தியால் பெறப்படும் ஞானம் ஒருவகையானது. தியானத்தினால் வரும் ஞானம் ஒருவகையானது என்றும், இறைவன் தரிசனத்தால் அடையும் ஞானம் மேற்கூறிய வற்றைவிட முற்றிலும் வேருன ஞானம் என்றும் தெரிந்து கொள்ள வேண்டும்"

— இராமகிருஸ்ணர்

# அழகுத் தெய்வம் முருகன்

சதுர் யுகங்களில் கடைசி யுகம் கலியுகம். இக்கலியுகம் மற்றைய நான்கு யுகங்களிலும் மிகக் குறைந்த காலத்தைக் கொண்டதாகும். இக்காலத்தில் மானிடர் தம் இச்சைப்படி, புண்ணியத்தை விலக்கிப் பாவசாகரத்தில் மூழ்கிக்கிடப்பர் என்றும், இதற்கு விமோசனம் பெற விரும்புவோர் எந்நேரமும் முருகனது நாமத்தை 'நாம பஜனை' செய்யவேண்டும் எனவும் நாரதர் கூறியிருக்கின்றார். குகனின் நாமத்தை ஜபிப்போருக்குக் குறையேதுமில்லை. அவனது மயிலுண்டு; பயமில்லை வேல் உண்டு; வினையில்லை. நாம பஜனைகூடச் செய்ய நேரமின்றித் தவிக்கும் நாம் இதுபோன்ற கட்டுரைகளையாவது வாசித்துப் பலனை அடைவோமாக. பழவர்க்கங்களை அவற்றின் உருசியின்பால் ஈர்க்கப்பட்டு உண்ணும் நம்மை அவற்றின் சத்துக்கள் நம் உடலில் கலக்கின்றனவன்றோ!

அழகுத் தெய்வமாம் முருகன் ஒரு மதத்தாருக்கு உரியவன் அன்று. முருகன் என்பது நம்மைக் காத்துவரும், சர்வ வல்லமை பொருந்திய தெய்வத்தின் நாமங்களில் ஒன்றாகும். முருகன் என்னும் சொல், முருகு என்னும் சொல்லடியில் இருந்து பிறந்ததாகும். முருகு என்பது மணம், இளமை, கடவுட்டன்மை, அழகு என்னும் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. முருகை உடையவன் முருகன்; ஆகவே முருகனும் மணம், இளமை, கடவுட்டன்மை, அழகு என்னும் குணங்களைக் கொண்டுள்ளவன் என்பது புலப்படுகின்றது. எச்சமயத்தவரும் இக்குணங்கள் கடவுளுக்கு உண்டு என ஒத்துக்கொள்வர். அழகற்ற இடங்களை, அழகற்ற மானிடரை யாரும் விரும்பார். இதனால் அன்றோ அழகற்றவர்கள் தம்மை முகப்பூச்சு, வாசனைத் திரவியங்கள் கொண்டு அலங்கரிக்கின்றனர். அழகை இரசிக்காதார் யார்? பெண்களின் அழகை வெறுத்த முனிவர்கள்கூட ஆண்டவனின் அழகை, சக்தி தாயின் அழகை இரசிக்கவில்லையா? முருகன் அழகன்; அவனை இரசிக்காதார் யார்? இரசிப்பின்பால் மையல்கொண்டு மதிக்காதார் யார்? அவனை மதித்தொருகாற் சென்று அவனது ஆலயத்தை மிதிக்காதார் யார்? நல்லூர்க் கந்தன் ஆலயம் இதற்கொரு சான்றாகும்.

தெருவில் விளையாடிக்கொண்டிருக்கும் ஒரு அழகான குழந்தையைக் காண்கிறோம். அதன் அழகின்பால் ஆசை பிறக்கின்றது; அப்பிள்ளையின் பேரென்ன, ஊரென்ன, பெற்றார் யாவர் என்பதில் நமக்கு அக்கறை ஏற்படுவதில்லை. அதனைக் கட்டிக் தழுவ முயற்சிக்கின்றோம். முடிந்தால் தழுவியும் விடுகின்றோம். முருகன் அழகன்; என்றும் இளையோன் அவனது இளமையில், அழகில் மயங்கி அவனைக் கட்டித்தழுவ முயற்சிக்கும் எத்தனையோ கோடி, கோடானு கோடி ஜீவ ஆத்மாக்களுள் அடியேனும் ஒருவன். இது நிறைவேறும்நாள் எந்நாளோ? அந்நாள் பொன்னாள். அவனது அழகின் ஈர்க்குந் தன்மையாலன்றோ அருணகிரிநாதர், தம் பாடல்கள் யாவற்றிலும் ''முருகன், குமரன், இளையோன்'' எனத் துதித்துப் பாடுகின்றார். நம்மால் அவனது அழகை வியந்து பாட முடியாது போனாலும், ''முருகா! முருகா!!'' என்று அடிக்கொருதரம் கூறினாலே, ஓராயிரம் பாவங்கள் தொலையும் என்பர் பெரியோர். நமது இதயத் துடிப்பு லப்—டப் என்பதை விட்டு முரு—கா, முரு—கா என அடிப்பதாகப் பாவனை செய்தாலே போதும். அதுவே நமது கர்மவினையை வேரறுக்கவல்ல கருவி.

அழகு உள்ள இடத்தில் இளமை உண்டு. இயற்கை அழகுகூட காலவேறுபாட்டால் தனது இளமையை, அழகை இழக்கின்றது. காலையில் தோன்றும் மலரின் அழகு மாலையில் மறைந்துவிடுகின்றதன்றோ! இது இயற்கையின் நியதி. முருகனது இளமையும், அழகும் இந்த நியதிக்கு

அப்பாற்பட்டவை: அவன் ''அழியா அழகுடையான்''. இதே அழகு இராமருக்கும் உண்டு என வியந்த கம்பர், ''மரகதமோ, மழைமுகிலோ...... அய்மா இவன் அழியா அழகுடையான்'' எனப் பாடுகின்றார். பண்டைய மன்னர்கள் தாங்கள் கண்டு, கேட்டு, உற்று, உணர்ந்தவற்றைச் சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும் தீட்டினர்; தீட்டுவித்தனர். அவர்கள் அநுபவித்த அழகு, இன்றும் நாம் அநுபவிக்கக்கூடியதாகக் கிடக்கின்றன. ஏன்? அழகுக்கு மரணம் இல்லை. உண்மையான அழகு, அழியா அழகுதான். முருகன் அழகன்; அழகுக்கு மரணம் இல்லை. ஆகவே முருகனுக்கும் அழிவு இல்லை. நக்கீரனார் தமது திருமுருகாற்றுப் படையில், அழகின் கூறுகளைக் காண்பிக்கையில், ''முருகனின் வனப்பு கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு'' என்கிறார். இதிலிருந்து கையால் செய்யப்படுவது இயற்கைபோலஇருந்தாலும் அஃது அழியா அழகாகாது. ஆகவே இயற்கைதான் உண்மையான அழகு. எது இயற்கை? சூரியோதயம், சந்திரோதயம், வயற்காட்சிகள், வானத்திற் காணப்படும் மாயா ஜால வர்ணங்கள், வானவில் இவைதான் இயற்கை. செயற்கை, இயற்கை போன்று ஆரம்பத்திற் காணப்பட்டாலும், காலச் சக்கரத்தில் 'எங்கள் அழகு இவ்வளவுதான்' எனக் கூறிவிட்டு மறைந்து ஒளிந்து விடுகின்றது. முருகனின் அழகு அழியா அழகு. கடற்கரையில் அதிகாலையில் நின்று அநுபவிக்கும் சூரியோதயத்தில் முருகனது அழகு தெரிகின்றதைக் காணலாம். சிவஜெளிபாத மலையில் உடல் உதறல் எடுக்க எடுக்க நின்று, ஏதோ இயற்கை அழகை இரசிப்பது போன்று பாவனை செய்வதைவிட, நமது கடற்கரையில் நின்று அநுபவிக்கும் ஆனந்தமே பேரானந்தம். அக்காட்சியை உள்ளன்புடன் தினமும் நோக்கிவந்தால், மயில்வாகனத்துடனும், வேல் ஆயுதத்துடனும் முருகன் தோன்றுவான். இதை அநுபவிக்கச் சித்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். எதனையும் விஞ்ஞான ரீதியாகவே உற்று நோக்கும் ஆசிரிய, மாணவ சமுதாயம் என்னை எதிர்க்கக் கூடும். ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'' என்பதே எனது பேரவா.

நமது பழந்தமிழ்ப் புலவர்கள் யாவரும் முருக வழிபாடு உடையவரேயாவர். இக் கூற்றினை மறுப்பவர் யார் உளர்? இயற்கையை வியந்து பாடாத புலவர் யாருளர்? ஒரு நாட்டினை வர்ணிக்கப் புகும் புலவன், முதலில் நாட்டு வர்ணனை, பின்னர் நில, நீர், மலை வளங்களின் வர்ணனை என இயற்கை அழகையன்றோ வர்ணிக்கின்றான். பின்னர்தான் அந்நாட்டின் மக்கள், மன்னர், அவர்கள் தம் குணநிசயங்கள் வெளிவருகின்றன. அழகற்ற, சுவையற்ற பாடல்கள் சங்கப்பலகை ஏறவேயில்லை. கம்பர் பெருமான் இராமாயணத்தில் மருதநில வர்ணனையில்,

''தண்டலை மயில்களாடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம் வீற் றிருக்கும் மாதோ'' எனப் பாடுவதில் உள்ள இயற்கை அழகுதான் என்னே! அழகை இரசிப்பவன் புலவன். முருகன் அழகு வடிவானவன். ஆகவே புலவர்கள் யாவருமே முருக பக்தர்கள் என்பதில் தவறுண்டோ? அழகையும் முருகனையும் பிரிக்கமுடியாது ஆகவே அழகை விரும்புபவன் (தன்னையறியாமலே) முருகனை வழிபடுகின்றான்.

அழகன் முருகனைப்பற்றி யறியாதார் அறியாதாரே! தமிழ்மொழியைக் கற்கும் அனைவருக்கும் முருகனைத் தெரியும்; அவன் தன்னை வைதாரையும் வாழவைப்பவன் அன்றோ! ''கந்தறகம தெய்யோ'' எனப் பௌத்தர்கள் அழைப்பது நமது அழகுத் தெய்வம் முருகனையன்றோ. பௌத்தர்களுக்கே அவ்வளவு ஈடுபாடு என்றால் பிறக்கும்போதே சைவர்களாகப் பிறக்கும் தமிழர்களாகிய நமக்கு, எவ்வளவு ஈடுபாடு இருக்கவேண்டும்? மற்றயச் சமயத்தினரும் தத்தம் குலதெய்வத்தை நன்கு அலங்கரித்து விழாவெடுக்கும்போது, அத்தெய்வத்தின் அலங்கரிப்பில் மெய்சிலிர்த்து நிற்கையில் அழகு அவர்களை ஆட்கொள்ளு

கிறது. அழகுக்காக, அழகுபடுத்தி அழகை வழிபடுபவர்கள் அழகன் முருகனை வழிபடுகின்றனர் அல்லவா? ஏனெனில் அழகே முருகன்; முருகனே அழகு.

ஆதியில் தமிழர்கள் தாம் வாழ்ந்த இடங்களுக்கேற்ப பல்பல நாமங்களைச் சூட்டித் தெய்வத்தை வணங்கினர். அதற்குக் காரணம் அவர்கள் தாம் வாழ்ந்த இடங்களில் கண்ணுற்ற இயற்கையின் அழகே அன்றி வேறில்லை. மலையில் வாழுங்கால், மலையின் அழகுக் காரணமானவனைச் ''சேய்'' என்றும், காட்டின் அழகுக்குக் காரணமானவனை ''மால்'' என்றும், மருத நிலத்தில் வாழுங்கால் ''வேந்து'' என்றும், கடலின் இயற்கை அழகினை வியந்து அதற்குக் காரணமான இறைவனை ''வண்ணம்'' எனவும் அழைத்தனர். ஆகவே தமிழன் வாழ்க்கை என்று மலையில் ஆரம்பித்ததோ அன்று தொட்டு இன்று வரை முருகன் தமிழ்த் தெய்வமாகிவிட்டான்.

மலையில் வாழுங்கால் நம் மூதாதையர் முருகனுக்குச் சூட்டிய பெயர்களுட் சில, ''குறிஞ்சிக்கிழான்'', 'மலைக்கிழவோன்'' என்பன. நம் மூதாதையர் மலையில் வாழ்ந்த காலம் எக்காலமோ அக்காலமே முருக வழிபாடு தோன்றிய காலம் ஆகும். அக்காலம் இன்னதுதான் என்று ஆராய்ச்சியாளர்களைத் தவிர வேறு யாரால் வெளிப்படுத்த முடியும்? தேனையும் தினைமாவையும் கலந்து முருகனுக்கு உகந்த படையல் ஆக்கித் தமிழன், மலையில் முருகனை வழிபட்ட காலமே, மேற்படி நாமங்கள் முருகனுக்குச் சூட்டப்பட்ட காலங்கள் ஆகும். இது கொண்டு முருகனுக்குரிய மேற்படி நாமங்கள் ஒருகால எல்லைக்குட்பட்டவை என்று நாம் முடிவு கட்டிவிட முடியாது. ஏனெனில் மனிதன் என்று இவ்வுலகின் முருகினைக் கண்டு இரசித்து, இவ்வழகிய உலகினைப் படைத்தவனும் அழகாய்த்தான் இருக்கவேண்டும் என முடிவு கட்டினனோ அன்றே முருக வழிபாடு தோன்றிவிட்டது. ஆகவே மேற்படி நாமங்கள் தாம் வசித்த சூழலுக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட்டவையே அன்றி வேறில்லை.

இக்காலத்திலே இயற்கை அழகை இரசிப்பவர்கள் குறைவு. அப்படி இரசித்தாலும், இரசிப்பவர்களை நையாண்டி செய்வோர் பலர். காரணம் இது ''நைலோன்'' யுகமாகிவிட்டதுதான். அசலுக்கும் நகலுக்கும் வித்தியாசமே தெரியாது திண்டாடும் நூற்றாண்டு இது. பெண்கள் தம் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டு எனச் சிவபெருமான் நக்கீரருடன் வாதாடியதும், பெண்கள் சூடிக்கொள்ளும் மலர்களின் இயற்கை மணம்தான் அஃது என நக்கீரர் வாதாடியதும் பழங்கதை என்கிறோம்; இன்று? மணம் நிறைந்த இயற்கை மலர்களைச் சூடிக் கொள்ளும் மங்கையர் குறைவு. ஆதலால் இயற்கை மணமும், மலரும் இல்லை மங்கையர் தம் கூந்தலில் இவ்விடத்தைப் ''பிளாஸ்ரிக்'' மலர்கள் பிடித்துவிட்டன. எல்லாம் செயற்கை மயம். என்னே நமது மடமைத்தனம். நாமே செயற்கைக்கு அடிமையான பின்பு இயற்கையை இரசிப்பது எங்ஙனம்? இயற்கை அழகை இரசிக்கக் கற்பனைத் திறன் வேண்டும். கற்பனைத் திறன் படைத்தோர் இதனை ஒத்துக்கொள்வர். அவர்களே வெகு இலகுவில் முருகனைக் காணும் பாக்கியம் பெற்றவர்கள். இயற்கையழகு, இயற்கை அழகு என்கிறீரே. அது எவற்றில் உண்டு என்று கேட்பது என் காதில் விழுகின்றது.

குழந்தை, பெண்மை, மலர், பறவை, சூரியன், திங்கள் இவற்றை அவதானியுங்கள்; இயற்கையை இரசிக்கும் நோக்கத்துடன் உற்றுநோக்குங்கள். இரசிப்பது ஒரு தனிக்கலை. இரசிப்பில் ''கல்லைக் காண்போர் கல்லைத்தான் காண்பர்; நாயைக் காணமாட்டார்கள்.'' இவற்றில் பெண்மையிலும் கருத்தைச் செலுத்தலாமா என்னும் கேள்வி எழலாம். இங்கு பெண்மை என்பது காம இச்சையுடன் நோக்கும் என்புந்தோலும் ஆகாது. காம இச்சைக்கு உட்பட்டு வாழ்க்கையைத் தொடங்குபவன்கூட அப்பெண்ணிலுள்ள பெண்மையைத், தாய்மையை உற்று நோக்குங்கால் அதில் முருகைக் காண்பான். முருகைக் காண்பவன் பெண்ணில் முருகனைக் காண்பது எளிதா? அருணகிரிநாதர் தம் வாழ்

வின் ஆரம்பத்தில் பெண்ணில் முருகைக் காணுது என்னையும் தோலையும் இரசித்தார். அதன் பயனுய் நோய் வாய்ப்பட்டு முருகனை அறியாது தற்கொலை செய்யத் தலைப்பட்டு முருகப் பெருமானுல் ஆட்கொள்ளப்பட்டார். இயற்கை அழகையும், முருகனையும் அறியாது இருந்து வாளுளை வீணுளாக்கிய அவர், ''சரண கமலாலயத்தை அரைநிமிட நேர மட்டிலாவது தியானிக்காமல் இருக்கலாமா?'' என்று கேட்கிருர். அப்படிச் சிந்தியாமல் இருந்ததானே நான் இத்தனை நோய்வாய்ப்பட்டேன் என்பதை,

''மாதர்களை மேவிய வராசைதனிலே
சுழல சிலநாள் போய்த்
தோல் திரைகளாகி நரையாகிக்
குருடாகி யிரு
கால்கள் தடுமாறிச் செவிமாறி பசு பாச பதி
சூழ் கதிகள் மாறிச் சுகமாறித் தடியொடு
திரியுறு நாளில்
சூலை சொறி பீளை வலி வாதமொடு
நீரிழிவு
சோகைகள் மாலை சுரமோடு பிணி
தூறிருமல்
சூழலுற மூல சுகமாலமென நாறி
உடலழிவேனே''

என்னும் பாடலில் விளக்குகின்ருர்.

இதே வருந்துதலை நாமும் வருந்தக்கூடும். செய்யக்கூடிய அட்டூழியங்களை எல்லாம் நமது வாலிபப் பராயத்தில் செய்து விட்டு முதுமைப் பராயத்தில் உருத்திராட்சமாலைஎன்ன! நீறிட்ட நெற்றி என்ன! அரையில் சமயச் சின்னங்களுடன் கூடிய உத்தரியம்என்ன! இவையாவும்என்ன பிரயோசனத்தைத் தரும்? ஆகவே நாமும், 'போனுல் திரும்பி வராத' வாலிபப் பராயத்தில் பெண்மையை மதித்து, பெண்மையையுணர்ந்து நடப்போமாக; இதுவும் முருகவழிபாடேயாகும். நமக்குக் கிடைத்த இவ்வரிய தருணமாம் வாலிபப் பராயத்தைப் பிரயோசனப்படுத்துவோமாக. பெண்ணில் தாய்மையைக் கண்டு அத்தாய்மை மஹா சக்தியின் அங்கம் எனக் கண்டு மதிக்கும் தமிழர்களாகிய நாம், அத்தாய்மையில் அழகைக் காணும் நாம், கேவலம் வெறும் என்புக்கும் தோலுக்கு மடிமையாகி நம்மை நாமே அழித்துக் கொள்ளுகிறேமே! இங்கே இருப்பதோ சில காலம்; அதற்குள் ஏனே மமகாரம். ஆகவே பெண்களை நம் உடன் பிறப்புக்களாக மதித்து அவர்கள் மூலமாக முருக வழிபாடு ஆற்றுவோமாக.

ஆண்டவனைத் தாயாக்கி, தந்தையாக்கி வழிபடுவோர் சைவப் பெருங்குடி மக்களாகிய நாம் மாத்திரம்தான் என்று மார்தட்டிக் கூறலாம். ஆண்டவனை அர்த்த நாரீஸ்வரனுக்கி, நாரியை சக்தி தாயாக்கி, சக்தியை முக்கூறுகளாக்கித் துர்க்கை, லக்ஷ்மி, வாணி என முத்தேவியரைக் கண்டு, நவராத்திரி விழாவெடுத்து முத்தேவியரின் அழகைப் பாடிப் பணிவோர் நாம். அவ்வழகில் அதுவும் அழியா அழகில், முருகனின் பிரதி பிம்பத்தைப் காண்போரும் நாமே. அழகே முருகன்; முருகனே அழகு அல்லவா? முருகனையும் அழகையும் பிரிக்க முடியுமா என்ன? நவராத்திரி விழா மாத்திரமல்ல தமிழனின் விழாக்களில் எல்லாம் அழகுக்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது. எங்கெல்லாம் அழகு தென்படுகிறதோ அங்கெல்லாம் முருகன் தோன்றுவான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

''விண்ணதிற் கதிரோன் வந்து விரிகடல்
தோன்றும் வேளை
கண்ணுறு மணியே என்று கடலுறு
முன்னை நோக்கிப்
பண்ணுறு மொழியார் பாடிப் பலர்
புகழ்ந்தேத்தி வாழ்த்தக்
கண்ணுறு காட்சி நல்குங் கதிரைவேல்
போற்றி! போற்றி!!''

என்று பண்டிதர் செ. பூபாலபிள்ளை ஐயா அவர்களுடன் நாமும் சேர்ந்து அழகுத் தெய்வமாம் கந்த வேளை எந்நாளும் போற்றிப் புகழ்ந்தேற்றுவோமாக.

அ. சோமாஸ்கந்தர்
(அ. தோ. பெர்னுண்டோ)
ஆங்கிலம் 1-ம் வருடம்

# ஈழத்துச் சைவ சம்பந்தம் திருக்கைலாச ஞானசம்பந்த மயமானது

[வித்துவான், சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை B. A.]

உலகிலுள்ள சமயங்களுள் சைவ சமயம் ஓர் ஒப்பற்ற சமயமெனப் பிறர் தாமுங் கருதுகின்றனர். சைவ சித்தாந்த நெறிக்கு இணையான தொன்று இல்லையென்பது போப்பையர் முதலியோரின் கருத்தாகும்.

இறைவன் ஒருவனே; ஏன் இத்தனை சமயங்கள் என்பது ஒரு கேள்வி. உடலால் மனிதன் ஒருவனே ஆனால் முக அமைப்பிலே, ஆற்றலிலே, இன்ப துன்ப அநுபவத்திலே எத்தனை வித்தியாசம். இவ்வித்தியாசத்திற்கு ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு விளக்கம் சொல்லும். ஆனால் நமது சைவ சமயம் சுருக்கமாக "வினை" தான் காரணம் என்கின்றது. இவ்வினையை "அநுபவித்து"ப் பேரின்பம் பெற உயிருக்கு உதவுவது இவ்வுலகம். இது மாயையின் காரியம்; மாயை மும்மலங்களுள் ஒன்றாயினும் விடிவாமளவும் விளக்குப்போல உதவுவது சைவ சமய மாயை வேறு, புறச் சமய மாயை வேறு.

உயிர்களுக்கு நிலையான இன்பத்தை அளிப்பவன் இறைவன். அதற்குத் தடையாயிருப்பது தளைமலம்; துணையாயிருப்பது திருவருள். உயிர்கள் பேரின்பம் அடைவதற்காகவே இறைவன் ஐந்தொழில் புரிகின்றான்; நடராசனானான். ஆகவே இறை, உயிர், தளை என்னும் மூன்று என்னும் உள்பொருள்கள் "உலகம் ஒரு பொய்த் தோற்றம்; "மாயை"; உயிர் ஒன்றே ஒன்றுதான் உண்டு; அது பிரமம் மாத்திரமே; வேறு உயிர்கள் உண்டென்பது தவறு" எனக் கூறும் சமயம் சைவ சமயமன்று; அவ்வாறு கூறும் சமயம் ஒன்று இந்து சமயம் என்ற பெயரில் சைவத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்குப் பேரிடர் புரிந்து வருகின்றது. இதனைக் காலத்திற்குக்காலம் நீக்கிச் சைவத்தைப் பரிசுத்தமாக்கி வந்தவர்களே நாயன்மார்கள். சமய குரவர்கள், சந்தான குரவர்கள் இவர்களிலே தலைமையானவர்கள். நம் நாவலர் சைவக் காவலரானதன் அடிப்படையும் இதுவே.

பன்னிரு திருமுறைகள், பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள் தமிழிலே அருளாளர்களால் அருளிச் செய்யப்பட்டவை. சாத்திரங்களிலே தலையானது சிவஞான போதம். அது பன்னிரண்டு சூத்திரங்களையுடையது.

எட்டாவது சாத்திரம் திருவருட்பயன்; தோத்திரம் திருவாசகம் திருக்கோவையார். இவை சிவஞானபோத எட்டாஞ் சூத்திர விளக்கம், திருவருள் எம்மை வந்து ஆட்கொள்வதைக் கூறுகின்றமை இந்த "எட்டி"ன் விசேடம். சாத்திர தோத்திர மயமாயுள்ள சைவ சமயம் உண்மைகளைச் சாதாரண மக்களுக்கும் கதை ரூபமாக எடுத்துரைக்கின்றது கந்த புராணம். கந்தபுராணம் நமது கலாசார நிலைக்களம்; அடித்தளம்; சைவ சித்தாந்தத் தேனமுது. அதிலே வரும் வள்ளியம்மை திருமணப்படலம் சாத்திர தோத்திர சூத்திர வடிவாயுள்ள "எட்டி"ன் விளைவு.

ஈழ நாட்டிற்கும் மேற்கூறிய "எட்டி"ன் வழி வந்த திரு நூல்களுக்கு

மிடையேயுள்ள தொடர்பு திருவருள் வழி வந்த - தந்த தொடர்பு. இறைவன் சகலராகிய எம்மனோரை ஆட்கொள்ளக் குருவாக வருகின்றார் என்பது எட்டாவது சாத்திர சூத்திர தோத்திர விளக்கம். அருள் உரு குரு என்பது திருவருட் பயன்.

வெகு காலத்திற்கு முன்னே அன்றொருநாள் இலங்கை மன்னன் இராவணேசுவரன் கயிலையையே ஒரு கைபார்க்க முனைந்தான்; அதன் முடிபு கை இழந்து கைலாச வாகனமானான். பிழை செய்த அவனை இறைவன் மன்னித்து அருள் பாலித்துவிட்டார். இந்தச் சம்பவம் சமய குரவர்களை வெகுவாகக் கவர்ந்து விட்டது.

இறைவியிடம் நேரே திருமுலைப் பாலுண்டு சிவஞான சம்பந்தமுற்ற திருஞானசம்பந்த சுவாமிகள் இராவணனைப் பற்றி ஒவ்வொரு திருப்பதிகத்திலும் பாடியருளியுள்ளார். இராவணனைக் குறிக்கும் போது இலங்கை இராவணன் எனவே அநேகமாகக் குறிப்பிடுகின்றார். சம்பந்தர் தேவாரத் திருப்பதிகங்களிலே எட்டாவது திருப்பாடல் கயிலையை ஒரு கை பார்க்கப் போய் ஒரு கை இழந்தும், அருள் பெற்ற இலங்கை இராவணனைப் பற்றியது.

இராவணன் மகா சிவபத்தன். வினை, தளை, மலம் அவனை விடவில்லை. ஆயினும் அவன் செய்த புண்ணியம் முடிவிலே அருள்பாலித்துவிட்டது. அவ்வராலாறே சைவ சித்தாந்த மயமானது. அவன் பெற்ற பேறு - முடிபு திருவருள் மயமாகி இன்பமளித்துள்ளது.

இதுபோலவே "எத்துணைக் காலம் திருப்பித் திருப்பிப் படிக்கினும் கேட்கினும் தித்தித்து அமுதூறும் அத்தியற்புத அதிமதுரச் சுத்தம் செய்த செந்தமிழாகிய கந்தபுராணம்" எனச் சைவ உய்ய வந்த நாவலர் பெருமான் அருளியபடி, கந்தபுராணத்திலே, சூரன் முடிவில் 'சேவலும் மயிலும் போற்றி" ஆகின்றான் என்னே இறைவனது கருணை! பிழை செய்தாரையும் வாழ்விக்கும் சைவம்.

சூரன் ஆகியோர் "சூரர்" ஆனதற்குக் காரணம் அவர்களின் ஆசிரியரே. அவர்களின் முதலாவது ஆசிரியர் தந்தையாகிய காசிப முனிவர். அவர் தம் பிள்ளைகளுக்குப் பாவபுண்ணியம், அதன் விளைவு, முப்பொருள் உண்மை ஆகியவற்றைக் கற்பித்தார். தாயாகிய மாயைக்கு "அறஞ் செய விரும்பு", "பொய் சொல்லாதே" ஆகிய உபதேசங்கள் கட்டோடு பிடிக்கவில்லை. அவள் பிள்ளைகளைத் தம் குலதருவாகிய சுக்கிராச்சாரியரிடம் பாடங் கேட்க விட்டாள். அவர், "உங்கள் மூளையை விவேகத்தைக் காட்டுவதாயின் பிடிபடாமற் பொய் சொல்லலாம்; களவெடுக்கலாம்; எப்படியாவது எல்லோர்க்கும் மேலானவராக உலகியலில் வந்தாற் போதுமானது அதுவே வாழ்வின் பேறு. கடவுள் உண்டு என்பதெல்லாம் பொய். நீங்களே கடவுளாகலாம்" என "மிண்டிய மாயாவாத" உபதேசஞ் செய்தார். அதன் பெறுபேறே சூரன்போர்! சூரன், சிங்கன், தாரகன் மும்மலங்கள். வள்ளிநாயகி ஆன்மா. குமரன் குரு திருவருள்.

இவ்வாறு சைவசமய உண்மைகளைத் திருக்கைலாசத்திலே கல்லால நீழலில் நால்வர்க்கு உபதேசித்த உபதேசத்தை - வேதாகம சாத்திர தோத்திர புராண வழி வந்த சைவசித்தாந்த உண்மையை - இன்றும் என்றும் தலைமேல் ஈழநாடு கொண்டு அதன் வழியொழுகுவதற்குக் காரணங்களுள் ஒன்று இராவணன் வழி வந்த திருக்கைலாச சம்பந்தம்; மற்றொன்று ஞானசம்பந்தரின் எட்டாவது திருப்பாடற் சம்பந்தம். எட்டாந் திருமுறையை அவற்றுளொன்று திருக்கைலாச பரம்பரையில் உபதேசம் பெற்ற மெய்கண்டதேவ குரு சந்தான வழிவந்த எட்டாவது சாத்திரமாகிய திருவருட் பயன் எங்கள் சைவ

சமய பாட நூலாகப் பாடசாலைகளில் உளது வாழ்விலும் தாழ்விலும் திருவாசகம் பாடுகிறோம்.

சைவ உலகத்திற்கு மாத்திரமன்றி உலகிற்கே சைவ விளக்காக ஈழநாடு உளது என்பதற்கு நாவலர்க்குப் பின்வந்த காசிவாசி செந்திநாதையர், சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார் முதலியவர்களின் தொண்டுகள் நற்சான்று.

போப்பையர்க்கு முன்னே சைவசித்தாந்தத்தின் அருமைப் பாட்டினை 1851 லே உலகிற்குக் காட்டியவனை. கொஸ்சிங்ரன் பாதிரியாரும் இலங்கையிலே வாழ்ந்தவொரு "சைவ விளக்"காவர்! சைவசித்தாந்தத்தின் மெய்ந்நெறிக் கோட்பாட்டினை உள்ளது உள்ளவாறு தமிழர்க்கு விளக்குவதற்கும் அதே சமயம் வெளி நாட்டார்க்கு விளக்குவதற்கும் எத்தனையோ சைவ விளக்குகள் இன்று தேவை.

சைவம் சனநாயக சோஷலிச தன்மை வாய்ந்தது. அதற்குத்தக்க எடுத்துக் காட்டு பெரியபுராணம். பெரியபுராண வசனத்திலே முன்னுரைப் பகுதியாக நாவலர் பெருமான் எழுதியவற்றை இன்றைய சைவ உலகம் ஒரு தடவை பார்க்குமாயின், சைவத்தை இன்று சூழ்ந்துள்ள இருள் மாத்திரமன்றி உலக விருளே நீங்கும். அதுவும் நமக்குக் கிடைத்தவொரு சைவவிளக்கு; நல்லதோர் கைவிளக்கு உலகவிளக்குமாம்.

"உலகெலாம் உணர்ந்தோதற்கு அரியவன்" என்பது பெரியபுராணத் தொடக்கம். "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்" என்பது கந்த புராண வாழ்த்தின் முடிவு.

திருவருளே உலகெலாம் ஆள்விப்பது என்பது முதன் முதலிற் தேவாரம் பாடியருளிய காரைக்காலம்மையார் திருவாக்கு. அவரே இன்றும் நிலவிவரும் நம் பத்தி இயக்கத்திற்கு - திருவருள் இயக்கத்திற்கு வித்திட்டவர். "ஐம்புலன் வழி வந்த இன்பம் துன்பம்" எனப் பிறர் உரைத்த வேளையிலே, அது பேரின்பத்துக்கோர் வழியெனக் காட்டியவர். "பெண்ணின் நல்லாளொடும் மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்" எனச் சம்பந்தப் பெருமான் இல்வாழ்க்கை இறையின்பம் பெறுவதற்கோர் வழியெனக் காட்டினார். ஆகவே இவ்வுலக வாழ்வு நாம் இறையின்பம் பெறுதற்காகவே இறைவனால் தரப்பெற்றது. அதனை விளக்கிக் காட்டும் திருவிளக்கே நமது சைவ சமயம். "எவ்வுயிரு உறை இறை சிவனே" எவ்வுயிரிலும் அன்புடன் இருத்தல் சைவ வாழ்வின் அடிப்படை? அன்பே சிவம் என்றார் திருமூலதேவர்.

"கடவுள் ஒருவர்தான். ஆனால் அவருடைய நிலைகள் பல.
வீட்டு எஜமானன் ஒருவன், பிதாவாகவும், சகோதரனாகவும்,
கணவனாகவும் இருப்பதுபோல்"

— இராமகிருஷ்ணர்.

# அருணகிரிநாதரும் அத்துவிதமும்

இந்துமதம் யாராலும் எக்காலத்தும் தோற்றுவிக்கப்பட்டதொன்றல்ல. இது ஆதியும் அந்தமும் அற்றது. பல கிளைகளேயும், எண்ணிறந்த உயர்ந்த தத்துவத்தையும் கொண்டுள்ள தனிப்பெரும் மதம். இந்துமதம் ஓர் இயற்கை மதம். சுதந்திரமாக வழிபாடாற்றும் உயர்வழி. இந்துக்களுக்குக் கட்டளேயிட எவ்வித தலைமைப்பீடமும் இல்லை. அன்பே சிவமெனக் கொண்டு, இயற்கையே ஆதாரமாகவும் வேத உபநிடதங்களே அரண்களாகவும் கொண்ட செம்மைநெறி.

இந்துவொருவன் தன்னைப் "பாவி, வலியற்றவன்" எனக் கூறுது; இறைவனை நோக்கி "இறைவா உன்னை என்னில் காண்கின்றேன். நீயே நானுகும் நிலையை எனக்கு நல்கு" என்று பிரார்த்திக்கின்ருன். பரந்து விரிந்த பல அரும்பெரும் தத்துவங்களேக் கொண்ட இந்துதர்மம் வேதாந்தம் சித்தாந்தம் என இரு பிரிவாக வகுக்கப்பட்டுள்ளது.

## வேதாந்தம் சித்தாந்தம்

சைவம், வைணவம், சாக்தம், சௌரவம், கௌமாரம், காணுபத்தியம் என்னும் அறுசமயங்களுக்கும் தனித்தனி சித்தாந்தங்கள் இருக்கின்றன. எனினும் சித்தாந்தம் என்பது சைவசித்தாந்தத்தையே சிறப்பித்துக்கூறுவதாகும். உபநிடதங்கள் அல்லது வேதத்தின் ஞானகாண்டப் பகுதி வேதாந்தம் எனச் சிறப்பித்துக் கூறப்படும். வேதாந்தம் எல்லா மதங்களின் சித்தாந்தங்களிடையேயும் ஓர் ஒற்றுமையைக் கண்டு இந்துமதத்தின் ஆணிவேராய் அமைந்துள்ள சனுதன தர்மத்தின் சாரமாகும். பதி பசு பாதம் என்னும் முப்பொருட்களே ஏற்றுக்கொண்டாலும் முடிவில் எல்லாம் ஒன்றே என்னும் அத்துவிதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது வேதாந்த தத்துவம். வேதாந்த சித்தாந்த தத்துவங்களுக்கிடையே முடிவில் சிறிதளவே முரண்பாடு காணப்படுகின்றது அத்துவித நிலையை சைவசித்தாந்திகள் ஒன்ருய், உடனுய், வேருய் நிற்றல் என்னும் மூவகையில் கூறி, முடிவில் ஆன்மா இறைவனடி சேர்தலே முத்தி என்பர். குடத்திற்குள் உள்ள ஆகாயம் எவ்வாறு குடம் உடைந்ததும் எங்கும் பரந்த ஆகாயத்தோடு சேருகின்றதோ, அவ்வாறே உடலிலுள்ள சீவான்மா உடலைப் பிரிந்ததும் பரமாத்மாவோடு இரண்டறக் கலந்துவிடுகின்றது என்பர் வேதாந்திகள். ஒரு பொருள் எப்பொருளிலிருந்து தோன்றியதோ இறுதியில் அப்பொருள், அது தோன்றிய பொருளாகவே மாறிவிடுகின்றது என்பது தத்துவம் சீவாத்மா பரமாத்வாவை அடையச் செல்லும் மார்க்கத்தில் பல பிறவிகளேயும் எடுக்கின்றது. முடிவில் அது அடைய வேண்டிய இடத்தை அடைந்து அதேயாகின்றது. அதுவே தானுகின்ற அத்துவித நிலையை அருணகிரிநாதர் தன் திருப்புகழ் கொண்டு நாம் ஆராய்தல் சிறப்புடையது.

## சிவன் சீவன்

வானத்திலுள்ள சந்திரன் பானைக்குள் உள்ள நீரில் தோன்றுவதுபோல் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரிபூரணனுகிய இறைவன் ஆன்மாவில் பிரகாசிக்கின்ருன். இதையறியாமைக்குக் காரணம் அஞ்ஞான இருள். புகைபிடித்த கண்ணுடிப் பாத்திரத்திலே வைக்கப்பட்ட விளக்கின் ஒளி புலப்படா. பாத்திரம் தூய்மையடைந்ததும் ஒளி பிரகாசிக்கும், இதே போன்று அஞ்ஞானம் அகன்றதும் காண்பதெல்லாம் ஒரே சக்தியின் பல்வேறு தோற்றங்களாக இருப்பது புலனுகும்.

சீவனைச் சிவனெனப் பாவனை செய்யவிழையும் அருணகிரிநாதர்,

"தேனுந்து முக்கனிகள் பால் சொங்
கரும்பிளநீர்
சீரும்பழித்த சிவம் அருளுறத்
தீதும் பிடித்தவினை ஏதும்
பொடித்துவிழ
சீவன் சிவச் சொருபம் எனத்தேறி
நானென்பதற்றுயிரொ டுனென்பதற்று
வெளி
நாதம் பரப்பிரம்ம வொளிமீதே
ஞானஞ் சுரப்ப மகிழானந்த
சித்தியொடெ
நாளுங் களிக்கு பத மருள்வாயே"

என்னும் திருப்புகழில் சிவனருளால் வினை நீங்கி, நான் எனதென்னும் அகங்கார மமகாரங்களையும் நீக்கி ("நான் எனதற்ற இடமே திருவடியாம்" என்பர் குமரகுருபரர்) உயிரோடு ஊனுமற்று, பரப்பிரம்ம வொளியில், சீவன் சிவச் சொருபமெனத் தேறி, ஆனந்த சித்திபெற்று எந்நாளும் கழிக்க வரமருள்வாய் திருக்கயிலை சாலுன் குறத்தி மகிழ்பெருமாளே என அடிகளார் வேண்டும் திறன் அரிது.

இறைவன் அநுபவத்தாலும் அனுமானத்தாலும் அறியப்படுபவன். தன்னிலும் பிறிதொரு பொருளாக வைத்து இறைவனைக் காண விழையும்போது அவன் புலப்படான். அகநோக்காகத் தன்னிலேயே இறைவனைக் காணுதலே உகந்ததென இராமகிருஷ்ண பரமகம்சர் போன்ற அவதார புருஷர்கள் கூறிப்போந்துள்ளார்கள். "அகம்பிரம்மாஸ்மி" என்னும் உபநிடதக் கூற்றை நோக்கும்போது "சீவன் சிவச் சொருபமெனத்தேறும்" நிலையே சுவானுபூதி நிலை என்பது தெளிவு. இந்நிலையே "சிவோகம்" (சிவ + அகம்) இதே மிக உயர்ந்த மேலான நிலை. இந்நிலையே சும்மா இருக்கும்நிலை. "சும்மா இரு சொல்லற என்றலுமே அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே" என்றார் அநுபூதியில்.

அதுவே தானாகும் நிலை

"நீ எதை நினைக்கின்றாயோ அதேயாகின்றாய்" என்பது கீதோபநிஷத் நானென்பதற்று உயிரோடுன் என்பதற்று இருக்கும் நிலைக்கு நான் அல்ல எல்லாம் நீயே, நீ ஆண்டான் நான் அடிமை, உன் சங்கற்பத்தின்படியே எல்லாம் நிகழ்கின்றன என்னும்நிலை ஏற்படவேண்டும். இன்நிலை ஏற்பட்டதும் "நான்", இருந்த இடத்தில் "நீ" என்பதை இருத்தவேண்டும். முடிவில் நீயும் நானும் ஒன்றே என்னும் ஞானம் தோன்றும். இந்நிலையை விரும்பிய அடிகளார்.

பழமுதிர் சோலைத் திருப்புகழில்:

"நாகமணிகின்ற நாதநிலை கண்டு
நாடியதில் நின்று தொழுகேனே
சோதியுணர்கின்ற வாழ்வு சிவமென்ற
சோகமது தந்து எனையாள்வாய்"

என வேண்டா நிற்பர்.

நாஹம்=ந+அஹம் எனப் பிரிந்து, நான் அல்லன் என்னும் நிலையிலே நின்று, எல்லாம் நீயே, எம்பெருமானே என்னையாண்டருள். என்று துதிக்கின்றார், இந்நிலை எய்திய அடிகளார் "சோஹம் அது தந்து எனையாள்வாய்" என வேண்டுதல் நோக்கற்பாலது. ஸ + அஹம். அது நான் என்னும் நிலை. இந்நிலையேசாந்தோக்கிய உபநிஷத் கூறும் "தத்துவமசி" என்னும் மகா வாக்கியமாகும். இது உத்தால முனிவரால் சுவதகேதுவிற்கு உபதேசிக்கப்பட்டது. இம்மகா வாக்கியத்தில் தத்(அது)துவம் (நீ) அசி (இருக்கின்றாய்) என மூன்று பதங்களாகப் பிரியும். இதுவே முடிவான அத்துவித நிலையாம். சீவன் சிவனாக மாறித் தானே தானாய் நிற்கும் நிலையாகும். "நானல்ல நீ, நீயே நான், நானும் நீயும் ஒன்றே" என்னும் தியானம் ஏற்பட்டதும் சிவயோகம் கைவரும் என்பது அனுபவம். இதைச் சோக தியானம் என்பர்.

**சிவயோகம்**

**சிவயோகம்** என்ருல் பொருந்துதல் பொருந்துவது சீவான்மா பொருத்தப்படுவது பரமாத்மா. காரணம் பரமானந்த வேட்கை. இப்பொருத்தத்தால் விளைவது சிவாந்தம். சீவன் சிவனுக மாறி சர்வம் சிவமயமாகுதம்.

ஐந்து பூதமுமாறு சமயமு
மந்திர வேதபுராண கலைகளும்
ஐம்பத்தோர் விதமான லிபிகளும்
— வெகுருப
அண்டராதி சராசரமுமுயர்
புண்டரீகனுமேக நிறவனும்
அந்நிபோலுருவானு நிலவொடு
— வெயில் காலும்
சந்திரசூரியர் தாமு மசபையும்
விந்து நாதமுமேக வடிவமும்
தன்சொருபமதாக வுறைவது
சிவயோகம்.

எனவரும் விராலி மலைத்திருப்புகழில் பஞ்சபூதங்கள், அறுசமயங்கள், மந்திரங்கள், புராணங்கள், கலைகள், ஐம்பத்தெட்டு அட்சரங்கள், அண்டசராசரங்கள், மும்மூர்த்திகள், விந்துநாத தத்துவங்கள், சந்திரசூரியர்கள், எல்லாம் தனது சொருபமாக உறைவதுவே சிவயோகம் எனத் தெளிவாகக் கூறியுள்ளார். அருச்சுனனுக்குக் கண்ணன் காட்டிய விசுவருபமே இதுவாகும்.


தன்னில் உலகிலுள்ள எல்லாப் பொருட்களையும் கண்டு, எல்லாப் பொருட்களிலும் தன்னையும் காணும்நிலை சிவயோக சமாதியெனப்படும். இதுவே தானே தாஞய் நிற்கும் நிலை. இந்நிலையே "தத்துவமசி" என்னும் உபநிடதமகா மந்திரம் கூறும் அத்துவித நிலை. சீவாத்மாவும் பரமாத்மாவும் இரண்டாம் தன்மையற்று ஒன்ருய் நிற்கும் நிலை

எனவே அடிகளார் இறைவன் அடி சேர்தலோடு நில்லாது சற்று மேலே சென்று நீயே நாஞகும் நிலையினை அருள்வாய் முருகா எனவேண்டியும் தியானித்தும் அவனருள் பெற்று உய்ந்தார் என்பது திண்ணம்.

"தத்துவப் பதங்கடாமுஞ் சாட்சியாய்ப்
பிரமமான
வத்துவை விடாமற் பேத
வாச்சியார்த்தத்தை விட்டு
நித்தமுமது நீயாகு நீயதுவாகு
மென்னும்
அர்த்தமுமகண்ட மென்றே
யசிபதமைக் கியங்காட்டும்"

என்னும் கைவல்லிய நவநீதச் செய்யுள் அடிகளாரின் கருத்தைத் திரட்டிக் கூறுவது காண்க.

ஏ. பாக்கியமூர்த்தி
*(வர்த்தகம் 1-ம் வருடம்)*



பலாலி ஆசிரியர் கழகம் சைவமாணவ மன்றம் – 1971 சஞ்சிகைக்குழு உறுப்பினர்கள்



பலாலி ஆசிரியர் கழகம் சைவமாணவ மன்றம் - 1971 செயற்குழு உறுப்பினர்கள்

# யாதும் அஞ்சோம்

உலகிலுள்ள நாடுகளுட் சின்னஞ் சிறிய நாடு இஸ்ரேல். சனத் தொகையிலும் குறைவானது. வயதிலும் மிக இளையது. இருந்தும் ஏன் சூழவுள்ள அரபு நாடுகளெல்லாம் இஸ்ரேலுக்குப் பயந்தே வாழ்கின்றன? இஸ்ரேல் எதற்கும் அஞ்சாமல் தலை நிமிர்ந்து நிற்பது எதனுல்? இஸ்ரேலியர் விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் அரபுக்களிலும் பார்க்க முன்னணியில் நிற்கலாம். ஆனுல் இஸ்ரேலின் துணிச்சலுக்குக் காரணம் அதுமட்டுமா? இல்லை. சகல பெலன்களும் பொருந்திய அமெரிக்காவின் துணை தனக்கிருக்கிறது என்ற துணிச்சல்தான் இஸ்ரேலின் அச்சமின்மைக்குக் காரணம் என்பது வெளிப்படை.

மெலியோர் வலிய விரவலரை அஞ்சார்
வலியோர் தமைத் தாமருவில் - பலியேல்
கடவுளவர் சடைமேற் கட்
செவியஞ்சாதே
படர் சிறை யப் புள்ளரசைப் பார்த்து.
என்பது முதுமொழி

கருடனைக் கண்டால் அஞ்சி ஓடி ஒளிப்பது பாம்பின் இயல்பு. ஆனுல் சிவனுரின் சென்னியில் அமர்ந்திருக்கும் பாம்பு கருடனைப் பார்த்துக் குசலம் விசாரிக்குமளவுக்கு அதற்குத் துணிவு பிறக்கிறது.

நாம் பெற்றிருக்கும் இவ்வுடம்பு நிலையில்லாதது. இளமை நிலையில்லாதது. கல்வி செல்வங்கள் பதவிகள் நிலையற்றவை. இவற்றுல் ஒரே துக்கம்; அச்சம், ஏக்கம், தனிமுடி கவித்தாளும் அரசனுக்கும் அச்சம் இருக்கிறது. பிணிக்கும், மரணத்துக்கும் அஞ்சாதவர் யார்?

ஆனுல் இவ்வுலகில் ஒரு சிலர் ''யாதும் அஞ்சோம்'' என்று வீரகர்ச்சனை செய்ததுடன் மாத்திரமன்றி அச்சமின்றி வாழ்ந்தும் காட்டியிருக்கிறுர்கள். இதன் இரகசியமென்ன?

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும் பொழில்கள் பயந்து காத்
தழிக்குமற்றை
மூவர் கோனுய் நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர் கோனென்னையும் வந்தாண்டு
கொண்டான்
யாமார்க்கும் குடியல்லோம்
யாதுமஞ்சோம்

மேவினே மவனடியாரோடு
மேன் மேலுங் குடைந்தாடியாடு
வோமே.
என்பது மணிவாசகம்;

''நாமார்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்'' என்று மார்பு தட்டுகிறுர் மணிவாசகர். தமது துணிச்சலுக்கான காரணத்தையும் அவர் வெளிப்படையாகக் கூறுகிறுர்: யாவர்கோன் என்னையும் வந்தாண்டு கொண்டான். ''அதனுல் யாதும் அஞ்சோம்'' என்கிறுர். சகல உலகங்களையும் படைத்தளித்தழிக்கும் சர்வ வல்லமையுள்ள சர்வாதிகாரிக்கு அடிமைப்பட்டவன் எதற்கு அஞ்சவேண்டும்?

மணிவாசகருடைய அதே பாணியில்,

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை
அஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ
மல்லோம்
இன்பமே யெந்நாளும் துன்பமில்லை''

என ஏறு நடை போடுகிறுர் அப்பர். அவரும் தனது துணிச்சலுக்கான காரணத்தை வெளிப்படுத்துகிறுர். ''தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான கோமானுக்கு மீளா அடிமையாக இருப்பதே காரணம்.''

அட்டமத்துச் சனி, ஏழரைச் சனி, அட்டமத்து வியாழன், மூன்றில் வியாழன் என்றுல் எவரும் அஞ்சுவர். ஆனுல் அரனடியார்க்கு நவக்கிரகங்களும் ''ஆசறு நல்ல நல்ல'' எனச் செப்புகிறுர் ஆளுடைய பிள்ளையார்.

இந்த அடியார்களுடைய வாக்குகள் மட்டுமின்றி வாழ்க்கை வரலாறுகளும் நாமறிந்தவை:

வானந் துளங்கிலென்! மண்கம்ப
மாகிலென் மால்வரையுந்
தானந் துளங்கித் தலை தடுமாறிலென்
தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென்
வேலை நஞ்சுண்டு
ஊனமொன்றிலா ஒருவனுக் காட்பட்ட
உத்தமர்க்கே.

என்னும் அருள்வாக்கு நாவுக்கரசரின் நாவன்மையை மட்டும் காட்டவில்லை. அனுபவ ரீதியான வாக்கு அது. நீற்றறையிலிட்டபோதும், நஞ்சு கலந்த உணவு கொடுத்த போதும், பட்டத்து யானையை ஏவிய போதும், கல்லோடு கட்டிக் கடலில் விட்டபோதும் அனுபவித்தவர் அப்பர்.

சர்வ உலக நாயகன் இறைவன். அவன் எல்லாம் அறிபவன். எல்லாம் வல்லவன். அவனை நேரில் காணும் பேறு பெற்றவர்கள் மெய்யடியார்கள். நேரில் கண்டு தம் குறைகளைக் கூறிக் குறை தீரப் பெற்றவர்கள் நேரே பிரத்தியட்சமாகக் கண்டவராதலின் தமக்கொன்று நேர்ந்தக்கால் "கைகொடுக்கச் சுவாமி வருவர் என்ற திடம் பிறந்தவர்கள். நம்மைப்போல் வெறும் நம்பிக்கையில் கடவுளை வழிபடுபவரல்லர் நாயன்மார். அவர்கள் இறைபணி நிற்கும் தவமுடையவர்கள். இறை பணி நிற்றலாவது சுவாமியை நேரில் கண்டு கேட்டு அவனுடைய ஆணைப்படி நிற்றல்; அந்த நிலையை அடைந்தவர்களை இறைவன் எடுத்துச் சுமப்பான்.

எமக்கென்றொரு நோக்கு, எமக்கென்றொரு சுவை இருக்கும் வரை அவற்றையடைய வேண்டும் என்ற விருப்பு இருக்குமேயன்றி இறைபணி நிற்றல் இயலாது.

உற்றாரை யான் வேண்டேன் ஊர்
வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும்
இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாவுன்
குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக
வேண்டுவனே.

என்கிறார் மணிவாசகர். அவருடைய சுவை நோக்கு எல்லாம் இறைவனைப் பற்றியதே. அந்த நிலை வந்தவர் அவனை நேரே காணுகிறார்கள். காலகாலனாகிய அந்தப் பெருமானை அடைந்தவர்களுக்கு அரியது எது? அவர்கள் எதற்கு அஞ்ச வேண்டும்? அது பற்றியன்றோ ஔவைப் பிராட்டியாரும் "தொண்டர் "தம் பெருமை சொல்லவும் பெரிதே" என உயர்த்திக் கூறினர்.

இறைவனை நேரே காண்பதற்கு என்ன வழி? அப்பர் சொல்லுகிறார்:

"சிவனெனும் நாமம் தனக்கேயுடைய
செம்மேனி எம்மான்
அவனெனையாட் கொண்டளித்திடுமா
கிலவன தனையான்
பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்து
பன்னாளழைத்தால்
இவனெனைப் பன்னாள் அழைப்பொழி
யானென்றெதிர்ப்படுமே"

**செல்வி சாரதாமணி அமிர்தலிங்கம்**
கணிதம் 1-ம் வருடம்

# சமய வாழ்வு

"கண்ணன்"

சமய மெங்கள் சமயமம்மா
சைவ மெங்கள் சமயமம்மா
இமையவர் ஏத்து மந்த
ஈச னெங்கள் இறைவனம்மா.

○

அன்பால் அவனைப் பற்றினுல்
துன்ப மெல்லாம் தீர்ந்திடும்
இன்ப மான வாழ்வினை
என்று மங்கு வாழலாம்.

○

ஆசையினுல் அல்லல் தரும்
பாச மதை நீக்கியே
நேச னீசன் பாதமதை
பூச னையால் போற்றுவோம்.

○

சூது வஞ்சம் பொருமைநீக்கி
சுகந்த வாழ்வு வாழவே
வாது புரியும் மனமதையே
வளமாய்ச் செய்ய வணங்குவோம்.

○

மாயை என்னும் தளையகற்றி
மடமை இருளை ஓட்டவே
தூய சைவம் எமக்குணர்த்தும்
நற் கருத்தை நாடுவோம்.

# சித்துக்கள் புரியும்

# சித்தாண்டிக் கந்தன்

முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் முருகப் பெருமான் ஈழநாட்டில் கோயில் கொண்டருளிய திருத்தலங்களுள் சித்தாண்டியும் ஒன்றாகும். சித்தாண்டிக் கிராமம் கிழக்கிலங்கையின் வடக்கே மட்டக்களப்பு நகரிலிருந்து திருகோணமலை வீதியில் பதின்மூன்று கல்தொலைவில் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் வாழும் மக்கள் பெரும்பாலும் கமக்காரர்களே யாவர். ஊரின் மத்தியில் பிரமாண்டமான இராச கோபுரத்துடன் கூடிக் கெம்பீரமாகக் காட்சியளிப்பது ஸ்ரீ முருகன் ஆலயமாகும். இக்கோயிலைச் சித்திர வேலாயுத சுவாமி கோயில் என அழைப்பர்.

இக்கோயில் கிழக்கிலங்கையிலே மிகவும் விசேடித்த சிறப்புப் பொருந்தியதொன்றாகும். அன்றியும் இது பல நூற்றாண்டு காலங்களுக்கு முற்பட்ட கோயிலாகும். இக்கோயிலை யார் எப்பொழுது கட்டினர் என்பதை அறிதற்குரிய தடையங்கள் எதுதும் இங்கில. இவ்வூர்வாசிகளில் முதியவர்கள் கூறும் ஒரு கர்ண பரம்பரைக் கதையின் மூலம் நாம் இக்கோயிலின் புராதனத் தன்மையை ஓரளவு உணரக்கூடியதாய் இருக்கின்றது.

பன்னெடுங் காலங்களுக்கு முன்னர் தென்னிந்தியாவிலே இருந்து சிகண்டி என்னும் பெயரையுடைய ஒரு முனிவர் கதிர்காம யாத்திரையை மேற்கொண்டு இம்மார்க்கமாக வந்தாராம். இவர் வரும் வழியிலே யானை உருவில் நின்ற ஒரு காந்தர்வன் இவரை மேற்கொண்டு யாத்திரை செய்யவொட்டாது தடை செய்தானாம். இச் செயலால் விசனித்த முனிவர் திரும்பி வந்து தற்பொழுது ''சித்தாண்டி'' என்று அழைக்கப்படும் இக்கிராமத்தில் தங்கினாராம். இவர் இங்கிருக்கும் காலத்தில் அற்புதமான பல சித்துக்களைச் செய்து காட்டுவாராம். சித்து என்பது நீர்மேல் நடத்தல், நெருப்பின் மத்தியில் வேகாது இருத்தல், பார்வையினால் நோய்களைக் குணமாக்குதல் முதலிய அற்புதமான செயல்களைக் குறிக்கும். இப்பேர்ப்பட்ட சித்துக்களைப் புரிந்தமையால் இச்சிகண்டி முனிவரைச் ''சித்தாண்டி'' (சித்து + ஆண்டி) என்றும் அழைத்தனராம். இவர் சிறிது காலம் வாழ்ந்து பின்னர் அவ்விடத்திலேயே சமாதி கூடினாராம். பின்னர் அவ்விடத்திலேயே ஆலயம் எழுப்பப்பட்டதாம். இதுவே இவ்வூர்வாசிகள் கூறும் கர்ண பரம்பரைக் கதையாகும். இக்காரணம் பற்றியே இக்கிராமத்திற்கும் ''சித்தாண்டி'' என்னும் பெயர் வந்ததென்றும் கூறுவர்.

இக்கோயில் கற்பக்கிருகம், அர்த்த மண்டபம், சபாமண்டபம், அலங்கார மண்டபம், மகாமண்டபம், ஸ்தம்ப மண்டபம் ஆகிய ஆறு மண்டபங்களைக் கொண்டது. ஸ்தம்ப மண்டபத்தின் இடப்புறத்தே வசந்த மண்டபமும், யாகசாலையும், வைரவர் ஆலயமும் அமைந்துள்ளன. கோயிலின் உட்பிரகாரத்தில் தனித்தனியே விநாயகர் ஆலயமும், சண்டேசுரர் ஆலயமும், நவக்கிரக ஆலயமும் அமைந்துள்ளன. இவ்வாலயத்தின் இராச கோபுரம் 1957-ம் ஆண்டளவிலே கட்டி முடிக்கப்பட்டது. வெளிப்பிரகாரத்தின் இடப் புறத்தே தெய்வயானை அம்மையாரின் ஆலயமும் பூங்காவனமும் அமைந்துள்ளன. வெளிப்பிரகாரத்தின் வலப்புறத்தே வள்ளியம்மையாரின் ஆலயமும், குமரக் கடவுளின் ஆலயமும் அமைந்துள்ளன. இராச கோபுரத்தின் இரு மருங்கிலும் இரண்டு மணிக் கோபுரங்கள் காட்சியளிக்கின்றன. சென்ற ஆண்டில் இவ்வாலயம் மிகவும்

அழகிய முறையில் புனருத்தாரணம் செய்யப்பட்டது.

இவ்வாலயத்தைப் பரிபாலிக்கும் தர்ம கர்த்தாவை ''வன்னிமை'' என்றழைப்பர். இவ் வன்னிமை குடிவழி முறையிலேயே தெரிவு செய்யப்படுவார். இவருடைய பதவி ஆயுட்காலம் வரை நீடிக்கும். வன்னிமைக் குடியைச் சேர்ந்த பெண்ணைப் புதூர்க் குடியைச் சேர்ந்த ஆடவன் மணந்து இவர்களுக்குப் பிறக்கும் முதல் ஆண் குழந்தையே வன்னிமைப் பதவிக்குத் தகுதியுள்ளவனாவான். அன்றியும் வேறு பல குடிகளின் தலைவர்களும் அயற் கிராமங்களின் பிரதிநிதிகளும் இக்கோயில் நிருவாகசபை உறுப்பினர்களாகப் பணியாற்றுவர்.

இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம் ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதப் பூர்வ பட்சத்துப் பிரதமை திதியில் கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகும். ஆவணி மாதப் பௌர்ணமி திதியில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவெய்தும். திருவிழா ஆரம்பித்துப் பதின்மூன்றாவது நாளன்று மயில் கட்டுத் திருவிழா அதிவிமரிசையாக நடைபெறும். இம்மயில் கட்டுத் திருவிழாவன்று அதிகாலை சுமார் நாலு மணியளவில் முருகப் பெருமான் மயில் வாகனத்தில் ஆரோகணித்துவந்து வள்ளிநாய்ச்சியாரை திருமணஞ்செய்யும்காட்சி கண்ணையும் கருத்தையும் பறிக்கத்தக்கதாய் அமையும். இத் தினத்தன்று குன்றுதோறும் ஆடும் குமரக் கடவுள் கதிரை மலையினின்றும் சோதிப் பிளம்பாக வானவீதிவழியேவந்து இவ்வாலயத்துட் பிரவேசிக்கும் அற்புதக் காட்சியைக் கண்டு புளகாங்கித மடைந்ததாகப் பல மெய்யடியார்கள் கூறுவர்.

மேலும் இவ்வாலயத்தில் கந்தசஷ்டி விரதம் மிகவும் சிறப்பாக அனுட்டிக்கப்படுகின்றது. கந்த சஷ்டி விரதகாலமாகிய ஆறு தினங்களும் பல்லாயிரக் கணக்கான மக்கள் இவ்வாலயத்துக்கு வந்து விரதம் அனுட்டிப்பார்கள். ஆறாவது நாளாகிய சஷ்டியன்று சூர சம்காரம் மிகவும் சிறப்பாக நடைபெறும்; பத்மாசூரன் பல்வேறு முகங்களுடன் வீதியிலே மிக அட்டகாசஞ் செய்து குதித்தோடித் திரிவான். குன்றுருவ வேல்வாங்கி நின்ற குமரக்கடவுள் மாறுபடா சூரரை வதைக்கும் பொருட்டு இரட்டைக் குதிரை பூட்டிய இரதத்தில் ஆயுத பாணியாக அவ்வசுரனை அணுகும் காட்சியைக் காணும்போது மெய்சிலிர்த்து விதிர் விதிர்த்துக் கைகளைச் சிரமேற் கூப்பி கண்ணீர் ததும்பிச் ''சத்துரு சம்கார வேலுக்கு அரோஹரா'' என்று கூறுதாரு முண்டோ? சுவாமி வெளிப்பிரகாரத்திலே வீதிவலம் வந்து சூரனுடன் சமர் செய்யும் போது சூரன் ஒவ்வொரு தலையாக இழக்கும் காட்சியும், பின்னர் அசுரன் மலையாகவும், மாமரமாகவும், மறைந்து நின்று மாயப் போர் புரியும் காட்சியும், முருகப் பெருமானின் விஸ்வரூபத்தைக் கண்ட அசுரன் அவரைச் சரண் அடையும் காட்சியும் பின்னர் அசுரனை முருகப் பெருமான் இரு கூறுகப் பிளக்கும் காட்சியும், அதன்பின் அசுரன் சேவலும் மயிலுமாக மாறும் காட்சியும்இத்தினத்தில் அதியற்புதமாய்க் காண்பிக்கப்படும்.

மேலும் திருக்கார்த்திகை, வருடப் பிறப்பு, தைப்பொங்கல், ஆடி அமாவாசை ஆனி உத்தரம். மாசி மகம் முதலிய புண்ணிய காலங்களிலும் சிவராத்திரி நவராத்திரி முதலிய விசேட தினங்களிலும், விசேட பூசையும் ஆராதனையும் உற்சவமும் இவ்வாலயத்தில் நடைபெறும்.

வேண்டுவார் வேண்டுவன ஈயும் விமல மூர்த்தியாகிய சித்தாண்டிக் கந்தன் தீராத பிணி தீர்க்கும் மருத்துவனாய்; இப்பிறவியின் கண்ணே செல்வச் சிறப்புப் பொருந்திய பெருவாழ்வும், மறுமையில் வீடு பேறும் அளிக்கும் தந்தையாய்; தன்னை நாடியவர்க்கு நலன் புரியும் நண்பனாய் விளங்குகின்றார். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் யாத்திரிகர்கள் இத்தலத்திற்கு வந்து கந்தன் அருள் பெற்றுச் செல்வதுமுண்டு. தவத்திரு யோகசுவாமிகள்கூடச் சித்தாண்டிக் கந்தன் மேல் நீங்காத பற்றுடையவராய் வாழ்ந்தார்கள். தாம் ஸ்தாபித்த சிவதொண்டன் நிலையத்தின் கிளை ஸ்தாபனமொன்றைச் சித்தாண்டியில் நிறுவும்படி தமது சீடரைப் பணித்தமை இதற்கோர் எடுத்துக் காட்டாகும். நாமும் சித்தாண்டிக் கந்தனின் திருவடிகளைப் பூசித்து அவன் அருள்பெற்று உய்வோமாக.

**அ. தில்லைநாயகம்**
வணிகம் முதலாண்டு

# விஞ்ஞான மாணவர்க்கு சமயக்கல்வி

மண்ணில் உலாவிய மனிதன் விண்ணிலுலாவிடும் காலம் தற்காலம். அம்புலியில் அடியெடுத்து வைத்துவிட்ட காலம். ஆராய்ச்சி வெகு வேகமாக முன்னேறிக்கொண்டுசெல்லும் காலம். விஞ்ஞான உலகின் விசித்திரங்களை விரும்பிக்கற்கும் மாணவர்கள் மலிந்து விளங்கும் காலம். இந்த விஞ்ஞான யுகத்தில் எதையும் அலசி ஆராய்ந்து பார்க்கும் தன்மை வருங்காலச் சிறுரிடம் உருவாவதில் ஆச்சரியமில்லை. எதையும் காரணத்தோடு விளங்கிக்கொள்ளவேண்டும் என்ற அவர்களெண்ணத்தில் தப்பில்லை. நம்பமுடியாத கற்பனை நிறைந்த கதைகளையெல்லாம் ஏற்றுக்கொள்ளமுடியாது என அவர்கள் ஒதுக்குவதும் உதவாத பழக்கம் என்று சொல்வதற்கில்லை. ஐயத்துக்கிடமானவற்றைக் கூறும்போது ஏன்? எப்படி? எங்கு? என்று கேள்விக் கணைகளை எழுப்புவதையும் தடுத்து விடுவதற்கில்லை. தடுத்துவிடவும் கூடாது. சில கேள்விகளுக்குரிய விடைகளை அவர்கள் தங்கள் அனுபவத்தால் உணர்ந்து அறிவைப் பெறவேண்டியிருக்கும். சில உண்மைகளை அவர்கள் தாமாக உணர்ந்து அவ்வுணர்ச்சிகளின் அடிப்படையில் விளக்கம் பெறவேண்டியிருக்கும். வேறு சில விடயங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து உண்மையிருக்கிறது என்று ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும். எனவே அவர்களுக்கு ஏற்ற வகையில், தகுந்தமாதிரி விடயங்கள் புகட்டப்படல் வேண்டும்.

விஞ்ஞான மாணவர்க்குச் சமயக்கல்வி புகட்டும்போதும் கருத்திற் கொள்ளவேண்டியது இவற்றைத்தான். ''விஞ்ஞானம் பயில்வோருக்கு விஞ்ஞானக் கல்வி மட்டும் போதாதா? உலகம் விஞ்ஞானத்தின் வளர்ச்சியில் மூழ்கிக்கொண்டு வருகிறது. அவர்களுக்குச் சமயக்கல்வி அவசியமா? நம்பமுடியாத கதைகளையெல்லாம் உண்மையென்று நம்பத்தான் வேண்டுமா? விடய விளக்கமாராயாது வாழ்ந்த அக்காலத்தினரைப்போல இக்காலத்தினரையும் ஏமாற்ற முடியுமா?'' என்றெல்லாம் எத்தனையோபேர் பேசுவதுண்டு. இப்படிப் பேசுபவரெல்வாம் விஞ்ஞானத்தின் வேர் போன்ற ஆராய்ச்சியின் அருகில் செல்லாதவர்கள். வெளியில் நின்று பார்த்தால் வேடிக்கையாக இருக்கலாம். ஆனால் உள்ளே செல்லவேண்டும். உண்மையைத் துருவி ஆராய்ந்து தெளியவேண்டும். அப்போதுதான் 'சமயவாழ்வின் நோக்கம் என்ன? அது எத்தகைய குறிக்கோளை மக்களிடத்து ஏற்படுத்த முயல்கிறது? கற்பனைக் கதைகளில் புதைந்துள்ள தத்துவங்களென்ன?'' என்பதெல்லாம் விளங்கும். இவற்றையெல்லாம் ஆராயாது வீண்வாதம் செய்வதில் அர்த்தமில்லை. எவரையும் ஏமாற்றி, இடுக்கண் விளைவிப்பதல்ல சமயம். நல்ல வாழ்வை, இலட்சிய வாழ்வை, பேரின்ப வாழ்வைத் தருவது சமயம்.

சமயக்கல்வி புகட்டுவதற்கு அதன் முக்கியத்துவம் மாணவர்களுக்கு விளங்கவேண்டும். அப்போதுதான் அதைக் கற்பதற்கும் ஆர்வம் பிறக்கும். இன்று, விஞ்ஞானம் மெச்சத்தக்க முறையிலே வளர்ந்திருக்கிறது; வளர்கிறது; இனிமேலும் வளரும். தொலைவில் இருப்போர் தொடர்புகொள்ளத் தொலைபேசி, கடுகிச் செல்லும் விமானங்கள், கண்டவுடன் படமெடுக்கும் கமராக்கள், இருளைப் பகலாக்கும் மின்விளக்குகள், பல்வேறு இயந்திரங்கள், வெவ்வேறு நோய்கட்கு விதம்விதமான மருந்துகள் முதலிய மானிட வாழ்வுக்குப் பயன்படத்தக்க எத்தனையோ சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனல் இதேநேரத்தில் இத்தனையையும் ஒரேநொடியில் வீணாக்கி உலகையே அழித்துவிடும் அணுக்குண்டும், அவ்விஞ்ஞான வளர்ச்சியின் குழந்தைதான் என்பதை மறுக்கமுடியாது. ஆக்கவேலைகளுக்குப் பயன்படவேண்டிய ஆராய்ச்சி அழித்தல் வேலைகளுக்குரிய ஆய்கருவிகள் செய்வதில் பயன்பட்டுக்கொண்டிருப்பதைப் பலரும் குறைகூறுவது கண்கூடு. வல்லரசுகளுக்குள் பெரும்போர் மூண்டுவிட்

டால் எந்தக் கணத்தில் இந்த உலகம் அழியும் என்ற பயம் எல்லோரிடமும் இருக்கத்தான் செய்கிறது. ஏன்? அறிவுவளர்ச்சியின் பயன் இதுதானு? இந்த இடத்தில் எம் சிந்தனைக்கு இடமிருக்கிறது. அறிவானது தனித்து வளர்ந்துகொண்டு சென்ருல் இந்த மாதிரிச் சம்பவங்கள் ஏற்படத்தான் செய்யும். அறிவு, அன்போடு கலக்கவேண்டும். அந்த அன்பு அறத்தின் அடிப்படையில் எழவேண்டும். அறத்தின் அடிப்படையில் எழுகின்ற அன்போடு கலவாத அறிவு மனித வாழ்வுக்கு எப்போதும் பயன்தராது. எனவே அறிவு நல்லமுறையில் வளர அது அன்போடு கலக்கவேண்டும். மனிதஉள்ளங்களில் அன்பு நிறையவேண்டும். அந்த அன்பின் மகத்துவத்தை விளக்குவதுதான் சமயம். 'அன்பே சிவம்' என்று அருந்தமிழ் வாக்கும் இருக்கின்றதன்ருே! திருமூலரும் தம் திருமந்திரத்தில்,

**"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே''**

என்று கூறியிருக்கின்ருர். அன்பு வடிவான ஆண்டவனை அடைய அன்பினல் கசிந்துருகும் உள்ளம் வேண்டும் என்கின்றது சமயம். அன்பு வளர ஒற்றுமை ஓங்கும். ஒற்றுமை ஓங்க கூட்டுறவு பெருகும். கூட்டுறவுபெருக மனித வாழ்வு சிறக்கும். இதனல், அன்பை அடிப்படையாகக்கொண்ட சமயம் மனித நல்வாழ்வுக்கு வழிவகுக்கின்றதன்ருே. கல்வியின் நோக்கமும், நல்வாழ்வை ஏற்படுத்திக் கொடுப்பதல்லவா?

ஒழுக்கமில்லா வாழ்வு உருக்குலைந்த வாழ்வு. எத்தனை பட்டங்கள், பதவிகள், ஆற்றல்கள் பெற்றிருந்தாலென்ன, ஒழுக்கமின்றேல் அது அவர்க்கு மெத்த இழுக்காய் முடியும். அவர்க்குச் சமூகத்தில் மதிப்பிராது. நல்லவராக நடித்தாலும் உண்மைச் சொருபம் என்ருே ஒருநாள் வெளிப்படத்தான் செய்யும். அப்போது பலராலும் தூற்றப்பட்டு ஒதுக்கப்படத்தான் செய்வார். நல்லமுறையில் புகட்டப்படும் சமயக்கல்வி இந் நல்லொழுக்கத்தை ஏற்படுத்தும். அத்தோடு மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றலையும் அளிக்கிறது. தியானம் இதற்கு மிக உதவும். புத்தகத்தை எதிரே வைத்துக்கொண்டு எங்கெங்கோ சென்று எதையெதையோ எண்ணி அலையும் மனதை ஒருமுகப்படுத்தி எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிக்கும் ஆற்றலை எமக்குத் தருவது இம் மனஒருமைப்பாடு. இப்படி எத்தனையோ வகைகளில் மனித நல்வாழ்விற்குதவும் சமயக்கல்வி புகட்டப்படவேண்டியது அவசியம்தானே. சிந்தையை உருக்கி, அன்பைப் பெருக்கி, பிறர் துன்பங் கண்டிரங்கும் மனப்பான்மையை வளர்த்து, நல்ல சுகாதார வாழ்வை ஏற்படுத்தி, குறைவற்ற, நிறைவுற்ற வாழ்வுவழி காட்டும் சமயக்கல்வியின் முக்கியத்துவம் மாணவர் கருத்திற் பதியவேண்டும், நாம் பதிக்க வேண்டும்.

சமயக் கல்வியைப் புகட்டும் முறையிலும் கொஞ்சம் மாற்றம் ஏற்படுத்தத்தான் வேண்டும். அன்றிலிருந்த மக்களின் மனநிலை வேறு; இன்றிருக்கும் மனநிலை வேறு. காலத்தோடு ஒட்டியதாக, நம்பக்கூடியதாக, உண்மையென்று உணரக்கூடியதாக அல்லது உண்மையாக இருக்கலாமென்று உணர்வால் நம்பக்கூடியதாக கருத்துக்களின் விளக்கங்கள் அமைய வேண்டும். விஞ்ஞானத்தின் முடிபுகளும், சமயத்தின் முடிபுகளும் வெவ்வேருனவையல்ல என்பது உணர்த்தப்படல்வேண்டும். சமய வாழ்வு, ஏதோ மிகத் தொலைவில் உள்ளது அனுட்டிப்பது மிகக் கஷ்டம் என்ற தவருன அபிப்பிராயம் களையவேண்டும். வாழ்வோடு இணைந்தது சமயம் என்ற உண்மை உணர்த்த வேண்டும். சமயக் கருத்துக்கள் சாதாரண அனுபவங்களோடு இணைத்து அல்லது அவற்றை உதாரணமாகக் காட்டி, உவமைகளாக்கி விளக்கப்படல் வேண்டும். அப்போது ஆர்வம் குன்ருது விஞ்ஞான உண்மைகளையும் சேர்த்து அவற்றைப்போல இருக்கின்றன என்று சொல்லும்போது மாணவர் சிந்திக்கத்தான் செய்வர். புராணக் கதைகளிலெல்லாம் வருகின்ற கற்பனைகளைக் குறைத்துக் கூறினலே தத்துவம் விளங்கும். இல்லையேல் உருவைவிட பின்னணி கூடி நம்ப முடியாததென்ற எண்ணம் எழக்கூடும்.

மாணவரின் கவனத்தை ஈர்த்து தொடர்ந்து கற்கத்தக்க வகையிலே இராமகிருஷ்ணரின் அறிவுரைகள் இருப்பதைக் காணலாம். மனக்கட்டுப்பாடு இல்லாதவரைப் பற்றி அவர் கூறுகிறார்:-

''ஈக்களில் இருவகை உண்டு. ஒன்று தேனை மாத்திரம் உட்கொள்ளும். ஆனால் மற்றொன்றோ தேனையும் குடிக்கும். அதனுடன் சமயம் கிடைக்கும் போது அழுக்குள்ள புண் முதலியவற்றில் அதிக பிரியத்துடன் உட்காரும். அப்படியேதான் மனிதரும்: பக்தியுடைய அறிஞர், ஈசனைத்தவிர வேறொன்றையும் பற்றிப் பேசார். ஆனால் உலக விடயங்களில் பற்றுடையவரோ பெண், பொன் முதலியவற்றைப் பற்றிய பேச்செழுந்தால் தாங்கள் அதுவரை கேட்டுக்கொண்டிருந்த ஈசனைப் பற்றிய விடயங்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு உடனே அவற்றைப்பற்றி சம்பாஷிக்க ஆரம்பித்துவிடுவார்கள்''

கடவுள் இருக்கிறார் காட்ட முடியுமா? என்பது கேள்வி. மின்சாரம் இருக்கிறதா? ஆம். பிடித்துக் காட்ட முடியுமா? மாணவன் சிந்திக்கிறான். உணரமுடியும். ஆம் உண்மை. உலகம் இயங்குகிறதே. இயக்குபவன் ஒருவன் இருக்கத்தானே வேண்டும். சரி, ஏன் அவனுக்குப் பல உருவங்கள்? நீர் இருக்கிறது. திரவநிலை உறைந்தால் திண்மநிலை. ஆவியாகினால் வாயுநிலை. அதேபோன்றுதான் கடவுளும் ஆன்மாக்களின் இயல்பிற்கேற்க ஏற்ற உருவங்கள். இவை ஆரம்பத்தில் விஞ்ஞான மனப்பான்மையுள்ள சிறுவனும் வெறுத்தொதுக்காது சமயத்தினைக் கற்க நாடச் செய்யும். சில சமய தத்துவங்களை விளக்கும்போது விஞ்ஞானக் கருத்துக்களை உவமானமாகக் கூறலாம். உதாரணமாக, ஆணவம் வலிமிகுந்தால் ஆன்மாவின் ஞான அறிவு குறையும். ஞான அறிவு மிகுந்தால் ஆணவம் வலிகுன்றும். இது போயிலின் விதிபோன்றிருக்கிறது. குறித்த திணிவு வாயுவின் அமுக்கம்கூட கனவளவு குறைவதும், கனவளவுகூட அமுக்கம் குறைவதும்போல அது இருக்கிறதல்லவா? என்று கூறும்போது, விஞ்ஞான அறிவையும் இதனோடு மீட்டுக்கொள்ள முடிகிறது.

புராணக் கதைகளைக் கூறும்போது கதைகளை எடுத்து அது பொய். அப்படி இருப்பது எப்படி முடியும்? என்பனபோன்ற வாதம் புரியாது அதனால் கூறப்படுவது என்ன? எந்த இலட்சியம் எப்படிக் கூறப்படுகிறது? என்பதை விளங்கவேண்டும் என்ற மனப்பான்மையை மாணவரிடத்து வளர்க்கவேண்டும். இந்த மனப்பாங்கில்லையானால் படிப்பது வீண் என்ற எண்ணம் எழத்தான் செய்யும். உதாரணமாக திருமாலும் பிரமாவும் அடிமுடி தேடிய வரலாற்றில், இறைவன் தானே ஐந்தொழில் செய்கிறார். அப்படியானால் எல்லோரும் இறைவன் தானே. இறைவனே இறைவனைத் தேடுவதா? அன்னப்பட்சி ஆண்டுக்கணக்காகப் பறக்க முடியுமா? தாழம் பூ விற்கும் கதைக்கத் தெரியுமா? என்பதில் எமது சிந்தனை செல்ல வேண்டியதில்லை. இக்கதை ஏன் கூறப்பட்டது? அதில் பொதிந்து கிடக்கும் உண்மை என்ன? என்பதுதான் எமக்குத் தெரியவேண்டும். எவரும் தாம்தாம் பெரியவரென்று இறுமாப்படையக்கூடாது என்ற நற்கருத்தை விளங்கவேண்டும். இப்படியான சிறந்த கருத்துக்களை கதை உருவிற் கூறி இரசிக்கச் செய்வது புராணத்தின் தன்மை என்பது விளக்க வேண்டும்.

இந்தவிதமான இக்கால மாணவர்க்கு அவர்களின் மனப்பாங்கு அறிந்து, அனுபவங்களோடு கருத்துக்களை இணைத்து, விஞ்ஞான உண்மைகளை உவமானங்களை, அவர்களின் கவனத்தை ஈர்க்கத்தக்க வகையிலே கருத்துக்களைத் தொகுத்துக் கற்பிக்க வேண்டும்.

சி. கிருஷ்ணபிள்ளை
(கணிதம் நிறைவாண்டு)

# இலங்கையில் சைவத்தின் எதிர்காலம்

7ம் நூற்றாண்டளவில் நாயன்மார் தோன்றிய காலம் சைவத்திற்கு ஒரு பொன்னான காலம். சமணம், வைணவம் முதலிய சமயங்கள் மேலோங்கிச் சைவம் குன்றியிருந்த காலத்திலே நாயன்மார் தோன்றிச் சைவத்தின் இடர்தனைப் போக்கினார்கள். நாயன்மார் தேவாரமும் அவர்கள் செய்த அற்புதங்களும் அவர்கள் பால் இறைவன் அருள்பாலித்தமையும் சைவம் மேலோங்க வழிசெய்தன. பிற சமயங்கள் மங்கி மறைந்தன. இலங்கையும் நாயன்மாரது புகழால் பாடல் பெற்ற நாடாகிற்று. இங்கும் சைவம் வளர்ச்சியுற்றது.

இலங்கையில் இப்போது நடைபெறும் நிகழ்ச்சிகள் நாயன்மார் வளர்த்த சைவம் நலிவுற்று விட்டதோ என்னும் ஐயத்தை ஏற்படுத்துகின்றன. சாதிப் பாகுபாடு நம் நாட்டில் தலையெடுத்துவிட்டது. ''ஆண்டவன் படைப்பிலே அனைவரும் சமமே'' என்ற முதுமொழி பொய்த்துவிட்டது. எமது சைவ மக்களில் ஒரு பகுதியினர் எங்கள் கோவில்களின் உட்செல்லப் போரிடுகின்றனர். இன்னொரு பிரிவினர் அவர்களைத் தடுக்கின்றனர். அரசாங்க சட்டமூலம் அனைவருக்கும் ஆலயங்களில் சமத்துவமளித்துவிட்டது. இதன் காரணமாகப் பல ஆலயக் கதவுகள் இழுத்துப் பூட்டப்பட்டுவிட்டன. இதனிடையே ஆலய நிருவாகத்தினர் பிடிவாதமாகத் தம் எண்ணங்களை கோவில்களில் புகுத்த முற்படுகின்றனர். தாமிட்டதே சட்டமென அவர்கள் வாதிட, பொது மக்களெல்லாம் சமத்துவம் பேசுகின்றனர். இறைவனின் உடமைகள் பல விடங்களில் தவறான முறைகளில் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. பழமையின்பால் சைவம் வளர வேண்டுமென்று அவர்கள் வாதிட இளம் சந்ததியினர் புதுமையில் சைவத்தை வளர்க்க முடியாதா என ஏங்குகின்றனர். காலத்துக்கியைந்த மாற்றம் சமயத்துக்கும் அவசியமானது என நிரூபிக்க இளைஞர் முயலுகின்றனர்.

ஆலயங்களெல்லாம் பக்திக் கூட்டங்களாக இருந்த காலம் மலையேறி அவை கேளிக்கைக் கூடங்களாக மாறி வருகின்றனவோ என்ற சந்தேகம் பலரிடையே தோன்றி வருகின்றது. திருவிழாக் காலங்களில் சின்னமேளம் பார்ப்பதும், கார்னிவல் பார்ப்பதும், கடை வீதிகளில் சுழன்று வருவதும் தான் சைவமா என்னும் ஐயப்பாடு தோன்றியுளது. கேளிக்கைகட்கு எங்கள் தீவெங்கணுமுள்ள ஆலயங்களில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. பலர் இக்கேளிக்கைகளைக் காணவே ஆலயங்களை நாடுகின்றனர். கோயிலில் பூசைக்காகச் செலவிடும் பணத்தின் பல மடங்கு கேளிக்கைகட்குச் செலவிடப்படுகிறது. கேளிக்கைகள் சமயப் பற்றை குன்றச் செய்துவிட்டன. சமயம் பற்றிய எண்ணக் கருத்துக்களை மாற்றிவிட்டன.

முன்னொருகாலத்தில் மக்கள் சமயம் மாறியதனாற்றான் சைவம் குன்றியது. இதே நிலை இப்போதும் எம்மிடையே தலையெடுத்துவிட்டது. எம்மிடையே உள்ள பிணக்குகள் காரணமாக ஒரு சாரார் பௌத்தத்தை தழுவியுள்ளனர். வேறும் சிலர் தழுவ முயலுகின்றனர். தமிழரைப் பிரித்தாழும் தந்திரத்தைக் கையாண்டு வரும் இலங்கை அரசாங்கமும் மதமாற்றத்திற்குப் பின்னணியில் உதவ முயலுகிறது. ஏற்கெனவே அன்னியர் வருகையால் எம் மக்கள் கிறிஸ்தவத்தை தழுவியமையால் நாம் இரண்டாம்தரப் பிரசைகளாக்கப்பட்டு விட்டோம். இன்னும் எம்மிடையே மதமாற்றம் ஏற்பட்டு வருவது எமது சமயத்திற்கும் எமக்கும் நன்றன்று.

சாதிப்பாகுபாடு சைவத்தைக் குன்றச் செய்வது ஒரு புறமிருக்க, தற்காலத்தில் எமது ஆலயங்களிலுள்ள பூசை ஒழுங்குகளும் சைவத்தின் நோக்கத்திற்கு எதிர்மாறானவையாக இருக்கின்றன. சைவம் கட்டுப்பாடற்ற சமயம்.

''நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பெயர் சங்கரன்''

என்பது உமாபதி சிவாசாரியாரது வாக்கு. மக்கள் இறைவனை நாடிநாடிச் சென்றாற்றான் அவர்களது பாபங்கள் அகலப் பெற்று இறைவனடி சேருவார்கள். தற்காலப் பூசை ஒழுங்குகளோ இதற்கு எதிர்மாறுகவுள்ளன. ஆலயக் கதவுகள் குறித்த நேரத்திற்குத் திறக்கப்பட்டுக், குறித்த நேரத்திற்குப் பூட்டப்படுகின்றன.

விரும்பிய போதெல்லாம் ஆலயங்கட்குச் செல்ல வழியில்லை. எமது சமய அனுட்டான நேரங்களையும் பிறசமயங்களிற்கு இயைவாக மாற்றச் சிலர் முயலுகின்றனர். கோயில்களில் அருச்சனைகட்கும் ஏற்றத் தாழ்வான முறையில் செலவு நிர்ணயிக்கப்படுவதுடன், கூடிய பணம் செலுத்துபவர்கட்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. இதனால் ஏழை மக்கள் தாம் புறக்கணிக்கப்படுவதாக எண்ண வழியேற்படுகிறது. சைவத்தினடிப்படைத் தத்துவம் எமது நாட்டில் மாற்றப்படுகிறதா?

மறுபுறத்தில் மக்களிடையே சமய அறிவு மங்கி வருகிறது. இலங்கைப் பாடசாலைகளில் சமயம் சரியான முறையில் போதிக்கப்படாமையும் இதற்கு ஒரு காரணமாம். சமயம் கட்டாய பாடமாயினும் அது தர்க்க ரீதியாகப் போதிக்கப்படவில்லை. இதனால் சமயக் கொள்கைகளை இளைஞர் நம்ப மறுக்கின்றனர். நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறுகளும் அவர் தம் தேவாரமும் இளைஞரிடையே மெய்யறிவைத் தோற்றுவிக்கவில்லை.

எங்கள் நாட்டில் கோவில்கள் கட்டுக்கடங்காது கூடிவருகின்றன. ஒளவை சொன்னாள் ''கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென்று''. அது தேவவாக்காகி ஊருக்கு ஒரு கோவிலென்ற நிலைமாறி, ஒவ்வொரு ஊரிலும் நாலைந்து கோவில்கள் இருந்து வருகின்றன. இக்கோவில்களைப் பரிபாலிப்பதே மக்களுக்கு ஒரு சுமைதான். நாங்களும் இறைவனை பல மூர்த்தங்களில்தானே வழிபடுகின்றோம். ஒரு பிரதேசத்தில் ஒவ்வொரு ஊரிலும் வெவ்வேறு மூர்த்தங்களைக் கொண்ட கோவில்கள் இருந்தால் மக்கள் அக்கோவில்களை நாடிச் செல்வதும் அதிகரிக்கும். கோவில்கட்கான செலவும் குறையும்தானே.

மேலே கூறியவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து சாதிப் பாகுபாட்டினாலும் ஆலய நிருவாகிகளின் பிடிவாத குணத்தினாலும், சமயப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. கேளிக்கைகள் ஆலயங்களில் மலிந்து விட்டமையால் கேளிக்கை காட்டுவதுதான் சமயமெனப் பாமர மக்கள் கருத்துக்கொண்டுள்ளனர். எம்மிடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகள் சமய மாற்றத்திற்கு வித்திட்டுவிட்டன. கோவில்களில் நேரத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளமை சமய அடிப்படைக் கொள்கைக்கு மாறானதாகிவிட்டது. சமயக் கல்வி தர்க்க ரீதியாக அமையாததால் இளைஞர் மூலம் சமயம் பரப்பும் வழி தடைப்பட்டு விட்டது. கோவில்கள் மக்களுக்கு ஒரு சுமையாகிவிட்டன. இதையெல்லாம் நோக்குமிடத்து எமது சைவத்தின் எதிர்காலம் இந்நாட்டில் புதியதொரு அத்தியாயம் கொண்டதாக உருப்பட வேண்டும் போற்தெரிகிறது. சைவத்துக்கு இலங்கை நாட்டிலே புதுவாழ்வளிக்க என்ன செய்யலாம் என்பது எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்று.

சமயத்தை நன்னிலைப்படுத்த வல்ல முதன் வழி இளம் சந்ததியினருக்குத் தர்க்க ரீதியாகச் சமயம் போதிப்பது தான். தர்க்கமூலம் உண்மையை அறிந்து கொண்டால் அவர்கள் சமயவழி நின்று நீங்க மாட்டார்கள். மனிதனில் ஏற்றத் தாழ்வு இல்லை என்ற நிலையை அகற்ற உயர்ந்த சாதியினர்முன் நிற்க வேண்டும். ஆலயக் கதவுகளை எல்லோருக்கும் திறந்து விட்டால் பிறகு யாருமே சமத்துவம் கோரிச் சண்டைக்கும், சத்தியாக்கிரகத்திற்கும் வரமாட்டார்கள். ஆலயத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் மக்களை இறைவனடிக்கு இட்டுச் செல்லவேண்டும். கேளிக்கைகளைத் தடுத்து பணனிசை பாடல், சமயப் பேச்சுப் போட்டிகள், தேவார திருவாசக மனனப் போட்டிகள் முதலியன ஆலயத்தின் பால் மக்களை ஈர்க்க வல்லன. கேளிக்கைகட்குச் செலவிடும் பணத்தை இவ்வாறான வழிகளில் செலவிடல் ஆஸ்திகத்தை வளர்த்து நாஸ்திகத்தைப்போக்கும்.

நாயன்மார் எம் சமயத்திற்குச் செய்த பணியை இப்போதுசெய்வார் யாருமில்லை. மக்கள் மாயை வழிப்பட்டோர். அவர்களை வழிநடத்த வேண்டியது அறிஞர் கடன். இதற்கென இந்தியாவிலுள்ளவை போன்ற சமயப் பணிக்கான தாபனங்கள் எம் நாட்டிலும் தோன்ற வேண்டும். இவை சமயப்பணிகளிலீடுபட்டு மக்களின் ஈடேற்றத்திற்கு எமது இலங்கையில் துணை நிற்க வேண்டும். சுவாமிநாதத்தம்பிரான் போன்ற பல துறவிகள் எமது நாட்டில் இவ்வாறான தாபனங்களைக் கட்டி வளர்க்க வல்லவர்களென்பதில் எதுவித ஐயமுமில்லை.

**க. முத்துலிங்கம்**
இறுதி ஆண்டு
(ஆங்கிலம்)

# திருவாசகத்தேன்

"தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லல் அறுத்தானந்தம் ஆக்கியதே -எல்லை
மருவாநெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசக மென்னுந் தேன்"

சைவசித்தாந்தமாம் செந்நெறிக்குத் திருமுறை பன்னிரண்டும் உயிர் போன்றமைந்தன. இத்திருமுறை பன்னிரண்டும் செந்தமிழ்க்கண் பொதிந்துள்ள குறைவிலா நிறைவாம் மந்திரமறை நூல்; வாய்மைத் தமிழின் வளம் மிகு இலக்கியம்; இவற்றிற்கு இலக்கணம் என அமைந்தது மெய்கண்ட நாயனார் அருளிய சிவஞானபோதம்; இத்திருவாசகம் எட்டாம் திருமுறையாக அமைந்தது. ஆளுடை அடிகளாம் மணிவாசகப் பெருமானைத் திருப்பெருந்துறையில் குருந்த மரநிழலில் அவர் தம் தவப்பயனாக இறைவனே குருவடிவிற்றோன்றி ஆட்கொண்டருளினார். திருச்சிற்றம்பலத் திருக்கூத்தற் பெருமான்பால் எழுந்த பெருங் காதற்கனிவு தேனினும் இனிய திருவாசகத்தை ஊற்றாகச் சொரிந்தது. வாதவூர் அடிகளது உண்மை ஞானத்தின் விளைவாக எழுந்த அனுபவ ஞானத்திருவாசகத்தை இறைவன் 'பாடுக' என்று உத்தரவிட அடிகளார் பாட இதன் ஒரு பகுதியை இறைவனே தன்கையில் எழுத்தாணி கொண்டு எழுதினார். திருவாசகத்திற்கு அழகிய சொல் பக்குவான்மாக்களால் விரும்பப்படும் வாசகம்; தெய்வத்தன்மை பொருந்திய வாசகம்; என்றெல்லாம் பல சிறப்புப் பொருள்களை அருள் ஞானிகள் கண்டனர். தெய்வ நலங் கனிந்து சொட்டும் சொற்றொடர்களால் அமைந்தவை இனிமையும் எழிமையும் ஆழமும் நிரம்பப் பெற்றவை. மெய்யன்புடன் ஓதுவார், கேட்பார் உணர்வார் அனைவரையும் எல்லையறு பேரின்ப வெள்ளத்தில் மூழ்கச் செய்து பரவசமூட்டும் பண்பின. மெய்யடியாரின் அனுபவ உண்மைகளை தெட்டத் தெளிவாக விளக்குவன. இந்நூலினைப் படித்துச் சுவைத்துப் பேரின்பம் துய்த்த புலவர்கள், திருவாசகம், மணிவாசகம், மதுரவாசகம், வாசகத்தேன், வாசகமாலை என்று பற்பல பெயர்கள் சூட்டி மகிழ்ந்தனர். மனம் குழைந்து படிப்போர் நெஞ்சத்து அமுதூறி நிலவச் செய்வதாகலின் மதுரவாசகம் என சிவப்பிரகாச சுவாமிகள் விதந்தனர்: நன்மணிகள் பல கோத்து ஆக்கும் மாலை போன்று அருள் சொட்டும் சொன்மணிகள் பல கோத்து ஆக்கியதால் வாசகமாலை எனவும் அவர் கருதினார். வாசகத்தேனென இவரும் இராமலிங்க வள்ளலாரும் சுவைத்து மகிழ்ந்தனர். திருவாசகத்தைத் தேன் போன்றதென்று பக்தர் வியத்தல் காணக்கிடக்கிறது. திருவாசகம் முழுவதையும் அனுபவித்து அதன் சுவையூற்றுக்கள் தோறும் தோய்ந்து தோய்ந்து அதற்கு ஒப்புவமை தேடி ஈற்றில் தேனையே ஒப்பாகக் கண்டனர். இனிய பொருட்கள் பலவற்றுள்ளும் தேனைக்கண்டதிலேயே தனிச்சிறப்பு உண்டு. தேனானது தூயமலரிற்றோன்றி தீஞ்சுவை உடைத்தாய் நெஞ்சுக்கு வலுவை ஊட்டுவதாய் குரல் இனிமை மிகக் கொடுப்பதாய் மிகுதியாக உண்பார்க்கு இலகுவில் மலம் கழிப்பதாய் பித்தம் தணிப்பதாய் கபத்தை இளக்குவதாய் நோய்கள் பலவற்றைத் தீர்ப்பதாய் அமைந்துளது. அதுபோல் திருவாசகத் தேனானது வாதவூரண்ணலின் மலர் வாய்ப்பிறந்து சொற்சுவையும் பொருட்சுவையும் நிரம்பப்பெற்று உயிருக்கு சிவஞான உணர்வாகிய வலுவையூட்டும். சேயின் குரல் இனிமையாகித்தாயை மகிழ்விப்பதுபோல சிவமாம் தாய்க்கு கருணையை மிகுவித்து உயிர்கள் அனைத்திற்கும் இனியனுக்கும் தொல்லையிரும் பிறவிச் சூழும் தளையாகிய ஆணவ மலத்தைக் கழிக்கும். பிறவிப்பிணி தீர்க்கும் திருவாசகத்தினைச் சுவைத்து பேரின்பம் துய்த்த அடியார் "திருவாசகம் என்னும் தேன் அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியது" என்று மட்டற்ற இன்பப் பெருக்குடன் பாடிப்பரவுகின்றார்.

இந்நூல் படிப்பவர் மனதைப் பரவசப் படுத்தும் பெற்றியது. எளிய சொல்லும் விழுமிய பொருளும் கொண்டு இழுமென் ஓசையால் தலைவனை அடைய உதவும் தனிப் பெருந் திறன் உடையது. திருவாசகத்தினை ஒரு முறை ஓதினாலும் உயிர்த்தன்மை கெட்டு சிவமயமாதல் நிச்சயம். தன்னையும் தலைவனையும் அறியாது அலைகின்ற மனதிற்கு ஓய்வு நல்கும் அருமருந்து. கடவுளின் அருளை வாரிவாரி வழங்கும் கற்பக தரு சித்தமலம் அறுவித்து சிவானந்தப் பெருங்கடலை சிந்தையில் நிறைய உதவி

திருமேனிமுழுவதும் பரவச்செய்து புளகாங்கிதம் கொள்ளச் செய்யும் தனிப்பெரும் நூல் சிவப்பிரகாச சுவாமிகள் வேதத்திற்கும் திருவாசகத்திற்கும் வேற்றுமை கற்பிக்கின்றார். வேதம் ஓதக் கேட்டு நெஞ்சம் குழைந்து நிற்பவர் ஒருவரும் இல்லை: திருவாசகத்தை ஒருமுறை ஓதினால் கருங்கல் மனமும் கரைகிறது. கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றன. மெய்ம்மயிர் சிலிர்க்கிறது. அனைவரும் அன்பு வெள்ளத்தில் ஆழ்கின்றனர் எனப் பின்வரும் பாடலில் விளக்குகின்றார்.

''விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப்பிறந்த வாசகத்தேனோ
யாதோ சிறந்த தென்குவீராயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்ச நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசகமிங் கொருக்கால் ஓதிற்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடு மணற்கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப்பெய்தி
அன்பராகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே''

மற்றொரு பகுதியிலே மணிவாசகன் என்னும் மேகம் பொழி திருவாசக வெள்ளம் பெருக்கெடுத்தோட அதனைப் படிப்பவர் மனக்குளம் நிரம்பி, நாக்கெனும் மதகு வழியாக வெளிப்பட்டு கேட்பவர் செவிமடை வழியாக மனவயலிற் பரவி அங்கு அன்பாகிய வித்தில் இருந்து சிவமுளையைத் தோற்றுவித்தது. அதில் இருந்து கருணை மலர் மலர்ந்து முத்திப் போகம் விளைந்ததுஎன உருவகித்து மகிழ்ந்து கொண்டாடிப் பாடுகின்றார். மேலும் அவர்தானே திருவாசகம் பொற்கலத்தை ஒப்பதெனவும் அதனை ஓத முத்தி கிடைக்கும் எனவும் பாடிப் பரவசப்படுகின்றார். பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை போல் பாவென்றால் திருவாசகம்தான் என்பதும் சிவப்பிரகாச சுவாமிகளின் சுவைப்பகுதிகளில் அடங்கும்.

திருவாசகத்தையே தமது உபாசனா மூர்த்தமாகக் கொண்டு தமது வாழ்நாள் முழுவதும் அதனையே படித்து அதனாலேயே மனம் கனிந்தவர் இராமலிங்க சுவாமிகள் மணிவாசகப் பெருமானை அழைத்து திருவாசக அநுபவத்தைத் தெரிவிக்க விரும்புகின்றார். அன்புருவம் பெற்று அருளுருவம் அடைந்து இன்புருவம் ஆன பெருநிலையை வியக்கின்றார். திருவாசகத்தை எண்ணும் தோறும் தான் அடையும் இன்பப் பெருக்கை,

''சேமமிகுத் திருவாத வூர்த்தே
வென் றுலகு புகழ்
மாமணியே நீ புரைத்த
வாசகத்தை எண்ணு தொறுங்
காமமிகு காதலன் தன்
கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையாள் இன்பினும்
இன்பெய்துவதே''

என்னும் பாடலால் விளக்குகின்றார். மேலும் ''உன் திருவாசகத்தை நான் கலந்து பாடுங்கால் கருப்பஞ் சாற்றோடு தேன், பால் கனித்தீஞ் சுவை எல்லாம் கலந்து உண்டாற்போல் இனித்ததும் அன்றி ஊனொடும் உயிரொடும் கலந்து உவட்டாமல் இனிக்கிறதே'' என்று

''வான்கலந்த மாணிக்கவாசக
நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து
செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென்
ஊன் கலந்து உயிர்கலந்து
உவட்டாமல் இனிப்பதுவே''

என்னும் பாடலாலும், அவ்வித திருவாசகத்தை ''மற்றவர்கள் ஓதக் கேட்ட கீழ்ப் பறவைச் சாதிகளும் வேட்டமுறும் பொல்லா விலங்கினங்களும் கூட மெய்ஞ் ஞானமாம் சிவஞானத்தை விரும்பி அடையப் பெறுமெனில் மனிதப் பிறவி பெற்ற யான் மெய்ஞ்ஞானம் அடைவதில் என்ன வியப்பு இருக்கிறது'' என்று,

'' வாட்டமிலா மாணிக்க வாசக
நின் வாசகத்தை
கேட்டபொழு தங்கிருந்த
கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா
விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில் அங்கு
நானடைதல் வியப்பன்றே''

என்னும் பாடல் மூலம் காட்டி ஆளுடை அடிகளாரது அருள் வாசகத் தேனாகிய கடலில் அமிழ்த்துகின்றார்.

புறச்சமயத் தலைவராய் இருந்த ஜி. யூ. போப் அவர்கள் இந்நூலைச் சுவைத்து இன்பம் கண்டவர். உலக மதங்களில் உயர்ந்த உண்மையான மதம் சைவமே என்றும் சைவ சிந்தாந்தத்தின் தெளி தேனாகிய திருவாசகம் தென்னிந்தியாவில் உள்ள திருக்கோவில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தமிழனுடைய உதட்டிலும்

உலாவிவரும் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் தனிச் செந்நூல் என்றும் கூறுகின்றார். திருவாசகத்தின் பொதுத் தன்மையையும், பழமையையும், சிறப்பையும் 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்னும் பழமொழி உணர்த்துகிறது. மக்களின் மன உறுதியை அளக்கும் கோலாக இதை மதித்தனர். இது மனிதனை உருக்கும் தனிச்சிறப்பு உடையது. அதற்கு உருகாத மனம் எதற்கும் உருகாதது; இரும்பிலும் வலிது என்பது புலப்படும்.

இவரது பாடல்கள் ஒவ்வொன்றும் படிக்கத் தெவிட்டாது இனித்து செம்பொருள் காட்டும் பெற்றியன. மணிவாசகர் இறைவனுடன் ஒன்றித்து நின்று வெற்றி பேசி மகிழும் திறனை,

''தந்ததுன் றன்னைக் கொண்டதென்றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோவில் கொண்டவெம்
-பெருமான்
திருப்பெரும் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர் கைம்மாறே''

என்னும் பாடல் காட்டுகிறது.

இவ்வாறு ஒவ்வொரு திருவாசகமும் பிறவிப்பிணி போக்கும் மருந்தினை ஊட்டும் இனிய அனுமானமாக அமைந்தது. நோயாளிகள் அனைவராலும் விரும்பி உண்ணப்படும் மதுரமிகு தேன் போன்ற திவ்விய திருவாசகத்தை சைவசமயிகள் ஆகிய நாம் அனைவரும் நாளும் பாடிப்பரவி வருவோமானால் அல்லற்பிறவி தரும் மலம் நீங்கி இறைவனைக் காண வழியாகும். அப்பர் சுவாமிகளும் இப்பயனையே கருதி,

''குனித்த புருவமுங் கொள்வைச் செவ்வாயிற்
குமிழ்ண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற்
பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற் பாதமுங்
காணப் பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே'' என்று கூறுகின்றார்;

இத்தால் எண்ணரிய பிறவிகளில் அரிதான மானிடப் பிறவியைப் பெற்ற நாம் திருவாசகத்தினை சிறப்புற ஓதியும் ஓதக் கேட்டும். மற்றவர்கள் கேட்டுப் பயன் பெற உதவியும் உய்தி பெறுவோமாக.

செல்வி கண்மணி சின்னத்துரை
(சைவப் புலவர்)
மனையியற் பயிற்சி
1-ம் வருடம்

''பகவான் நாமத்தைக் கேட்டவுடன் எவனுக்கு மயிர்க் கூச்சலும் ஆனந்த பாஸ்யமும் உண்டாகின்றனவோ அவனுக்கு வாஸ்தவமான ஞானோதயமிருக்கிறது என்று தெரிந்து கொள்''

—இராமகிருஷ்ணர்.

# சைவசித்தாந்தமும் முப்பொருளும்

வேதங்களைக் காட்டிலும் ஆகமங்களையே சிறப்பாகக் கைக்கொள்ளும் மதம் சைவசித்தாந்தம் ஆகும். இன்று சைவசித்தாந்தமதம் தமிழ் நாட்டில் மட்டுமேவழங்குகின்றது. ஆகமம்என்ற சொல்லுக்கு 'ஒன்றிலிருந்து வந்தது' என்றும், 'பதி பசு பாசம்' ஆகிய முப்பொருளையும் கூறுவது என்றும் பொருள் கூறுவர். சந்தானாசாரியருள் முதல்வராகிய மெய்கண்டதேவரால் அருளிச் செய்யப்பட்ட சிவஞானபோதம் உள்ளிட்ட மெய்கண்டசாத்திரங்கள் பதினுன்கும் சைவசித்தாந்தக் கருத்துக்களை எடுத்து விளக்குகின்றன. எனினும் இவற்றிற்குக் காலத்தால் முற்பட்ட தோத்திர நூல்களாகிய பன்னிரண்டு திருமுறைகளும் சைவசித்தாந்தக் கருத்துக்களை—உண்மைகளை—முப்பொருள் உண்மைகளை அநுபூதிமான்களுடைய அநுபவவாயிலாகக் கூறுவன. கடவுள் என்ற சொல்லுக்கு, 'உள்ளதைக் கடந்தவன்' 'உலகை இயக்குபவன்' 'உலகைக் கடந்தவன், அதே சமயம் உலகுள்ளும் உள்ளவன்' என மூன்று விதமான விளக்கம் கொடுப்பது சைவசித்தாந்தம்.

சைவசித்தாந்திகள் முப்பொருள் உண்மைபற்றி பேசுவது வழக்கம். நமது சிந்தனைக்கும் ஆராய்ச்சிக்கும் உரிய விஷயங்கள் அனைத்தையும் இந்த மூன்று பொருள்களுள் அடைக்கலாம். இவற்றை பதி (இறைவன், கடவுள்) பசு (ஆன்மா) பாசம் என்பர்.

கடவுள் (பதி) உண்டென்பதைச் சைவசித்தாந்திகள் உலகைக் கொண்டு நிரூபிக்கின்றனர். பானையைக் கொண்டு அதனை வனைந்த குயவன் ஒருவன் உளன் என்பதை அறிகிறோம். அவ்வாறே உலகைக் கொண்டு அதனைப் படைத்தவன் ஒருவன் இருந்தேயாக வேண்டும் என்பது உறுதியாகின்றது. பானை தன்னைத் தானே ஆக்கிக்கொண்டது. என்று கூறுதல் பொருந்தாது. அதைப்போலவே உலகம் தன்னைத் தானே படைத்துக் கொண்டது என்று கூறுவது பொருந்தாது. மேலும் உலகம் பகுதிகளையுடையது. பகுதிகளையுடைய பொருள் எதிலும் அப்பகுதிகள் தாமாகவே வந்து சேர்ந்து கொள்வதை யாம் எங்குமே கண்டதில்லை. அப்பகுதிகளை ஏற்றவாறு யாராவது ஒருவர் ஒன்று சேர்ந்தால்தான் அவை ஒன்று சேர்ந்து ஒரு பொருளாகும். உதாரணத்துக்கு ஒரு குடையை எடுத்துக் கொள்வோம். அதன் பல பகுதிகளும் தாமாகவே ஒன்று சேர்ந்து ஒரு குடையாக மாட்டா. மனிதன் ஒருவனே அவற்றை ஏற்றவாறு பொருத்தி ஒரு குடையை உற்பத்தி செய்ய முடியும். உலகிலுள்ள பொருள்கள் எல்லாம் தோற்றம், அழிவு என்ற நியதிக்குட்பட்டவையாதலால் உலகமானது தோற்றமும் அழிவுமின்றி என்றுமே இந்த நிலையிலே உள்ளது எனக் கொள்ளுதலும் பொருந்தாது. எனவே உலகம் படைக்கப்பட்ட பொருள் ஆதலால் அதனைப் படைத்தவன் ஒருவன் உளன் என்பது வெள்ளிடை.


தவிர ஆன்மாக்களின் இன்ப துன்ப நுகர்வுகளுக்கு அவற்றின் கன்மமே காரணமென்பதைச் சைவசித்தாந்திகள் மட்டுமன்றிச் சமணர், பௌத்தர் கூட ஒப்புக்கொள்வர். அறிவில்லாத சடப்பொருளாகிய கன்மம் தன்னைச் செய்தோனைத் தேடிச் சென்று சேரமாட்டாது. முற்பிறப்பில் செய்த கன்மங்களைத் தேடியறிந்து அவற்றின் பலன்களை அநுபவிக்கும் வல்லமை ஆன்மாவுக்கும் கிடையாது. ஆதலால் ஒவ்வொரு ஆன்மாவுக்கும் அதன் கன்ம பலனைப் புசிப்பதற்கு ஏற்ற உடலைக் கொடுக்கவும் அதன் வாயிலாக அந்த ஆன்மா தனது கன்மங்களைப் புசிக்கச் செய்யவும் ஓர் இறைவன் வேண்டுமென்பதும், அவன் முற்றுணர்வுடையவனும் தான் கன்மத்தால் பாதிக்கப்படாதவனுயுமிருத்தல் வேண்டுமென்பதும் புலனுகின்றன.


மேலும், சுருதிப்பிரமாணம் அநுமானப் பிரமாணம் என்பவற்றாலும் பதியுண்மையை நிரூபிக்கலாம்,

இனிப், 'பசு' (ஆன்மா) காட்சிப் பொருள் அல்ல. பசு என்பது 'கட்டுண்டது'— 'மலத்தால் கட்டுண்டது' எனப் பொருள்படும். பிணமாகக் கிடப்பவனது



பலாலி ஆசிரியர் கழக சைவமாணவர் மன்றம்—1971





சைவமாணவர் மன்றம்—1971 இரண்டாம் வருட அங்கத்தவர்கள்



# அம்பிகை அருள்

பண்டித வித்துவான் சைவப்புலவர்
## இணுவையூர் இ. திருநாவுக்கரசு அவர்கள்
தமிழ், சைவசமயத்துறைத் தலைவர்,
பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

சைவ மக்களாகிய நாம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ளோம். அதுபோலவே சாக்த சமயத்தவர்கள் சக்தியை முழுமுதற் கடவுளாக உபாசிப்பர். வைணவ சமயத்தவர் மகாவிஷ்ணு மூர்த்தியை முழுமுதற் கடவுளாகக் கைக் கொள்வர். குறித்த மூன்றும் சைவசமயத்தின் பிரதான முப்பெரும் பிரிவுகளாகும்.

வழிபாட்டு முறை நோக்கின் இவை மூன்றாகத் தோன்றினும் இம்மூன்றும் உணர்த்துவன அநாதிமல முத்தர் ஆகிய முந்துசிவத்தையும் அச்சிவப் பிரம்மத்தோடு இரண்டறக் கலந்து நின்று அச்சிவத்தாலதிட்டிக்கப்பட்டு நின்று, தோற்ற ஒடுக்கங்களையும் ஆன்மாக்களுக்குப் போக போக்கியங்களையும் அளித்து, அவற்றுக்குப் பரமானந்தப் பெரும் பேற்றினை அளித்து நிற்கும் சர்வ வல்லமை ஆகிய சக்தியையும், சக்தி சொரூபமாக நிற்கும் இறைவனது சக்தியாகிய மகாவிஷ்ணு மூர்த்தியையும் குறித்தலால், இம்மூன்று நெறிகளும் சென்றடையும் பரமானந்தப் பெரும் பேறு ஒன்றே என்பதும் தெளிவாகும்.

''யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்''

என்ற மெய்வாக்கு இதனை வலியுறுத்தும். கம்பநாடரும்

'கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைகளாலும்
இயம்பரும் பொருளி தென்னத்
தொல்லையில் ஒன்றேயாகித்
துறைதொறும் பரந்த சூழ்ச்சி
பல்பெருஞ் சமயஞ் சொல்லும்
பொருளும் போற் பரந்ததன்றே'

என சமய சமரசம் செய்துவைக்கின்றார்.

இந்த உண்மையை மறந்து பிற்காலத்தவர் சிலர் 'புத்தராய் ஏகவாகி முகம்மது வாறாய் போற்றி'' எனப் பாடல் புனைந்து, அகில உலகத்துமுள்ள சகல சமயங்களும் ஒரே தன்மை உடையவை எனப் பிறழ உணர்ந்து, எந்த ஒரு சமயத்தில் சேர்ந்தாலும் கடவுளை அடையலாந்தானே என நம்பி, நெறிதவறிச் சென்று அவலக்கடலில் வீழ்கின்றனர். அந்தோ! இது மிகு பரிதாபம்

"நெறியல்லா நெறிதன்னை
நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே
சிவனருளே சேரும் வண்ணம்
குறியொன்று மில்லாத கூத்தன்றன்
கூத்தை யெனக்கு
அறியும் வண்ணம் அருளியவா
றார்பெறுவார் அச்சோவே''

என்னும் திருவாசகத்து மணிவாசகர் இதனைத் தெளிவு செய்துள்ளார்.

''புத்தராய்ச் சில புனைதுகில் உடையவர்
புறனுரைச் சமணர்
எத்தராகி நின் றுண்பவர் கூறிய
ஏழைமை கேளேன் மின்''

எனத் திருக்கேதீச்சரப் பதிகத்தில் ஞானசம்பந்தப் பெருந்தகை ஆணையிடுகின்றார். இந்தப் பிரமாணங்களைக் கொண்டு சைவம், சாக்தம், வைணவம் என்பன மெய்ச் சமயங்கள் என்பதும், மற்றறையவை மதங்களென்பதும், சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், பைரவம் என்று சொல்லப்படும் ஆறும் அறுவகை நெறிகளென்பதும், இச்சமயநெறிகள் அகநெறிகளாதலின் பலபிறவிகள் இந்நெறியில் நின்ற ஆன்மாக்கள், பதிபுண்ணியம் எய்தி, மீண்டும் சைவமாம் சமயஞ் சார்ந்து, பேரானந்தப் பெருவாழ்வினை எய்தும் என்பதும், வெள்ளிடைமலை.

ஆகவே சக்தி வழிபாடும் சிவவழிபாடேயாகும். சுத்த அத்துவித சைவசிந்தாந்தப் பெருநெறியே சென்று அடைந்தவர்களுக்கெல்லாம், நன்னெறிக் காதாரமாகவுள்ளது ஸ்ரீபஞ்சாட்சரம் — அது 'சிவாயநம' என்னும் மந்திரம், அதில் சிவத்தோடுடைய 'வ' சக்திக்குரியதாகும் மந்திராட்சரம் பக்குவ ஆன்மாவாகிய 'ய' சிவத்தோடு அடைதற்கு ஆதாரம் 'வ' ஆகிய சக்தியேயாம். முத்தியாகிய பேரின்ப நிலையில் ஆன்மா சிவத்துக்கும் சிற்சக்திக்கும் இடையே நின்று பேரின்பங்காணும். இதனை உமாபதி சிவாச்சாரியார்.

''ஆசில் நவா நாப்பண் அடையாது அருளிறைல்
வாரியிடை நிற்றல் வழக்கு''

என்கிறார்.

அதன் பொருள் யாதெனில் ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தல் (சிவாய நம) நடுவே நின்ற யகரம் 'ம-ய' என்ற எழுத்துக்களின் நடுவே நிற்றலை விட்டுச் 'சி-வ' என்ற எழுத்துக்களில் நடுவேயாகி விடுகின்றது. அதனையே ''தத்துவம் அஸி'' வாக்கியம் என்பர். அதனை மணிவாசகனாரும் ''சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அந்தமிலா ஆனந்தம்'' என்கிறார். இவ்வாறு ஆன்மாவுக்கு ஈடேற்றந்தந்து இறையோடு ஆன்மாவை இணைவிப்பது ''சக்தி'' ஆகிய அம்பிகையின் பேரருளேயாம்.

ஆகவே உலக இன்பங்களுக்குக் காரணமான உடலுறுதி, செல்வம், கல்வி ஆகிய மூன்று பேறுகளைத் துர்க்கா, இலக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய மூன்று சக்திகளாக நின்று அதிட்டித்துச் செயல்புரிந்து, ஆன்மாக்களை நுகர்விக்கும் சிவசக்தியே, முத்தியாகிய பேரின்ப வீட்டையும் ஆன்மாக்களுக்கு அருளும் பேரருள் வடிவானது. இவ்வுண்மையைத் ''தாயொடு சென்றுபின் தாதையைக் கூடி'' என்ற வாக்கு விளக்குகிறது.

இச் சிற்சக்தியை வழிபடுதற்குரிய காலம் நவராத்திரி புண்ணிய காலமாகும். மாசி மாதத்துச் சிவராத்திரியாகிய ஒரு நாளில் சிவனுக்கு விழா எடுக்கும் தமிழ் மக்களாகிய நாம், பராசக்திக்கு ஒன்பது இரவுகள் விழா எடுத்துப் பத்தாவதுநாள் 'விஜய' தசமி புண்ணிய காலத்தில் அம்பாளின் அருட்பிரவாகத்தில் நிறைந்து சுபகருமங்களை மேற்கொண்டு பெறுதற்கரிய பெரும் பேறுகளெல்லாம் பெற்றுக் கொள்ள அம்பிகை அருள் ஆதாரமாகின்றது.

அம்பிகையும் சிவமும் நெருப்புஞ்சூடும் போல ஒன்றே என்பதை மணிவாசகரும்

''உடையாளுன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன் னம்பலத் தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

என்னும் பாசுரத்து நன்கு தெளிவு படுத்தியுள்ளார்.

வாழ்க அம்பிகை அருள்.

# வள்ளி மணாளன்

—★—

அழகான மயில்மீது விளையாடி வருகின்ற
வழமான வாழ்வுக்கு வரமீனும் முருகா — விழிகள்
குளமாக அடியார்கள் குவலயத்தில் துதிக்கின்ற
பழனி மலைமீதுறையும் பண்பான குமரா.

மலையெடுத்த இராவணனின் மமதைநீக்கி வரமளித்து
அலைவிடுத்த கங்கையதை தலையில்வைத்த — மலையவனை
மலர்தொடுத்து மன்மதனும் மனம் மாற்ற
பலர்போற்றும் பாலகனைப் பார்வதியும் தந்தனளே.

உமையவளின் இளமகனை மாலவனின் மருமகனை
எமையாளும் இறையவனைக் கலியுகத்துக் காவலனை
இமைபோல அடியாரின் குறைதீர்க்கும் கோமகனை
அமைந்திலங்கும் அப்பனே அருள்தாராய் ஆறுமுகா.

செந்தமிழால் வந்துனை வைதாலும் வாழஅருள்
தந்திடுவாய் தமிழ்க்கடவுள் என்றுனை எந்நாளும்
நந்தமிழர் நவின்றிடுவர் நானறியப் பக்தர்களும்
சொந்தமென வணங்கிடுவர் சோலையுறை வேலவனே.

முருகநாமம் கேட்டவுடன் உருகிடும் உள்ளமதைத்
தருவாயே தணிகைமலை வடிவேலா! என்றும்நீ
வருவாய்மயில் மீதினிலே குருவாக எங்களுக்கு
அருள்வாயுன் இன்னருளை அழகுவள்ளி நாயகனே.

— சி. கிருஷ்ணபிள்ளை
கணிதம் (நிறைவாண்டு)

# இந்துசமய மாத மகத்துவம்

உலகில் உள்ள சமயங்களில் எல்லாம் மாதந்தோறும் விசேட தினங்கள் உள்ளன. அவ்வாறே சைவ சமயிகட்கும் விசேட தினங்கள் வருகின்றன. இவ்விசேட தினங்களை யாம் கடைப்பிடிக்கின்றோம். சிலவற்றிற்குக் காரணம் தெரியும். பலவற்றிற்குத் தெரிவதில்லை. எனவே ஒவ்வொரு விசேட தினத்திற்குரிய விளக்கத்தையும், முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்ளல் பயனளிப்பதாகும். வருடம் முழுவதும் வரும் விசேட தினங்களையும் குறிப்பிடுவதை விரிவஞ்சி விடுத்து மாதம்தோறும் முக்கியமான தினங்களைக் குறிப்பிட விழைகின்றேன்.

**சித்திரை - வருடப்பிறப்பு**

சைவ சமயிகட்கு சித்திரை மாதமே வருடத்தின் முதல் மாதம். சித்திரை முதலாம் நாளில் சூரியன் மேடராசியாக கிழக்குத்திசையில் தோன்றுவான். அந்நாட் சங்கராந்தியை விஷு புண்ணிய காலம் என்பர். இப்புண்ணிய காலத்தையே மிகப் புனிதமாய் வருடப் பிறப்பெனக் கொண்டாடுகிறோம்.

**வரலாறு:** விஷ்ணுபகவான் கண்ணபிரானாகத் துவாரகையில் அரசு செய்து கொண்டிருந்தார். அச்சமயம் நாரதர் பெண் வடிவாய்க் கொண்டு அவரைச் சேர நினைத்துத் தன் எண்ணத்தைக் கண்ணபிரானிடம் தெரிவித்தார். கண்ணபிரான் ''யமுனா நதியில் நீராடி வா'' என்றார். நாரதர் ஸ்நானஞ் செய்து பெண்வடிவாய்க் கொண்டு பகவானை அணைந்து வருடம் ஒரு பிள்ளையாக அறுபது பிள்ளைகளைப் பெற்றார். ஒவ்வொரு வருடமும் பிறந்த பிள்ளைகளே பிரபவ முதலிய அறுபது வருடங்களுமாம். ஒவ்வொரு பிள்ளையும் பிறக்கும்போது அவர்கள் கொண்டாடியதே வருடப் பிறப்புத் தினமாம்.

**வைகாசி**

**வைகாசி விசாகம்:** வைகாசிமாத பூர்வ பட்சத்தில் விசாக நட்சத்திரம் கூடி வருவதே இத்தினமாகும். பூரணை சம்பந்தப்படுதல் சிறப்பானது. சுப்பிரமணியக் கடவுள் அவதாரஞ் செய்த தினம் இதுவெனவும் அதனாலேயே அவருக்கு விசாகன் எனப் பெயர் வந்ததென்றும் சொல்வர்.

**ஆனி**

**ஆனி உத்தரம்:** சிவபெருமானுக்குச் சிதம்பரம் முதலிய ஆலயங்களிலே தேவர் நாளை ஆறு காலமாகப் பிரித்து ஆறுகாலப் பூசை அபிஷேகம் செய்து வருவர். அதன்படி ஆனி மாதம் பகல் இருபது நாளிகைக்கும் முப்பது நாளிகைக்கும் இடைப்பட்ட காலம் சாயரட்சை பூசை காலமாகும். அன்றியும் இந்நட்சத்திரம் சூரிய பகவானது நட்சத்திரமாகும். இக் காரணங் கருதிச் சைவ சமயிகள் புனிதமும் விசேடமுமாய் கருதுவர். இதற்கு வேறு காரணங்கள் சொல்வாரும் உண்டு.

**ஆடி**

**ஆடி அமாவாசை:** அமாவாசை என்பது வான சாத்திரப்படி சூரியனும் சந்திரனும் சேர்ந்து ஒரே ரேகையில் கூடுங் காலம். சூரியன் பிதுர்காரகன் சந்திரன் மாதுர்காரகனுமாம். இதனால் அமாவாசை பூரணைகளைப் பிதா மாதாக்களை இழந்தவர்கள் விரதமாய்க் கைக் கொள்ளுகின்றனர்.

தேவகாலக் கணக்கின்படி அமாவாசை சாயரட்சையாகும். இக்காலம் பிதுர் தேவதை வழிபாட்டிற்கு உகந்தது. எனவே சைவசமயிகள் அக் காலத்தில் விசேட புண்ணிய தீர்த்தங்களை நாடி தீர்த்தமாடி ஆலய தரிசனம், பிதிர் தர்ப்பணம் முதலிய செய்து, இயன்ற அன்னதானம் முதலிய தானங்கள் செய்து புனிதமுறுகின்

றனர். இக்காலத்தில் மட்டுநகர் அமிர்த களி மாமாங்கத் தீர்த்தமும் யாழ்நகர் கீரிமலைத் தீர்த்தமும் இலங்கைச் சைவ சமயிகட்குப் புனித தீர்த்தங்களாகும்.

## ஆவணி

ஆவணிச் சதுர்த்தி: வருடந்தோறும் ஆவணி மாதம் வளர் பக்கச் சதுர்த்தி வரும்போதே இப்புனித நாள் வரும். இது விநாயக சதுர்த்தி என்று அழைக்கப்படும் மற்றைய மாதங்களில் வளர் பக்கம் வரும் சதுர்த்தியையும் விநாயகர் சதுர்த்தி என்று கொள்வர். அக்காலத்தில் விநாயகப் பெருமானை வேண்டி விரதமிருந்து, பூசை அர்ச்சனை அபிஷேகம் திருவிழாச் செய்வர்.

கதை வருமாறு:

தேவர்கள் விநாயகப் பெருமானைத் துதித்தனர். அவர்கள் மகிழும் பொருட்டுப் பெருமான் விகடமாகக் கூத்தாடினர். இதனால் பெருமானுக்கு ''விகடசக்கரன்'' எனும் பெயரும் வந்தது. ஆனால் சந்திரனே விநாயகப் பெருமானது கூத்தினை இகழ்ந்து பேசினன். இதனால் சினம் அடைந்த விநாயகர் ''உன்னை இத்தினத்தில் யாரும் தரிசித்தால் அவர்கள் பல துன்பங்களை அடையக் கடவர்'' என்று சபித்தார். அதனாலேயே ஆவணிச் சதுர்த்திப் பிறையை ஒருவரும் பார்ப்பதில்லை. மேலும்,

சிந்துரன் என்னும் அசுரனைச் சங்கரிக்க, கஜானன மூர்த்தியாய், விநாயகப் பெருமான் ஆவணிச் சதுர்த்தியில் திருவவதாரஞ் செய்தார் என்பதும் பிறிதொரு வரலாறாகும்.

## புரட்டாதி

நவராத்திரி: நவம் - ஒன்பது புரட்டாதி மாத அமாவாசைக்குப் பின்வரும் ஒன்பது நாட்களும் நவராத்திரி எனப்படும். இந்நாட்களிலே கும்பம் நிறுத்தி, பொம்மைகள் வைத்து விசேடமாய் இராக் காலங்களில் பூசை செய்வர். அந்நாட்களில் உமாதேவியார், துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி என்னும் சக்திகளாய் வடிவு கொண்டிருந்து பூசையேற்று அருள்வார்.

வரலாறு: மகிடாசுரனைச் சங்கரிக்க உமாதேவியார் தனது நவாம்சமாகிய சக்திகளை அனுப்ப அவை தோல்வி கண்டன. பின்னர் அம்மையே துர்க்கை வடிவு கொண்டு ஆயுதந் தாங்கிச் சென்று ஒன்பதாம் நாள் சங்கரித்தார் எனவும்,

ஏகாதச உருத்திரர்கள் உமாதேவியாரை வேண்டி ''அம்மையே நாங்கள் ஒருநாட் செய்யும் பூசை இறைவனுக்குச் சேரும்படி அருள்பாலித்தால் ஒரு இரவுக்குப் பதில் உம்மை ஒன்பது இரவுகள் பூசிப்போம்'' என வேண்டியதிலிருந்து நவராத்திரி வந்தது என்றும்,

இறைவன் திருக்கண்களை அம்மையார் மறைத்த குற்றம் நீங்கக் காஞ்சியிலும் அருணையிலும் தவமிருந்து இடப்பாகம் பெற்ற தினமெனவும் கூறுவர். விஜய தசமி விஜயம் - வெற்றி. இது நவராத்திரியின் கடைசி நாளாகிய பத்தாம் நாள் நடக்கும் உற்சவம்; இந்நாளே மகிடாசுர சங்காரம் நடந்தது எனவும் கூறுவர். மேலும்,

பாண்டவர்கள் அஞ்ஞாத வாசம் முடித்து அடுத்த நாள், தாங்கள் வன்னி மரத்தில் வைத்துச் சென்ற ஆயுதங்களை எடுத்துப் பூசை செய்த நாள் என்றும், அதனால் இப்பெயர் வந்ததெனவும் கூறுவர்.

அன்று ஆலயங்களில் வன்னிமரமோ வாழைமரமோ நட்டுச் சுவாமியை எழுந்தருளப் பண்ணி அவ்வசுரனைச் சங்கரித்த பாவனையாக அம் மரத்தை வெட்டித் திருவிழாச் செய்வர். அன்று காலை வித்தியாரம்பம் முதலிய செய்யப்படும். பத்து நாள் தேவி பூசையை வட இந்தியாவில் தசரா (பத்து) என்பர்.

இதன் உட்பொருள் ஆன்மாக்களைப் பீடித்த ஆணவத்தை (அசுரன்) இறை பலத்தால் அழிப்பதாகும். இம்மலம் அழிய இறைபதம் கிடைக்கும்.

ஐப்பசி

இம்மாதத்தில் இரு முக்கிய தினங்கள் உண்டு. அவையாவன தீபாவளி, கந்த சஷ்டி என்பனவாம். இருந்தும் தீபாவளி பற்றி இங்கு குறிப்பிடப்படுகின்றது.

தீபாவளி தீப + ஆவளி தீபங்களின் வரிசை இது வருடந்தோறும் ஐப்பசி மாதம் கிருஷ்ண (தேய்பிறை) பட்ச சதுர்த்தி கூடிய இரவு விடியுமுன் உள்ள காலத்தில் வருவது. வடஇந்தியருக்கு அந்நாளே வருடப் பிறப்பாம். இத்தினத்தைச் சைவ சமயிகள் மிகவும் விமரிசையாகக் கொண்டாடுவர்.

வரலாறு: நிலமகளுக்கும் விஷ்ணுவுக்கும் பிள்ளையாகப் பிறந்தவனே நாகாசுரன். இவன் பிரமனிடம் பல வரங்களைப் பெற்றான். இவற்றுள் தன் தந்தையும் தாயுமே தன்னை அழிக்க வேண்டுமென்று பெற்றுக் கொண்டான். பிராக் சோதிஸ்புரத்தில் இருந்து ஆட்சி புரிந்த அவன் தன் நாட்டில் குளித்தல், சீலை தோய்த்தல், வீடுவாசல் வளவுகளைக் கூட்டுதல், மெழுகுதல் என்பன யாரும் செய்யக்கூடாது எனக் கட்டளையிட்டான். தேவர்கள், முனிவர்கள், மனிதர்கள் பலருக்கும் துன்பஞ் செய்தான். இதற்காற்றாத தேவர்கள் இறைவனிடம் முறையிட, இறைவன் விஷ்ணுமூர்த்தியை அவனைக் கொல்லும்படி ஏவினார். விஷ்ணு சத்திய பாமாவுடன் சென்று அவனைக் கொன்றார். இறக்கும்போது அவன் நல்லறிவு பெற்று முன்பு செய்ய வேண்டாதவையென்று காட்டப்பட்ட காரியங்களை மக்கள் தன்னை நினைந்து அன்று செய்ய வேண்டும் என்று வேண்டினான். கண்ணபிரான் அப்படியே அருளினார். அத்தினமே தீபாவளியெனக் கொண்டாடப்படுகின்றது. உட்பொருள்: காமம், கோபம், லோபம் முதலிய ஆறு பகைவனையும் அடக்க ஆன்மா தூய்மையடைந்து இறைபதம் சேரும் என்பதாம்.

கார்த்திகை

விளக்கீடு: இது கார்த்திகை மாதம் பூரணை கூடிவரின் சர்வாலய, விஷ்ணுவாலய தீபமாகவும், அத்துடன் கார்த்திகை நட்சத்திரமும் கூடினால் குமராலய தீபமாகவும் கொள்ளப்படும். அன்றைக்குக் கோயில்கள், வீடுவளவுகள், மடம், தடம், சோலைகள் யாவும் தீபங்களால் அலங்கரிக்கப்படும்.

'விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்நெறிஞானமாகும்' என்றபடி கோயில்களில் விளக்கேற்றுவது சொல்ல முடியாத அளவிற்கு நன்மைகளைத் தருவது. அணைந்து போகும் நிலையில் கோயிலில் எரிந்து கொண்டிருந்த விளக்கின் எண்ணெயைக் கவரப்போன எலியொன்று, எண்ணெயைக் குடிக்கும்போது மூஞ்சி சுடுபட விளக்குத் தூண்டப்பட்டுவிட்டது. தன்னை அறியாமலே விளக்கைத் தூண்டிவிட்ட எலி அடுத்த பிறப்பில் மாவெலிச் சக்கரவர்த்தியாய்ப் பிறந்து திரிலோகத்தையும் ஆண்டது. அக்கதை விரிவஞ்சி விடப்பட்டுள்ளது.

மார்கழி

திருவாதிரை திருவெம்பாவை: மார்கழி மாதம் பூரணையும் திருவாதிரையும் சேர்ந்து வருங்காலமே, திருவாதிரை எனப்படும். திருவாதிரை சிவபெமானது நட்சத்திரம் ஆகையால் இது பிரதானம். இவ்வுற்சவம் சிதம்பரத்தில் மிக விசேடமாகக் கொண்டாடப்படும்.

இதற்கு முன் பத்து நாளும் திருவெம்பாவை ஓதுவர். மார்கழிப் பிள்ளையார் என விநாயகரை வைத்துப் பூக்கள் சூடி மகிழ்வர். சிலர் ஒன்பது நாளும் ஒருவேளை உண்டு விரதமிருப்பர். மிகப் பழைய காலம் தொடக்கம் மார்கழி நீராடல் கைக்கொள்ளப்பட்டு வருகின்றதென்பதைச் சங்கநூல்கள் வாயிலாக அறியலாம். கன்னிப் பெண்கள் தங்கள் எதிர்கால வாழ்வைக் குறித்து நோற்கும் நோன்பாகையால் இதைப் பாவை நோன்பெனவும் கூறுவர்.

தை

தைப்பொங்கல் இது தமிழர் விழா, உழவர் விழா என அழைக்கப்படுகின்றது.

மழையின் நன்மையினுல் விதை விதைத்துப் பயிராக்கி அறுவடை செய்து வீட்டிற்குத் தானியம் கொண்டு வந்து குவிக்கின்றுன் உழவன். தானியக் குவியலைக் கண்டதும் அவன் உளம் பூரித்து இதற்கெல்லாம் காரணமான சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தக் கருதி தைமாதம் முதல் நாள் அதிகாலையில் பொங்கலிட்டுச் சூரிய பகவானுக்குப் படைக்கின்றுன். ஊர்களுக்கு ஏற்றபடி பொங்கல் முறைகள் நடைபெறும்.

மாசி

சிவராத்திரி: மிக விசேடமான விரதங்களில் ஒன்று சிவபிரானை நோக்கி விரதமிருந்து இரவு முழுவதும் விழித்திருந்து பூசை புரியும் தினமாகும். மாசி மாதம் கிருஷ்ண பக்கச் சதுர்த்தசி கூடிய தினமாகும். கதை வரலாறு: பிரமா, விஷ்ணு ஆகியோர் சோதிப்பிழம்பாய் நின்ற இறைவனின் அடிமுடி தேடிய தினம் என்பதே பெரும்பாலாராலும் நம்பப்பட்டு வருகிறது. பிறகதைகள் சொல்வாரும் உளர்.

பங்குனி

பங்குனி உத்தரம் ஆனி உத்தரம் போல இதுவும் முக்கிய தினமே. இம்மாத உத்திரத்திலேயே பழனியின் உற்சவம் நடைபெறும். அம்மையப்பரைத் திருமணக் கோலமாய் வழிபடும் நாளும் விரதமாம்.

இ. சிவானந்தநாயகம்
(ஆங்கிலம் - இறுதியாண்டு)



# "மதங்கள் மண்ணிலே காலூன்ற வேண்டும்"

சமயம் என்பது வாழ்க்கை நெறி. இக பர வாழ்வுக்குச் சமயம் வழிகாட்டிய போதும் சமயவாதிகள் பெரும்பாலும் பர வாழ்வுபற்றியே பேசுகின்றனர். இதனல் இன்றைய விஞ்ஞான யுகத்தில், புதிய தலைமுறையினரிடத்தில் சமயங்களின்மேல் பற்றுதல் அருகி வருதல் கண்கூடு. விஞ்ஞானம் எவ்வுண்மையையும் காரண காரியங்கள் கொண்டு நிறுவி நிற்கின்றது. விஞ்ஞான காரண காரியங்களையும் கடந்த சூனியங்களாக விளங்குபவைகளும், இற்றைவரை இருக்கத்தான் செய்கின்றன. ஆனல் சமயம் காட்டும் வழியில் பின்பற்றப்படும் வாழ்க்கை முறைகளுக்குச் சரியான காரணகாரியங்கள் உண்டு. அவை விஞ்ஞான உண்மைகள் பொதிந்தவையாகவும் விளங்குகின்றன. அவற்றை விஞ்ஞான ரீதியான விளக்கத்தோடு, இளஞ் சந்ததியினர்க்கு அறிமுகஞ் செய்யாது, கண்மூடித்தனமாகப் பின்பற்ற வேண்டுமென எதிர்பார்ப்பதனுற்ருன் சமயங்களுக்குக் குந்தகம் விளைகின்றது.

இதற்கான சிறு உதாரணமொன்றை அவதானிப்போம். சைவசமயிகளாகிய நாம் வெண்ணீறணிவது எமது நித்திய கடமைகளில் ஒன்று, ''சிவ சிவ'' என நினைந்து, அவன் தாள் பணிந்து, அருநீறணியும்போது, தன்னகங்கார முனைப்படங்கிப் புனிதமுறுகிறதென்பது உண்மை. பசுவின் சாணமாகிய கிருமிநாசினியைத் தீயிலிட்டு அதன் பொடியை நெற்றியில் பூசிக்கொள்வதால், உடல் சுத்திகரிக்கப்படுகின்றதென்பது மற்ருெரு உண்மை. உடலின் சுத்தத்திற்கு வெண்ணீறு அத்தியாவசியமானது என்ற விஞ்ஞான விளக்கத்தை ஒதுக்கிவிட்டு பரவாழ்வுக்கு மட்டும் அது வேண்டியது எனக் காரணங் காட்டுவதால் இந்த யுகத்தில் மத நம்பிக்கையை ஊட்டிவிட முடியாது. சமயங்கள், இந்த மண்ணில் காலூன்றித்தான், மறு உலக வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டும். இம்மையை ஒதுக்கித்தள்ளி மறுமையைப்பற்றியே பேசிக் கொண்டிருப்போமானல் சமய நம்பிக்கை பெருகுவதற்கு மாருக அருகவே வழி செய்யும்.

அப்பரடிகள் சரியை வழிநின்ருெழுகி இறைவனடி சேர்ந்த மெய்யடியார். அவர் தம் தேவாரங்களில் சமகாலப் பிரச்சினை பற்றிப் பேசுவதையும், போர்க்கொடி தூக்குவதையும் நாம் காணமுடிகிறது. அப்பர் சுவாமிகளை எதிர்த்துநின்ற சமணர்களையும் அவர்களுக்குப் பக்கபலமாக விளங்கிய பாண்டிய மன்னனையும் நோக்கிச் சிங்கநாதம் செய்கிருர்:

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'' என்று

தாமார்க்கும் குடியல்லாத் தன்மையினனன கோமான் சங்கரனுக்கே மீளா ஆளாய் விளங்குவதாகப் பாடுகிருர். கண் மூடி மௌனியாகிக் கடவுள் பெயரைச் செபிக்காது சிவனடியார்கள் யாருக்கும் அடிமையானவர்களல்ல என்பன திட்ட வட்டமாக நெஞ்சுயர்த்திப் பேசுகிருர். இந்தத் துணிபு, அடிமை குடிமை குடிமைச் சமுதாய அமைப்பின் கீழ் நலிந்து கிடக்கும் ஒவ்வொரு சைவசமயி உள்ளத்திலும்பிறக்க வேண்டுமென, மண்ணுலக மக்கள் மனதில் கொண்டு பொழிந்த அமுத வாக்கல்லவா?

''பொன்னும் மெய்ப்பொருளுந்தரு
வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானை''

என்று, சுந்தரர் ஓரிடத்தில் கூறுகின்ருர். வேண்டிய செல்வத்தையும், மெய்ப்பொருளையுணரும் அறிவையும் கொடுக்கின்ற இறைவனை, - அனுபவிக்கத்தக்க போக பாக்கியங்களையும், வடிவழகினையும் சேர்ப்பிக்கும் இறைவனை மறத்தல் கூடுமோ? பிறிதொரு தேவாரத்தில்,

''இம்மையே தரும் சோறுங் கூறையு
மேத்தலாமிடர்க் கெடலுமாம்''

எனப்பாடி, அங்கு எழுந்தருளியுள்ள சிவ பெருமானுல், இவ்வுலக இன்ப வாழ்க்கைக்கு, வேண்டிய உணவு, உடை, புகழ் என்பவற்றை அடையலாமெனவும், மற்றும் துன்பங்கள் கெட்டொழியும் எனவும், பூவுலக வாழ்வின் முக்கியத்துவத்தையும் தேவைகளையும் வலியுறுத்தி, அவற்றைப் பெறுவதற்காக சிவனை வணங்கவேண்டுமெனக் கூறுகின்றுர்.

அப்பர், சுந்தரர் போலவே, ஞான சம்பந்தரும்,

''மண்ணில்நல் லவண்ணம் வாழலாம்
வைகலும்
எண்ணில்நல் ல கதிக்கு யாதுமோர்
குறைவிலை''

எனப்பாடி இறைவனை வணங்கினுல் இந்த மண்ணில் நல்ல வாழ்க்கை வாழலாம்; நினைத்துப் பார்த்தால் மறுமையிலும் வீடு பேற்றினை அடையலாம் எனச் செப்புகிறுர்.

இந்நாயன்மார்களின் கருத்துக்களின் மூலம் இப்பிறப்பிலேயே, மனிதன் நல் வாழ்வைப் பெறவும், நெறியுள்ள வாழ்வு வாழவும் சமயம் அத்தியாவசியமென்பது, தெளிவுபடுத்தப்படுகிறது. இத்தெளிவினை இளஞ் சந்ததியினரிடம் ஊட்ட வேண்டியதே சமயத்தொண்டு புரிவோரது இன்றைய தலையாய கடன். பூவுலக வாழ்வுக்காக தழுவப்பெறும் சமயம் காலில் நெய் போல நின்று, மறுவாழ்விலும் நன்மை பயக்கும்: ''கடவுளைப் பற்றியும் மறுமை வாழ்வைப் பற்றியும் பேசுவதற்கும் சிந்திப்பதற்குந்தான் சமயம்'' என்ற கருத்து இந்த லோகாயித காலத்துக்கு ஏற்றதல்ல. சமய ஒழுக்கமும் மனிதனை மண்ணில் நல்ல வண்ணம் வாழ வைக்குமென்பது திண்ணம்.

க. நவரத்தினம்
(விஞ்ஞானம் - 2-ம் வருடம்)



# நால்வர் காட்டிய நன்னெறி

பேச்சு வழக்கில் ''யாராவது நாலு பேர் சொன்னபடி நட'' என்னும் வார்த்தை இடம் பெற்றுவிட்டது. இந்த நால்வர் யார் என்பது ஒரு கேள்வி. ஊரிலுள்ள யாராவது நால்வராக இருக்கலாமா? என்றால் அது பொருந்தாது. ஏனெனில், அவரவர் தாம் தாம் கொண்ட கொள்கையே சரியெனக் காட்டி நல்வழி கேட்டவர்க்குப் பொல்லா வழியும் கிட்டக்கூடும். ஆகவே இந்நால்வரை யாரெனத் தெரிந்துகொள்வது சைவசமயிகளாகிய எங்களுக்கு மிக அவசியமானதொன்றாகும்.

இவ்வுலகம் அழிவுபட்டு மீண்டும் சிருஷ்டிக்கப்பட்டபோது நால்வர் ரிஷிகள் தோன்றினர். அவர்களைச் சனகாதி நால்வர் என்பர். இவர்கள் பெயர்கள் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்பவை. இவர்கள் வேதங்களையும் சிவாகமங்களையும் நன்கு கற்றுத் தெளிந்தனர். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு மார்க்கங்களில் முதல் மூன்றிலும் அநுபூதி பெற்று நாலாவதாகிய ஞானபாதம் கைகூடப்பெறாமையால் இறைவனிடம் விண்ணப்பித்துப் பெருந் தவம் புரிந்தனர்.

அத்தவத்தின் பயனாக இறைவன் தக்ஷிணாமூர்த்தி வடிவு தாங்கிக் கல்லால விருக்ஷ நீழலில் அமர்ந்த சிவன் முத்திரை காட்டிப் பதுமாசனமாக அமர்ந்து மௌன சொரூபத்திலமர்ந்தார். சனகாதி நால்வரும் அவ்வாறு அமர்ந்தனர். யுகம் பல கழிந்தன. சொல்லாமற் சொல்லி, நினையாமல் நினைந்து அந்நால்வருக்கும் ஞானபாதம் இதுவென இருந்து காட்டி உணர்த்தவே அந்நால்வரும் உலகத்தவர்க்குத் தவமே மேலான நெறி எனக் காட்டி இறைவனை அடைவதே வாழ்வின் நோக்கமென உணர்த்தி முத்தி பெற்றனர்.

அதன்பின் இறைவனிடத்தில் உபதேசம் பெற்றவர் திருநந்தி தேவர். அத்திருக்கைலாசபதியாகிய இறைவனாக தோற்றுவிக்கப்பட்ட ஞானபரம்பரையைத் திருக்கயிலாச பரம்பரை என்பர். அப்பரம்பரையிலே நால்வர் தோன்றினர். திருநந்திதேவர், சனற்குமார முனிவர். சத்தியஞான தரிசினிகள், பரஞ்சோதி முனிவர் என்ற நால்வரும் அந்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். அவர்களை அகச்சந்தானாசாரியர்கள் என்பர்.

அவர்களில் முத்தியெய்திப் பூவுலகு வாழ நினைந்து பரஞ்சோதி முனிவர் திருக்கைலாசம் நின்று நீங்கித் தென்றமிழ் நாட்டுக்கு வந்தபோது அச்சுதக்களப்பாளர் தவத்தாற் பெற்றெடுத்து 'சுவேதனப் பெருமாள்' என்ற பிள்ளைத் திருநாமம் பூண்ட மெய்கண்ட தேவரைச் சந்தித்து அதிதீவிர பக்குவ நிலையைக் கண்டு ஞானத்தை உணர்த்திச் சென்றார். அவரிடம் ஞானம் பெற்ற மெய்கண்ட தேவர் தனது சீடராகத் தந்தைக்குக் குருவாகவிருந்த அருணந்தி சிவாசாரியர்க்கு ஞான உபதேசம் செய்து சிவஞானபோதம் என்ற நூலை அருளிச் செய்தார்.

சிவஞானபோதம் பன்னிரு சூத்திரங்கள் கொண்ட சுருங்கிய நூலாதல் கண்டு அதன் விரிவாகச் 'சிவஞான சித்தியார்' என்ற நூலை அருணந்தி சிவாச்சாரியார் அருளிச் செய்தார். அவருடைய ஞான சாஸ்திரத்தை அருணந்திசிவத்திடம் உபதேசம் பெற்றவர் மறைஞானசம்பந்தர். அவர் தனது சீடராகக் கொற்றவன் குடியில் வாழ்ந்தவரும் தில்லை மூவாயிரவருள் ஒருவருமாகிய உமாபதி சிவாச்சாரியாருக்கு ஞான உபதேசம் செய்தருளினார். உமாபதி சிவாச்சாரியாரால் சித்தாந்த நூல்கள் எட்டு அருளிச் செய்யப்பட்டவை. திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடைவெண்பா, கொடிக்கவி, சங்கற்ப நிராகரணம், நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சிவப்பிரகாசம்

ஆகிய நூல்களே அவை; அவை 'சித்தாந்த அஷ்டகம்' என வழங்கி வருகின்றன;

குறித்த மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரீயார் ஆகிய நால்வரையும் மறச்சந்தானுசாரியார் என்பர்.

இவர்களோடு திருவியலூர் உய்யவந்த தேவநாயனுர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனுர், திருவதிகை மனவாசகர் கடந்தார் ஆகிய நாயன்மார்களும் இயற்றிய நூல்களும் சேர்ந்த சைவசித்தாந்த சாஸ்திரம் பதின்நான்கும் சைவத்தின் பிரமாண நூல்களாகத் தமிழில் விளங்குகின்றன. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியர், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், உண்மை விளக்கம், இருபாவிருபது, சிவப்பிரகாசம், திருவருட்பயன், விஞவெண்பா, போற்றிப்பஃறெடை வெண்பா கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறிவிளக்கம், சங்கற்பநிராகணம் என்பன அவை.

மேலும் சைவசமய நெறி நான்குக்கும் இலக்ஷிய புருஷராக வாழ்ந்த அப்பர் சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருஞானசம்பந்த சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய நால்வரும் சைவசமயத்தை நிலைப்பித்த பெருமைக்கு உரியவர்கள்; அவர்கள் காட்டிய நெறியே சைவ நெறி; தேவாரத் திருமுறைகளை முதல் வோரும் அருளிச் செய்தனர். மணிவாசகனர் திருவாசகம், திருக்கோவை நூல்களை அருளிச் செய்தார். இவர்கள் இயற்றிய தேவார திருவாசகங்கள் தமிழ் வேதங்களாக அமைந்தவை. அன்றியும் வேதத்தில் உணர்த்தப்படும் ஸ்ரீ பஞ்சாட்சரமே இந்நூல்களினுலும் உணர்த்தப்படும் மெய்ப் பொருளாகும். இதனுலே தேவார திருவாசகங்களை வேதசாரம் என்பர். இந் நூல்களை ஓதியுணர்வதே மானிடப் பிறவி எடுத்ததன் பயனுகும்.

இந்நால்வரும் கூறிய நெறியே "நால்வர் காட்டிய நன்னெறி" ஆகும். அந்நெறியே சென்றடைந்தவர்க்கெல்லாம் "நன்னெறியாவது நமச்சிவாயவே" என்கின்றது பஞ்சாட்சரப் பதிகம் – அத்துடன் "முன்னெறியாகிய முதல்வன் முக்கண்ணன் தன்னெறியே சரணுதல் திண்ணமே" என உறுதியுடையும் கூறுகின்றது. ஆகவே உலகத்தவர்களே! நீங்கள் துஞ்சலும் துஞ்சலில்லாத போழ்திலும் நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தோறும் என்று ஞானசம்பந்தப் பெருந்தகை ஆணையிடுகின்ருர்.

வாழ்க நால்வர் நெறி
வளர்க மெய்ச் சைவநெறி.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்'

த. தேவராசா
(ஆங்கிலம் 2-ம் வருடம்)



# Let there be poets

**David Donaldson**
LECTURER

—✻—

Let there be poets
But let the waters of their minds
Stream forth as casually as if
Ignorant of the ground they're nourishing.

Let there be poetry
Only no-one must know:
Let it come quitly, gently
Hooded in a black night
Treading on dark damp soil.

The poet will be asleep
The lights turned black
When it appears
And it will tread sofly
From door to door......

And even so all will be spoilt
For though the poem treads
Softly, hooded in the night
And though the waters of my mind stream forth
While I and everyone are sleeping,

Even so you awake me with your knocking,
Call me to light a lamp
And let you in.

Why will you walk past my house
And leave the waters of my mind
To stream forth as casually as if
Ignorant of the ground they're nourishing?

## நன்றி நவிலல்

'சைவ விளக்கு' ஒளிமிகுந்து பிரகாசிக்க ஆசியுரை வழங்கிய எங்கள் கலாசாலை அதிபர் அவர்கட்கும், மன்ற வளர்ச்சியில் அக்கறைகொண்டு அயராது உழைத்தும், ஆலோசனைகள் அளித்தும், ஆக்கப் பணிகளுக்கு ஊக்கம் கொடுத்து வரும் எங்கள் மன்றப் போஷகர் திரு. க. சச்சிதானந்தம் அவர் கட்கும், மலர் சிறப்புற கட்டுரைகள், கவிதைகள் வழங்கிய பெரியோர்கள், ஆசிரிய மாணவர்கள் ஆதியோர்க்கும், விளம்பரங்களைச் சேகரிக்க உதவிய ஆசிரிய மாணவர்கள் த. இந்திரராசா, ச. சர்வேஸ்வரன், க. சிவராமலிங்கம் என்பவர்கட்கும், கலைவாணியின் படமொன்று அழகாக வரைந்துதவிய திரு. நா. வல்லிபுரம் அவர்களுக்கும், விடயங்களைத் தட்டெழுத்தில் பொறித்துக்கொடுத்த செல்வி வி.முருகுப்பிள்ளை, செல்வி ப. நாகரெத்தினம் ஆகியோர்க்கும் மன்ற அங்கத்தவர்கட்கும் புகைப்படங்கள் எடுத்த குகன் ஸ்ருடியோவைச் சேர்ந்தவர்க்கும், சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த ஸ்ரீ பார்வதி அச்சகத்தார்க்கும் என் மனப்பூர்வமான நன்றி.

(ஆ-ர்)

உங்களுக்குத் தேவையான:-

★ உணவுப்பொருட்கள்
★ சாய்ப்புச் சாமான்கள்
★ குளிர் பானங்கள்
★ செருப்பு, சப்பாத்துவகைகள்
★ விவசாய ரசாயனப் பொருட்கள்
★ சகலவிதமான பட்டு - நூல் ஜவுளித் தினுசுகள்
★ "ஹம்பர்" துவிச்சக்கரம் மற்றும் உதிரிபாகங்கள்
★ மின்சார உபகரணங்கள்
★ "பிறதர்" தையல் மெசின்
★ "கிளாசியோ" குளிர்சாதனப் பெட்டிகள்

மற்றும் பலவும் மலிவாகப் பெற்றுக்கொள்ள எம்மிடம் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

**யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்**

150-420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 17, பிரதான வீதி, யாழ்ப்பாணம்,

போன்: 444 தந்தி: 'இரத்தினம்ஸ்'



நவ நாகரீக நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

**ஹரன் ஜுவலர்ஸ்**

50, கன்னாதிட்டி, — யாழ்ப்பாணம்.

# கோல் ஸ்ரோர்ஸ்

பிரபல உற்பத்தியாளரின் தரமான காலணிகள்

எமது ஸ்தாபனத்தில்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

● டி. ஐ. ● டி. எஸ். ஐ. ● றியேபைற்
● எலஸ்ரோ ● பாட்டா

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

# கோல் ஸ்ரோர்ஸ்

45, கஸ்தூரியார் வீதி, ... யாழ்ப்பாணம்.

தலைமைக் காரியாலயம்:
103, பிரதான வீதி,
காலி.

10, பிரதான வீதி,
காலி.

நங்கையர் விரும்பும் நவநாகரிக நகைகளுக்கும்

**மின்னும் வைரங்களுக்கும்**

சிறந்த ஸ்தாபனம்

# கே. என். எம். மீருன் சாஹிப்

**தங்கப்பவுண் நகை மாளிகை**

கன்னுதிட்டி, — — யாழ்ப்பாணம்.

( போன்: 585 )

# ஸ்ரீ முருகன் லோன்றி

அச்சுவேலி.

உரிமையாளர்: த. கந்தசாமி

ஸ்ரீ. குலசேகரசிங்கம்
ஆசிரிய பயிற்சிக் கலாசாலை
பலாலி


தமிழ், ஆங்கிலம், சிங்களம்
ஆகிய மும்மொழிகளில் சிறந்த முறையில்
அச்சிடுவதற்கு

**ஸ்ரீ பார்வதி அச்சகம்**

288, ஆஸ்பத்திரி வீதி, ... யாழ்ப்பாணம்.
போன்: 689


ஸ்ரீ பார்வதி அச்சகம், யாழ்ப்பாணம்.